உ

கற்பகபதி

"அற்புத அருள்புரி கற்பக கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்"

# கற்பகதீபம்



## கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர்
## ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா
## மகா கும்பாபிஷேக மலர்

**04-07-2014**

**Second Consecration Ceremony**


## ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
## SHEE KARPHAHA VINAYAGAR TEMPLE

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX

Tel: 020 8527 3819, Web: katpakapathy.com, Email: katpakapathy@gmail.com

கலை நயமிக்க எண்ணிலடங்கா விதவிதமான வடிவங்கள்

மங்கையரை மயக்கவைக்கும் வடிவங்கள்.

குறைந்த சேதாரம்! நிறைந்த தரம்!






**லக்சுமி நகை மாளிகை**

**LAKSHMIS JEWELLERS**

276 High Street North, East Ham
London, E12 6SA
Tel: 020 8470 5600

உ
கற்பகபதி

அற்புத அருள்புரி கற்பக கணபதி
பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்



# ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மலர்

# Shree Karpaha Vinayagar Temple Second Consecration Ceremony

04.07.2014

உ
கற்பகபதி
அற்புதஅருள்புரிகற்பககணபதி
பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்



# SRI KARPAHA VINAYAGAR TEMPLE
# ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம்


**2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX**
(Registered Charity No: 1092252 & Sponsor Licence No: MMJ20VRB5)
**Tel: 020 8527 3819 Web: www.karapahapathy.com**



**Board of Trustees:**

**President:**
Mr.M.Gopalakrishnan

**Secretary:**
Dr.C.P.Thiagarajah

**Asst. Secretary:**
Mr.S.Rajeev

**Treasurer:**
Mrs.A.Sakthivel

**Ministers of Religion:**
Sivasri Athithan Uruthiramoorthy Sarma

Sivasri Sarveswara Sarma Balasubramania Iyar

Sivisri Ganeshan Parameswarar

Sivasri Branava Sarma

**Administrator:**
Mr.S. Vijayakumar


## ஆசியுரை

கற்பகபதி கற்பக விநாயகப் பெருமான் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் அம்மலர் அகிலமெங்கும் அருள் மணம் பரப்பவும் விக்னம் தீர்க்கும் கற்பக கணபதி கழலடி தொழுது வாழ்த்துகிறோம்

ஆலய வழிபாடுகள் மற்றும் விரத நாட்கள் விழாக்கள் என்பவற்றை விட கற்பகபதி கற்பக விநாயகர் ஆலயம் தாயகத்தில் ஆதரவு அற்ற அன்பர்களுக்கு உதவி செய்வதில் ஈடுபாடு காட்டி வருகிறது.

ஆலயங்களும் வழிபாடுகளும் அதிகம் சூழ்ந்துள்ள லண்டன் கிழக்குப் பகுதியில் இது அமைந்துள்ளது. தொடர்ச்சியாக இருக்கும் ஏழு கோவில்களில் நடு நாயகமாக வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பக விநாயகர் அருளாட்சி செய்கிறார். கிழக்கே லண்டன் முருகன் ஆலயம், மகாலட்சுமி ஆலயம் செல்வவிநாயகர் கோவில் மேற்கே மேருபுரம் பத்திர காளி கோவில், நாகபூசணி அம்மன் கோவில் உயர் வாசற் குன்று முருகன் கோவில்.போன்ற பெரும் சந்நிதிகளுக்கு மத்தியில் இத்தலம் உள்ளது.

பல்வேறுவித விழாக்களும் விரத அனுஷ்டானங்களும் பல அடியார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக விநாயகர் கதைப் பெருநாட்களில் காலை கணபதி ஹோமமும் மாலை· சங்காபிஷேகம் இலட்சார்ச்சனை என்பனவும் நடைபெற்று வருகிறது. அதேபோல் வசந்த நவராத்திரி காலத்தில் அம்மனுக்கு அலங்காரத் திருவிழாவும் இரவு சந்திர ரத உற்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது தைப்பூசம் அபிராமப் பட்டர் விழா, மாசி மகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணி சதுர்த்தி, நவராத்திரி, கேதாரகௌரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, ஐயப்பன் வழிபாடு, திருவெம்பாவை, வைகுண்ட ஏகாதசி, ஆஞ்சநேயர் ஜெயந்தி போன்ற அனைத்து வழிபாட்டு நாட்களிலும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் உண்டு.

அத்துடன் மாதம் தோறும் வரும் வளர்பிறை தேய்பிறை சதுர்த்தி, வளர்பிறை தேய்பிறை பிரதோஷம் மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை காயத்திரி அம்மன் திருவிழா. இவ்வாறான ஆகம புராண வழிபாடுகள் எமது சமய பாரம்பரிய கலாச்சாரத்தை பேண புலம் பெயர் நாட்டில் பெரிதும் உதவுகிறது. 2013ம் ஆண்டு இலட்ச தீபம் ஏற்றி பிரார்த்தனைகள் நடைபெற்றன. 108தினங்களில் இவ்வழிபாடு சிறப்புற நடைபெற்றது.

சைவ சமய வளர்ச்சியின் ஒரு பகுதியாக ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் இளம் சிறார்கள் பண்ணிசை பயின்று வருகிறார்கள். எமது சமய தெய்வ அருட்பாக்கள் இதன் மூலம் ஒவ்வொரு சைவ சமய அன்பர்கள் வீட்டிலும் பரவுகிறது.



# SRI KARPAHA VINAYAGAR TEMPLE
## ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம்

**2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX**
(Registered Charity No: 1092252 & Sponsor Licence No: MMJ20VRB5)
**Tel: 020 8527 3819 Web: www.karapahapathy.com**

**Board of Trustees:**

**President:**
Mr.M.Gopalakrishnan

**Secretary:**
Dr.C.P.Thiagarajah

**Asst. Secretary:**
Mr.S.Rajeev

**Treasurer:**
Mrs.A.Sakthivel

**Ministers of Religion:**
Sivasri Athithan
Uruthiramoorthy Sarma

Sivasri Sarveswara Sarma
Balasubramania Iyar

Sivisri Ganeshan
Parameswarar

Sivasri Branava Sarma

**Administrator:**
Mr.S. Vijayakumar

அதேபோல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் மூத்தோர்கள் ஒன்றுகூடலில் சந்தித்து மன அமைதி பெறுகிறார்கள்.

எனவே ஆலயம் என்பது தனி வழிபாடு மாத்திரம் இல்லாமல் ஆதரவு அற்றவர்களுக்கு உதவி புரிதல், சிறுவர்களை சமய வழிபாட்டில் ஈடுபடுத்துதல், மூத்தோர்கள் ஆறுதல் அடைதல் போன்ற பல்வேறு நிலைகளையும் உள்ளடக்கி உள்ளது என்பதைக் காட்டும் ஆலயமாக கற்பகபதி ஆலயமும் விளங்குகின்ற பெருமைக்குரியது. மற்றும் இசை நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், சொற்பொழிவுகள் போன்ற சமயப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் அதிகமாக நடைபெறுகிறது.

இவ்வாலயத்தின் அருள் வளர்ச்சியின் பெரும் நிகழ்வாக அருகாமையில் உள்ள வீடு வாங்ககப்பட்டுள்ளமையும் ஆலயம் புதுப்பொலிவுடன் மீண்டும் காட்சிதரும் நிலையும் எடுத்துக்காட்டாக உள்ளது. பல அன்பர்கள் கற்பக கணபதியின் அற்புத சக்தியை பெற்று பல நன்மைகளை அடைந்துள்ளனர்.

தினமும் ஐந்து காலப்பூசைகளுடன், மங்கள இசை நிகழ்வுகளுடனும் இவ்வாலயத்தில் அருள் கோலத்துடன் கற்பக விநாயகப்பெருமான் அனுக்கிரகம் செய்கிறார்.

அடியார்கள் கற்பக விநாயகரை நினைத்து எக்காரியம் செய்தாலும் அது தங்கு தடையின்றி நிறைவேறும்.

எல்லா நலன்களையும் நல்கும் கற்பக விநாயகன் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறோம்.

**சிவஸ்ரீ. பா. வசந்த சிவாச்சாரியார்**

**சிவஸ்ரீ. உ. ஆதித்த சிவாச்சாரியார்**

**சிவஸ்ரீ. ப. கணேச சிவாச்சாரியார்**

**பிரும்மஸ்ரீ. சோ. பிரணவசர்மா.**

**BUCKINGHAM PALACE**

1st May, 2014

Dear Mr Gopalakrishnan,

The Queen has asked me to thank you for your letter of 22nd April and to say that Her Majesty and The Duke of Edinburgh were grateful for your kind invitation to attend the forthcoming Consecration Ceremony of KumbhaAbhisekam on 4th July at Sreekarpagavinayagar Temple, Walthamstow.

However, as The Queen and Prince Philip's programmes are arranged many months in advance and have already been finalised for that time, I am afraid it will not be possible for Her Majesty and His Royal Highness to accept. I am sorry to send you a disappointing reply.

Nevertheless, The Queen has asked me to convey her warm good wishes to you and everyone involved in this special and sacred Hindu ceremony.

Yours sincerely,

Miss Jennie Vine
Deputy Correspondence Coordinator

Mr M Gopalakrishnan.

10 DOWNING STREET

LONDON SW1A 2AA

www.gov.uk/Number10

From The Direct Communications Unit

7 May 2014

Dear Mr Gopalakrishnan

The Prime Minister has asked me to thank you and Dr Thiagarajah for your recent letter inviting him to the second Consecration ceremony of Shree Karpaga Vinayagar Temple.

The Prime Minister really appreciates you taking the time and trouble to invite him to your event. However, owing to the enormous pressures on his diary, he will sadly be unable to attend. It is with much regret that I must therefore send his apologies.

Yours sincerely

Correspondence Officer

Mr M Gopalakrishnan

# MAYOR OF LONDON

**Sgd. Dr C P Thiagarajah**
Honorary Secretary
**Mr M Gopalakrishnan**
Honorary Chair
Sreekarpagavinay Temple
Bedford Road
London E17 4PX

**Our ref:** MGLA240414-4571

**Date:** 05 JUN 2014

Dear Dr Thiagarajah and Mr Gopalakrishnan

Thank you for your letter kindly inviting me to attend the Second Consecration Ceremony of the Shree Karpaga Vinayagar Temple on 4 July.

I appreciate the invitation, but unfortunately it is not possible for me to accept on this occasion as my diary is already full with other Mayoral commitments and engagements on that day.

However, please find below a message of support:

"I am delighted to send my greetings to all of you gathered at the Shree Karpaga Vinayagar Temple for its second consecration ceremony. You are doing great things for the Hindu community and the wider Waltham Forest population and I wish you all the best with your future endeavours."

Yours sincerely

**Boris Johnson**
Mayor of London





**கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிசேக பாலஸ்தான நிகழ்வின் போது...(2014)**

உ



**VIKAS RATNA SIVASRI. K. PITCHAI GURUKKAL**
*Chief Priest, Sri Karpaga Vinayakar Temple,*
*Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam*
*Founder, Sivaneri Kazhakam*
*Secretary, Karpaga Vinayakar School,*
*Pillayarpatti – 630207 Sivaganga District, Tamilnadu, South India.*

12.06.2014

உ

# வாழ்த்துரை

இயற்கை வளங்கள் பல நிறைந்துள்ள லண்டன் மாநகரில் வால்தோம்ஸோ பகுதியில் திருக்கோயில் கொண்டு வேண்டுவோர்க்கு வேண்டுவன தந்து அருள்புரிந்து விளங்குகிறார் ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமான்.

இத்திருக்கோயிலில் மஹாகும்பாபிஷேகப்பணி உள்பட பலநிகழ்ச்சிளில் கலந்துகொண்டு பணி செய்தது பெரும்பேறாகும்.

தற்பொழுது திருப்பணிகள் நிறைவுபெற்று மஹாகும்பாபிஷேகம் காணவிருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். இது தவிர பல சமூகசேவைகளை செய்துவதும் பாராட்டுக்குரியது.

மஹாகும்பாபிஷேகம் சிறப்புடன் நிகழவும், மதிப்பிற்குரிய திரு.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட திருக்கோயில் நிர்வாகத்தினரும், பக்தப்பெருமக்களும் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

K. Pitchai Gurukkal

SIVANERI KAZHAKAM
PILLAYARPATTI 630207
SOUTH INDIA

K.பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி.

Ph: 0091 (0)4577-264275. H/P: 00919443362320 / 9842462320
Website: www.pitchaianna.com / e-mail: pitchaianna@gmail.com

Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA TEMPLE TRUST**

ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067

**HIGHGATEHILL MURUGAN TEMPLE**

200A, Archway road, London N6 5BA Tel:020 8348 9835 Fax: 020 8482 6508

Email: admin@highgatehillmurugan.org Website highgatehillmurugan.org



**Board of Trustees**

**Chairman:**
Mr. S.M.Srikantha

**Secretary:**
Mr. K. Nagarajah

**Treasurer:**
Mr. A. Vairavamoorthy

Mr. C.Canagasundaram
Dr. V.P.Narayana Rao
Mr. K.Nithyananthan
Mr. M.Perinpanathan

**Bankers:**

Nat West Bank plc
Barclays Bank plc
State Bank of India

**Solicitors**
M/S Wimal & Co


ஓம்

பிள்ளையார் துணை

## ஸ்ரீ கற்பக விநாயகர் மஹாகும்பாபிஷேகம்

**Mr. S.M.Srikantha**

திருச்சிற்றம்பலம்

'ஓம்' கார வடிவாக அமர்ந்து உலகமெல்லாம் உய்ய அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான் கிழக்கு இலண்டனில் வோதம்ஸ்ரோ பதியில் கற்பக கணபதியாக அமர்ந்து அருள்பாலிக்கும் ஆலயத்தை புணருத்தாரணம் செய்து ஆனித் திங்கள் சிவனுக்கு உகந்த உத்தர நட்சத்திர நன்நாளில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதை எண்ணி, எம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் என்ற பிரணவ உருவமாக திருக்காட்சி அளிக்கும் விநாயகப் பெருமான் அம் மந்திரத்தின் உட்பொருளாவார். 'பிரணவம்' என்பது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது. அதே போல் எம்பெருமான் விநாயகனும் சகல தத்துவங்களையும் தன்னுள் அடக்கியுள்ளார். ஓங்கார ரூபனாகிய, எல்லா விக்கினங்களை போக்கும் கணபதியை வழிபட்டு எக்காரியங்களையும் ஆரம்பித்தால், காரியங்கள் நன்றே கைகூடும் என்பது அருளாளர்களின் அனுபவபூர்மான வாக்காகும்.

இப்படிப் பலவாறான பெருமையும் தனக்கே உரியவராகிய விநாயகப்பெருமான் மயக்கத்தை நீக்கும் வகையில் நல்ல மெய்யறிவைப் புகட்டுகின்ற வேதங்களின் உட்பொருளாக இருப்பவன் என்று புகழப்படுவராவார். பூமியில் பிறவி எடுத்தவர்கள் மனதில் இடம் பெற்றிருப்பதாகிய "ஆணவம்" என்ற இருளை நீக்கி அவர்களது மனதில் எழுகின்ற துன்பத்தைத் துடைத்து இன்பத்தை தருவதற்கு ஏற்புடைய அருளுருவத்தை எடுத்துக்கொண்டு திருவவதாரம் செய்தருளினார் என்று கந்தபுராணத்தில் கச்சியப்பசிவச்சாரியார் அருளியுள்ளார்.

> 'மருளறப் புகலுநான் மறைகளின் நிகழுமெய்ப்
> பொருளெனப் படுமவன் புவனமுற் றவர்கடம்
> இருளறுத் தவர்மனத் திடர்தவிர்த் தருளவோர்
> அருளுருத் தனையெடுத் தவதரித் துளனவனின்"

மனதை ஒருவழிப்படுத்தி வழிபடும் அன்பர்கள் நினைத்தவை அனைத்துத் நினைத்தவுடனே வாரியருளும் பெருமை வாய்ந்தவர் பிள்ளையார்.

அதனாலன்றோ இந்து மதத்தாரும், சமணரும், பௌத்தரும் போற்றி வணங்கும் விநாயகப்பெருமான் வோதம்ஸ்ரோ பதியில் கற்பக விநாயராக எழுந்தருளச் செய்த ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடை பெற இருப்பதை எண்ணி, உயர்வாசற்குன்று ஸ்ரீமுருகன் அறக்கட்டளையினர் பெருமகிழ்ச்சிடைகின்றனர். தங்கள் முயற்சி இனிதே தடைகள் இல்லாமல் நடைபெற நாமும் எல்லாம் வல்ல விநாயகன் தாள் பணிகிறோம்..

உயர்வாசற்குன்று ஸ்ரீமுருகன் ஆலயம்

om muruga

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES**

Mr. VE. Palaniappan
Mr. G. Ramadass
Mrs. L. Sivajoti
Mr. R.C.A. Anpananthar

**PRESIDENT**
Mr.S.Sampathkumar

**VICE PRESIDENTS**
Mrs.A.Thambyrajah
Mr.N.Ravichandran

**SECRETARY**
Mr.P.Dakshinamoorthy

**ASST. SECRETARY**
Mr.R.Panneerselvam

**TREASURER**
Mrs.P.Raguvaran

**ASST.TREASURER**
Mr.G.Sathiamoorthy

**EXECUTIVE COMMITTEE**
Mr.S.Narashiman
Mrs.S.Krishnasamy
Mr.I.Muthu
Mrs.K.Kandasamy
Mrs.R.Ramachandran
Mr.M.Thenappan
Mr.R.Renganathan
Mr.S.Sundararaju
Mrs.S.Sekaran
Mr.M.Sivam
Mr.P.Uthayakumar
Mr.R.Sukumaran
Mr.V.Chettiar
Mr.Ravi Ramasamy

திரு மு கோபாலகிருஷ்ணன் 12.06.2014
தலைவர்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
2-4 பெட்போர்டு சாலை
வால்த்தம்ஸ்டோவ்
இலண்டன் ஈ17 4பிஎக்ஸ்

தலைவர் திரு மு கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு,


உலகத்தின் அநாதியான சமயமான இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் காணாபத்யமும் ஒன்று. சிவ வழி முதற்தோன்றலாக விளங்கும் விநாயகப் பெருமானின் பெருமைகளை போற்றி வணங்கி வழிபடுவது இதன் பெரு நோக்கமாகும். இந்து சமய வழிபாட்டிலே விநாயகப் பெருமானுக்கே முதல் வழிபாடு நடத்தப் பெறுகிறது. விக்னங்களையும் வினைகளையும் போக்கி விஜயத்தை தரக்கூடிய விநாயகப் பெருமானுக்கு உலகெங்கும் ஆலயங்கள் உள்ளன.

இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் வால்த்தம்ஸ்டோவ் நகரத்தில் வழிபடும் பக்தர்களுக்கு வரங்களை வாரி வழங்கும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 04.07.2014 வெள்ளிக்கிழமை ஆனி உத்திரம் நன்னாளில் நடைபெற இருப்பதறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆன்மீக எழுச்சிக்காக ஆலயம் அமைத்து சிறப்பாக நடத்தி வரும் தலைவர் திரு மு கோபாலகிருஷ்ணன மற்றும் நிர்வாக குழுவினரின் பெரு முயற்சியினால் நடத்தப்பெறும் மஹா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடந்தேறி பக்தர்கள் அருள் பெற வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

சீனிசம்பத்குமார்
தலைவர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகசபை சார்பாக




## விம்பிள்டன் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஶ்ரீ நா. விக்னேஸ்வரக் குருக்கள் அவர்களின்

## ஆசியுரை

இறைவன் தந்தது இம்மனிதப் பிறவி முற்பிறப்பில் எய்திய நற்செயலின் வாயிலாக இப்பிறவி எமக்கு வாய்த்தது. நாம் இம்மண்ணில் வாழ்வதற்கு ஏதுவாக அனைத்து வசதிகளையும் தந்து எம்மை இரட்சிப்பவன் இறைவனாகிய பரம கருணையாளன் சிவபிரான் ஆவர். இப்பிறவி எடுத்த மாந்தர்கள் அவரை பாடிப் பரவி முக்திப்பேரின்பம் பெற அருளாளர்கள், சமய குரவர்கள், மகான்கள், எல்லோரும் இறையருளால் தோன்றி அருட்பாடல்களையும், திருமுறைகளையும் சமய போதனையையும் அத னால் பெறக்கூடிய சித்திகளையும் அறிவித்திருக்கிறார்கள். பாமரர் முதல் அறிவு சார்ந்தவர் வரை அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய விதமாக அதை முன்னோர்கள் அமைத்து தந்திருக்கிறார்கள். நாம் அனுப விக்கும் ஆனந்தம் என்பது நிலையற்றது, இளமையும் நிலையற்றது. அப்படியிருந்தும் நிலையில்லா ஆனந்தத்தில் எவ்வளவு உவமை கொள்கிறோம். இந்நிலையுணர்ந்த திருமூல நாயனரும்

“கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கண்டும் மூத்தெருதாய்ச் சில நாளில்
விழக்கண்டும் தேறார் வியனுலகோரே” என்கிறார்

அதாவது - காலையில் கிழக்கு வானில் பிரகாசமாக உதயமாகிற சூரியபகவான் மாலையில் மேற்கே மறைவதைக் கண்டும் இளம் பசுக்கன்று குறுகிய காலத்திலேயே வளர்ந்து முதுமை அடைந்து மாழுவதை கண்டும், இளமை நிலையாமையை உடல் நிலையாமையை அறியமாட்டாமல் இருக்கும் மனிதர்களை

எண்ணி பரிதவிக்கிறார் திருமூலர். இந்நிலையுணர்ந்தால் உண்மையான நித்தியமான ஆனந்தம் கைகூடும். அதை நித்யானந்தம் என்று அறியலாம்.

ஆக இப்பிறவியில் எவ்வளவு விரைவாக நாம் ஆன்மீக விடயங்களை அறிகிறோமோ அந்தளவு நன்மை பயக்கும்.

இந்நிலையில் எமது இன்றைய சூழலில் புலம்பெயர் நாட்டில் அடுத்த தலைமுறை உருவாகியுள்ள நிலையில் நாமும் அவர்களும் ஆன்மீக விடயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடிய ஸ்தலமாக ஆலயங்களைக் காண்கிறோம். ஆலய வழிபாடு என்பது தனியே அர்ச்சனை, பூஜை, அபிடேகம், என்று முடியக்கூடிய நிகழ்வுகள் அல்ல. எவ்வளவோ கிரியைகள், தத்துவங்கள் முறைகள் வரிசைகள் ஆகம விதிகள் என்பன அங்கே நிகழ்கின்றன. வருடமொருமுறை நடைபெறும் மகா உற்சவம் 12 வருடமொருமுறை நிகழும் கும்பாபிஷேகம் என்பனவற்றை முக்கிய நிகழ்வுகளாக கொள்ளலாம். இதில் மகாகும்பாபிஷேகம் என்பது மிகுந்து பிரயத்தனத்தோடும் பிரயாசையோடும் நடாத்தப்படுவதைக் காண்கிறேன்.

பொதுவாக பேரின்பம் தருகின்ற வழியை அடைய பல மார்க்கங்கள் உண்டு. காடு செல்லலாம். தவம் இயற்றலாம். தியானம் செய்யலாம். துறவறம் பூணலாம். எனினும் எமக்கு இசைவான, செய்யக்கூடிய வழிபாட்டு இடமாக, ஆலயம் அமைகிறது. இறை சன்னதியில் அமர்ந்திருக்க மனசு அமைதி கொள்ளுகிறது. சப்தமான வாழ்வை விட்டு அமைதியைத் தேடி இயற்கையோடு இணைந்து காட்டில் மகான்கள் ரிஷிகள் தவம் மேற்கொள்கிறார்கள். இதில் இயற்கை என்றால் அதில் இணைந்திருக்கின்ற விடயங்கள். நீர் நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்பனவாகும். இந்த ஐந்து பூதங்களும் ஆலய வழிபாட்டிலும் கிரியை களிலும் கலந்திருக்கிறது. ஆகவே அங்கும் சரி ஆண்டவன் சன்னதியிலும் சரி மனது அமைதி பெற்று பேரானந்தம் நித்யானந்தம் பெறுகிறது. இரண்டிற்கும் இறை அருள் சுரக்கும். நாம் வாழ்வின் ஆதாரமாய் விளங்கும் பஞ்ச பூதங்களை இறைவடிவாக வணங்குவது மரபு. பஞ்ச பூதத்தலங்களில் இருந்து இறைவன் அருள் புரிவதைக் காண்கிறோம். அது மட்டுமன்றி நாம் செய்யும் செயல்களை கண்ணால் கண்டு அதற்கு தண்டனையோ அல்லது அருளையோ தந்து ஆத்ம ஈடேற்றத்தைக் கொடுக்கும். நல்வினையோ தீவினையோ, நாடாகிலும் வீடாகிலும் தான் வந்தூட்டும். ஆதலினால் தான் திருமண சடங்குகளிலும் மற்றைய சத்யபிரமாண சடங்குகளிலும் பஞ்சபூத வழிபாடு நடைபெறுகிறது.

இனி ஆலய வழிபாடுகளில் ஹோமம், அபிஷேகம், வேத ஸ்தோத்ர கோஷம், திருமுறைபாடல்கள், தூபதீபாராதனை, திருவுருவ வழிபாடு என்பன இடம் பெறுகிறது. இவை பஞ்சபூத சம்பந்தமான வழிபாடாகும். விசேடமாக கும்பாபிஷேக நிகழ்வுகளில் நவாக்னி பஞ்சாக்னி பூஜைகளில் மேலும் 33 குண்டாக்னி பூஜைகளிலும் பஞ்சபூத வழிபாடு புவனவழிபாடு தத்துவ வழிபாடு என்பனவற்றை காண லாம். இதன் அர்த்தம் இயற்கையே இறைவனாகும். இறைவனே இயற்கையாகும்.

இப்பூமிப்பந்தில் அடிபட்டு புலம்பெயர் வாழ்வில் அன்னிய வெண்மை மண்ணில் கலாசார விதை விதைத்து, விளைத்து, வளர்த்து, அதன் பலனை இன்றைய தலைமுறையினரும் கொண்டாட அருளும் பெரியார்கள் வாழ்வாங்கு வாழ இறைவனை வணங்கி, இன்றைய தலைமுறையினரும் ஆலய விழாக்களைக் கண்டும் தொண்டுகள் ஆற்றியும் சமய ஆகம விடயங்களைத் தெரிந்து கொண்டும் இப்பிறவி சிறக்க வோல்த்தம் ஸ்ரோ கற்பக பதியுறை கற்பக விநாயகன் பொற்பாதம் பணிந்து அவர்தம் குடமுழுக்கு விழா இனிதே நடைபெற விம்பிள்டன் பதியுறை விநாயகப் பெருமான் பாதம் காப்பு.

சுபம்.





**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Elected Comm. Member**
Mr. P Kanapathippillai

**Committee Members**
Mr.J.A.Rajakariar
Mr.S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Premachandra

**Secretary**
Dr. V. Paramanathan

Mr. S. Abayalingam
Mr. R. Kanesharajah
Mr. T. Thevaraajan
Mr.. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
TW3 4AS. Hounslow,
Middlesex

*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* TEL: 0208 - *810 0835*
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.org Email: info@ammanealing.org



**வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்**
**பான்மைதரு செய்யதமிழ்ப் பார்மிசை விளங்க**
**ஞானமத ஐந்கர மூன்றுவிழி நால்வாய்**
**யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்**
**- சேக்கிழார் -**

எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. தனிமனித நிலையிலும் சமூக அசைவியக்கத்திலும் ஆலய வழிபாடும் அதன் வழியான சமூக ஒருமைப்பாடும் பெருந்துணையாகின்றன.

**"திருக்கோயிலில்லாத திருவி லூருந்**
**திருவெண்ணீ றணியாத திருவிலூரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்**
**பாங்கினொடு பலதளிகளில்லா வூரும்**
**விருப்போடு வெண்சங்க மூதாவூரும்**
**விதானமும் வெண்கொடியு மில்லாவூரு**
**மருப்போடு மலர்பறித்திட்டுண்ணாவூரு**
**மவையெல்லா மூரல்ல வடவி காடே"**

என்ற திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்திற்கும்,

**" கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் "**

என்ற ஔவையாரின் வாக்கிற்கு அமைவாகவும் ஆகம வழிபாட்டில் முதன்மையான திருவுருவத்தையும், கிரிகைகளில் முதன்மை இடத்தையும் பெறும் விநாயகருக்கு புலம்பெயர்ந்த எம்மவர்கள் தாம் வாழும் வொல்தம்ஸ்ரோ பகுதியில் 2000ம் ஆண்டில் ஆலயம் அமைத்து 2001 இல் முதலாவது குடமுழுக்கினை சிறப்புற நடாத்தி ஆண்டுதோறும் மகோற்சவம் கண்டு பொலிந்து அருள் தந்த ஐங்கரனுக்கு ஆகம முறைப்படி ஆலய புனருஸ்தானப் பணிகளை நிறைவு செய்து இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெறும் செய்தி அறிந்து அறப்பணியாளர்களாகிய நாம் அகம் மகிழ்கின்றோம்.

ஐங்கரன் அன்னை லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அருள்பாலிக்கவும் கும்பாபிஷேக விழா சிறக்கவும் அதனையொட்டி வெளிவரும் மலர் மணம் பரப்பி சிறந்திட அன்னை பாதம் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "**

இங்ஙனம்,

செ. இராமச்சந்திரன்
தலைவர்
ஈலிங் அம்மன் கோயில்

உ
Love is God
# LONDON SIVAN KOVIL TRUST
## இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Mr. K.V. Kanesamoorthy

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharaj

**Treasurer:**
Mr. T. Arulthas

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service. Sub Committee Chairman**
Mr. N.Sivasubramaniam

**Cultural Activity Sub committee Chairman**
Mr. S.Yogarajah

Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Dr.(Mrs.) V.M.Karunaharan
Mr. S.Sukumar
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S.Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

*"பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலிவலம் உறை இறையே"*

எமது சமய வழிபாட்டில் எவ்வகை வழிபாடாயினும் முதன்மையாக வழிபடப் பெறுபவர் விநாயகப் பெருமானாவார். சகல விக்கினங்களையும் நீக்கி பக்தர்களைக் காப்பாற்றும் ஐங்கரப் பெருமான் தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாதவர் ஆவார். கணபதிப் பெருமானது திருவுருவத்தில் சகல தெய்வங்களும், சகல சக்திகளும் சாந்நித்தியம் பெறுவதாக எமது சமய நூல்கள் கூறுகின்றன. ஷண்மதத்தில் ஒரு மதமாகிய காணாபத்தியம் என்னும் மதம் கணபதியை முழுமுதற் தெய்வமாக போற்றியிருப்பதை நாம் காணலாம். கணபதியின் நாபி பிரம்ம சொரூபமாகவும், முகம் விஷ்ணு சொரூபமாகவும், கண்கள் சிவரூபம் என்றும் இடது பாகம் சக்தி ரூபமாகவும், வலது பாகம் சூரியன் என்றும் கூறப்படுகிறது. அத்துடன் சிவசக்தியின் வடிவம் கணபதி வடிவமாகும். ஒலியின் வடிவம் மந்திரமாகும். இதனால் கணபதி மந்திரவடிவமானவர். இதனாலே ஓங்கார சொரூபமாக விளங்கும் விநாயகப் பெருமானது திருவுருவத்தில் பிரணவ மந்திரத்தைக் காணலாம். பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களினால் உலகம் உருப்பெறுகிறது. இப்பஞ்சபூதங்களின் முழுவடிவம் ஐங்கரப் பெருமானது வடிவமாகும். இவ்வாறான கணபதியை தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும், மற்றும் அருளாளர்களும் வணங்கி அருள் பெற்றிருக்கிறார்கள். இவ்வாறாக எண்ணிலடங்காத பல பெருமையையுடைய விநாயகப் பெருமானது திருவுருவங்களில் கற்பகப்பிள்ளையார் வடிவமும் ஒன்றாகும். கேட்டவற்றை வாரி வழங்கும் கற்பகதரு, காமதேனு போன்ற அபூர்வசக்திகளின் அம்சங்களை உள்ளடக்கிய வடிவமே கற்பகப் பிள்ளையார் வடிவமாகும்.

சகல வளங்களும் சிறப்புற்று விளங்கும் இலண்டன் மாநகரில் திருவருள்மிகு வோல்தம்ஸ்ரோ பகுதியில் கோயில் கொண்டருளி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு இன்னருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீகற்பகவிநாயகப் பெருமானுக்கும், மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் ஆனி உத்தரத் திருநாளில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். ஸ்ரீகற்பகவிநாயகப் பெருமானது மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், கற்பகப்பெருமானது திருவருள் எல்லோருக்கும் பரிபூரணமாகக்கிடைக்க வேண்டும் என இலண்டன் லூயிஷம் சிவபுரம் பகுதியில் கோயில் கொண்டருளியிருக்கும் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேஸ்வரப் பெருமானது பொற்பாதங்களைப் போற்றிப் பணிந்து சிவன் ஆலயபரிபாலனசபை, சிவாச்சாரியர்கள், ஓதுவாமூர்த்தி, சைவக்குருக்கள் மற்றும் ஆலய பக்தர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து எமது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைக் கூறுகிறோம்.

வணக்கம்,

**இங்ஙனம்,**
**கலாநிதி. து. ஸ்ரீஸ்கந்தராஜா**

OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.

By Serving the devotees we serve God

**LAKSHMI NARAYANA TRUST**
**London Sri Mahalakshmi Temple**
**Charity Reg. No: 292677**
272 High Street North, Manor Park, London E12 6SA
Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315
Web: www.srimahalakshmitemple.net
e.mail : info@srimahalakshmitemple.net

**Patrons**
Sri P.R. Ramasubrahmaneya Rajha

**Senior Adviser**
Mr. S.N Perumal

**Board of Trustees**
**Senior Trustee**
Mr. V.N.Alagirisamy

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairman**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officer**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakash

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan

19/05/2014

# Kumbabhishekam vazhthu madal

Dear Gopalakrishnan,

We are really glad to know that you are celebrating Kumbabhishekam to the almighty Shree Karpaga Vinayagar on 04th of July 2014. We pray to the Arulmihu Sri Karpaga Vinayagar and Sri Lakshmi Narayanar to complete the Kumbabhishekam successfully.

We wish to thank you and the board of trustees in requesting well wishes from our temple.

May the blessing of Sri Lakshmi Narayanar be with you, the board of trustees, devotees and well wishers for their health, wealth and prosperity.

Best regards,
Lakshmi Narayana Trust

உ

சிவமயம்

பிள்ளையார் துணை

*"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"*

# இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

# LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE

299 - 303 LEY STREET   ILFORD, ESSEX   IG1 4BN   TEL / FAX :- **0208 911 8934**

WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK   E-Mail:- info@sriselvavinayagar.org.uk

28/05/2014

## புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் மொழி. எமது தாய் மண்ணில் நடந்த அனர்த்தத்தினால் ஏதிலிகளாக எமது மக்கள், துடுப்பை இழந்த படகுபோல், கயிறறுந்த பட்டம் போல் திக்கு திசை தெரியாமல் உலகப்பந்தில் மூலை முடுக்கெல்லாம் சிதறி விழுந்தார்கள். விழுந்தவர்கள் தங்கள் கலை, கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் மறக்க கூடிய பேராபத்தை உணர்ந்த போதுதான், ஆலயங்கள் உருவாக ஆரம்பித்தன. இன்று எமது மக்கள் வாழும் கிராமங்களில் குறைந்தது ஒரு ஆலயமாவது உருவாகியிருப்பது எம் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைகிறது. அந்த வகையில் வோல்த்தம்ஸ்ரோவ் பகுதியில் எந்த ஒரு சைவ ஆலயமும் இல்லாத குறையை போக்குவதற்காக உருவாகியதே கற்பக விநாயகர் ஆலயம்.

அந்த வகையில் இன்று பன்னிரண்டாம் ஆண்டில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் காணும் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் மேலும், பல கும்பாபிஷேகங்களைக் காணவேண்டும். அதன் சேவை இங்கு வாழும் மக்களுக்கும், தாயகத்தில் அவதியுறும் எமது உறவுகளுக்கும் தனது சேவையைத் தொடர வேண்டும் என்று இல்போட் பகுதியில் அமர்ந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

மேற்படி ஆலய வளர்ச்சிக்கு எமது ஆலய நிர்வாகம், ஆச்சாரியப் பெருமக்கள், பக்தப்பெருமக்கள் தம்மாலான அனுசரனை வழங்க ஆவலாக இருக்கிறோம் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதீ விளங்குக உலகமெல்லாம்"**

நன்றியுடன்

*செல்வா*

ஸ்தாபகர் / தலைவர்

ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

**FOUNDER & PRESIDENT**
Mr. S. Selvarajah

HON. SECRETARY
Mrs. N. Surendran

HON. TREASURER
Mrs. A. Sathiyamoorthy



உ
Gugamayam
SKANTHASHRAM
Sivaskanthagiri Sri Murugan Temple
சிவஸ்கந்தகிரி ஸ்ரீ முருகன் கோயில்
R/O 13-15 Thornton Road, Thornton Heath Surrey, CR7 6BD, UK.
Tel : 02086840747


இலண்டன் – வொல்தம்ஸ்ரோ

## ஸ்ரீ கற்பகவிநாயகர்

### மகா கும்பாபிஷேக வைபவ வாழ்த்து

**விநாயகர் துதி**

ஓம் என்னும் பிரணவத்துள் உட்பொருளாய் அமர்ந்தவனே
மாண்பு மிகு வொல்தம்ஸ்ரோ கற்பக விநாயகனின்
குடமுழுக்கு வைபவம் ஓர் குறைவுமின்றி நிறைவு பெற
குஞ்சரமே! குல விளக்கே! கொற்றவனே! நீ அருள்வாய்!

**வேறு**

சித்தி அருள் ஜய வருஷம் வாழி! வாழி!!
செப்பிடும் ஆனித் திங்கள் இருப(து அன்று
பக்தி மிகும் வெள்ளி ஒளிர் பூர்வ பக்க
பாங்குடை சப்தமித் திதியும் உத்தரமும்
வெற்றி நடை பயிலும் அருள் சிவனும் மன்றை
விளங்கும் ஆயிரம் தூண்கள் தாங்கி நிற்ப
ஒப்பில் நடாரஜ தில்லை நடனக் காட்சி
உலகனைத்தும் அருள் ததும்பும் ஒப்பில் வேளை!

நடராஜர் ஐந்தொழில் நடம் புரிய
ஞான சிவகாமி அம்மை அருள் ததும்ப
அரு றை சாற்றும் திருக் குட முழுக்கு
ஆவர்த்தனம் அனாவர்த்தனமும்

பொருந்தி வரும் புனராவர்த்தனத்தினோடு
புன்மை தவிர் அந்தரிதம் ஆய நான்கு
விதி முறையுள் கற்பக விநாயகனும்
வேண்டி நின்றான் புனராவர்த்தனக் கிரியை!

வானவர்கள் பூமாரி பொழிந்து வாழ்த்த
மருவி நிற்கும் ஹோமத் தீ வானளாவ
வேதியர்கள் நால் வேதம் ஓதி நிற்ப
விளங்கு துந்துபி நாதம் மிதந்து வார
தேசு மிகு இலண்டன் நகர் வொல்தம்ஸ்ரோவின்
திகழ் ஒளி அருள் சுரக்கும் கருணைத் தெய்வம்
கூசு மலர்ப் பத கற்பக ஏரம்பன்
குடமுழுக்(கு) எம் கண்ணிறைந்த திருப் பொற்
காட்சி!

சைவமொடு தமிழ் மணமும் ஒன்றி வாழி!
சமரசமோ(டு) அன்பு அருள் தழைத்து வாழி!
ஸ்ரீ கற்பக விநாயகரின் கருணை வாழி!
கவிந்த மஹா கும்பாபி ஷேகம் வாழி!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புடன்

**ஸ்கந்தாஸ்ரமம்**
**சிவஸ்கந்தகிரி ஸ்ரீ முருகன் ஆலய**
**அர்ச்சகர்கள் நிர்வாகத்தினர் அடியவர்கள்**

**04.08.2014**




**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**

**என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**

HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)

இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)

61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org Charity No: 1143043


## வாழ்த்துரை

வடஇலண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க.

இலண்டன் மாநகரின் கிழக்கில் வோல்ஸ்தம்ரோ பகுதியில் வேண்டுவோர்க்கு வேண்டுவதை வாரிவழங்கும் வள்ளலாக விளங்கும் கற்பகபதியின் கற்பகவிநாயகர் ஆலய 2வது மகாகும்பாபிசேகம் நடைபெறுவதையிட்டு வாழ்த்து கூறுவதில் அகமகிழ்வு அடைகின்றோம்.

வோல்ஸ்தம்ரோ பகுதியில் கற்பகபதி எனும் திருத்தலத்தில் நித்திய நைமித்திய காமிக வழிபாடுகள் நிறைவாக நடைபெறுவதை யாவரும் அறிவோம். அதற்கும் மேலாக தாயகத்தில் அல்லலுறும் நம் உறவுகளுக்கு கற்பகவிநாயகரின் ஆலயம் ஆற்றும் மனிதநேயப் பணிகள் போற்றுதற்குறியது. பதியிலர், நிதியிலர், கதியிலர் நிலையுள்ள பல குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கும் இவ்வாலயம் அளப்பரிய பணியை ஆற்றுகின்றது இப்பணி தொடர்ந்து நடைபெறவும் வாழ்த்துகின்றோம்.

இவ்வாலயத்தில் தற்போது புனர்நிர்மானம் செய்யப்பட்டு கும்பாபிசேகம் நடைபெறுகின்றது. ஆவணி மாதத்தில் நடைபெறும் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். கற்பக விநாயகர் ஆலயத்தில் சுக்ல, கிருஷ்ணபக்ஷ சதுர்த்திகள், பிரதோஷ வழிபாடுகள், கார்த்திகை விரத விழாக்கள், ஐயப்பன் விரதம், வசந்த நவராத்திரி விழா, நவராத்திரி விழா, கேதாரகௌரி விரதம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை முதலான விரதவிழாக்கள் சிறப்பானவையாகும்.

04.07.2014 நடைபெறும் 2வது கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற என்பீல்ட் நாகபூசணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்<br>சிவாச்சாரியார்கள்<br>அடியார்கள்

தெய்வீக திருப்பணியில்<br>இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

---

Ambaal TV

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம். என்பீல்ட் இந்து தமிழ் கலாசார சங்கம் சார்பாக நடாத்தப்படும் அம்பாள் தொலைக்காட்சியில் ஆன்மீக தமிழ் கலை கலாசார விழுமியங்களைத் தாங்கி வருகின்றது.

பிரதி செவ்வாய், வெள்ளி மாலை 7.30 மணிக்கு அம்பாள் பூசை நேரடியாக காண்பிக்கப்படும்.



# Shree Sakthy Ghanapathy Temple

Board of Trustees

Chairman
K Kanendran

Vice Chairman
T Pangayetselvan

Secretary
C Kailaya – Vasan

Asst. Secretary
K Jeyakumar

Finance
K Paramanathan

Temple Opening Hours

Sunday - Thursday

8.30am – 2.00pm &
5.00pm – 9.00pm

Friday & Saturday

8.30am – 9.00pm

Address

21 Brigstock Road
Thornton Heath
Croydon
Surrey
CR7 7JJ

Tel: 020 8689 3466

Chief Priest

K Prakash Kurukkal

Registered Charity
No: 1141833



## வாழ்த்துச் செய்தி

*"திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை*
*காதலால் கூப்புவர் தம் கை"*

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களால் மறக்கமுடியாத ஒன்று தெய்வ வழிபாடுதான். தமிழ் மக்கள் தாங்கள் வாழும் பகுதியில் ஆலயம் அமைத்து வாழ்பவர்கள்.

அந்த வகையில் லண்டன் வோல்த்தம்ஸ்ரோ பகுதியில் விநாயகருக்கு ஒரு ஆலயம் அமைத்து அதனைச் சிறந்த முறையில் நிர்வகிக்கும் ஆலயநிர்வாகத்தினரை மகிழ்ச்சியுடன் பாராட்டும் வேளையில் பன்னிரண்டு வருட முடிவில் கும்பாபிஷேகம் செய்து, ஆன்மீகத்தில் அக்கறை காட்டும் தங்களுக்கு கற்பக விநாயகர் அருள் என்றும் துணை நிற்பார் என வாழ்த்துகிறோம்.

க பரமநாதன்
அறங்காவலர் சபை, செயற்பாட்டுக் குழு & சிவாச்சாரியார்கள் சார்பாக
23 மே 2014

உ

# வேல்ஸ் ஸ்ரீ கல்பகவிநாயகர் தேவஸ்தானம்

## WALES SRI KALPAGA VINAYAKAR DEVASTHAANAM

UNIT 43, ADDISON ROAD, PORT TALBOT, SA12 6HZ
TELEPHONE : 01639779872 /07870831417
Web: www.kalpaganesh.co.uk

கல்பகா
Sri Kalpaga Hindu
Cultural Association

கற்பகத்தின் கருணை பெற பொற்பதத்தை நாடுமின்!

## மஹாகும்பாபிஷேக வாழ்த்துச்செய்தி

இலண்டன் வாழ் இந்துமக்களின் மனங்களில் குடிகொண்டு அருளாட்சி செய்துவரும் வோல்த்தம்ஸ்ரோ கற்பகவிநாயகப்பெருமானின் கும்பாபிசேகம் சிறப்பாக நடைபெற வேல்ஸ் ஸ்ரீகற்பக விநாயகர் திருவடி பணிந்து எமது மனமார்ந்த வாழ்த்துக்களை அறப்பணியாளர்களுக்குத் தெரிவித்து விநாயகர் வழிபாட்டின் தத்துவத்தைச் சிந்திப்போம்!!

### கணபதி வழிபாட்டின் தத்துவம்

ஓம் எனும் ஓங்கார ஒலியானது பரந்து விரிந்த இப்பிரபஞ்சத்தின் முதல் தோற்றமாக அமைந்தது. அந்த ஓங்கார ஒலியிலிருந்து ஒளி தோற்றம் பெற்றது. அதாவது சூரியன் உருவானது. இந்த ஒலியும், ஒளியும் இணைந்து அற்புத பேராற்றல்கள் உருவாவதற்கு காரணமாயின.

இந்த பேராற்றல்களின் வெளிப்பாடாக பஞ்சபூத மூலக்கூறுகள் தோன்றி நாளடைவில் மிகப்பெரிய பஞ்சபூதங்களாக தோற்றம் பெற்றன. ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் எனப்படும் பஞ்சபூதங்கள் தங்களுக்குள் ஒன்றுடன் ஒன்று கலந்து முழுமை பெற்று தனித்தனி பூதங்களாக உருவெடுத்தன. இப்பூதங்கள் தங்களுக்கென்று தனித்தனியான தன்மைகள், பண்புகள், குணங்கள், செயல்கள் கொண்டு அமைந்தன. பஞ்சபூதங்கள் தங்களின் கூட்டு முயற்சியால் ஒன்றுடன் ஒன்று கலந்தும், மயங்கியும் உலகப்பொருட்களின் தோற்றத்திற்கும் அவற்றின் இயக்கத்திற்கும் காரணமாயின.

பஞ்சபூதங்கள் இல்லை எனில் இவ்வுலகம் இல்லை என்னுமளவுக்கு உலக இயக்கத்தின் அடிப்படை ஆதாரமாக விளங்கும் பஞ்சபூத சக்திகளின் ஆற்றலை உணர்ந்த மனிதன், அவற்றை வழிபட முனைந்தான். நாளடைவில் ஒவ்வொரு பூதத்தின் தனிப்பெரும் சிறப்பு, அதன் தனித்தன்மையை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு பூதத்திற்கும் முறையே ஆகாயம் வட்டம், காற்று அறுங்கோணம், தீ முக்கோணம் நீர், பிறை, நிலம், சதுரம், என தனித்தனியாக வரிவடிவம் கொடுத்து வழிபட ஆரம்பித்தான்.

காலப்போக்கில் பஞ்சபூத சுழற்சி முறையினை கண்டறிந்த மனிதன் ஆகாயத்திலிருந்து நிலத்திற்கு வந்த நீர் நிலத்தின் மேல் தங்குகிறது. இந்த நீர் அக்கினியால் (நெருப்பால்) வாயுவாக்கப்பட்டு (நீராவி) ஆகாயத்துடன் ஒன்றுகிறது. எனவே பஞ்சபூத சுழற்சி அடிப்படையில் பஞ்சபூத குறியீட்டு வடிவங்களை ஒன்றாக அமைத்து முழு முதற்கடவுளான விநாயகரின் வடிவத்தை அமைத்தான்.

முழுமுதற்கடவுளை வணங்கி தொழும்போது மூர்த்தியின் திருஉருவ வடிவலிருந்து வெளிப்படும் பஞ்சபூத சக்தி அலைகள் மனிதனின் உள்ளும், புறமும், இருக்கும் பஞ்சபூத சக்திகளுக்கு வலுவூட்டுவதாய் அமைகின்றன. வலிமை பெற்ற பஞ்சபூத சக்திகளின் துணைகொண்டு முயன்று செய்யும் எந்த ஒரு நற்செயலும் நல்ல மங்கல விளைவை நிகழ்த்தித்தர வல்லதாய் அமைகின்றது. எனவே தான் எச்செயலையும் செய்யத் தொடங்குமுன் முழுமுதற் கடவுளைத் தொழுது பஞ்சபூத சக்திகளுக்கு வலிமை ஏற்றி செயல்பட முனையும் பழக்கத்தை நம் முன்னோர்கள் வேதாகம சாஸ்திர வழக்கப்படி நடைமுறைப்படுத்தி இருக்கின்றான்.

முழுமுதற்கடவுளாகிய விநாயகரை வணங்கி வழிபடும் முறையாக தலையில் குட்டிக்கொள்வதும் செவிகளை பிடித்து கொண்டு தோப்புக்கரணம் போடுதலும் பஞ்சபூத சுழற்சி முறையினை நடைமுறைப்படுத்தும் நிகழ்வாக அமைகிறது. தலை ஆகாய அம்சம், குட்டிக்கொள்ளுதல் நிலத்தின் அம்சமாகும். தோப்புக்கரணம் போடுதல் நிலத்தின் மேலுள்ள நீர் அக்னியால் வாயுவாக்கப்படும் நிகழ்வு ஆகும். செவியை பிடித்துக்கொண்டு போடுதல் வாயு, ஆகாயத்துடன் ஒன்றுதல் ஆகும். (செவி - ஆகாய அம்சம்) பஞ்ச பூத சுழற்சி முறையை நடைமுறைப்படுத்தியபின் அற்புத ஆற்றல் கிடைக்கப்பெறுகிறது. இத்தகைய ஆற்றல் துணை கொண்டு நற்செயல்களை செயலாற்ற முனையும் போது அவை அற்புத பலன்களை தரக்கூடியதாய் அமைகிறது இதுவே கணபதி வழிபாட்டின் தத்துவம்

இறைபணியில் - முத்தமிழ் வித்தகர் - **சிவஸ்ரீ ச.லம்போதர குமாரசாமிக்குருக்கள்**

THIRUVARULMIGU COVENTRY
EELLAKANTHAN THIRUKOVIL
2 LYTHALLS LANE
COVENTRY.CV66FG
UK.



திருவருள்மிகு கோவென்றி ஈழக்கந்தன் திருக்கோவில்
2, லைதல்ஸ் லேன் கொவன்றி
சிவி66FG
லண்டன்

# மஹா கும்பாபிஷேக வாழ்த்துரை

**"பூர்ணமதபூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண்முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமே வாவஸிஷ்யதே"**

எனும் வேதவாக்குப்படி பூர்ணமடைந்துள்ள ஸ்ரீ கற்பக விநாயகரின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நிறைவுற எமது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் பிரார்த்தனையாக அமையட்டும்.

சிவாச்சார்ய குருபரம்பரையைச் சேர்ந்த பிரதம சிவாச்சார்யார்கள் அவர்களின் பாதக்கமலங்களைப் பணிந்து , மஹா கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவு செய்திருக்கும் குருமணி அவர்கட்கும் கொவன்றி ஈழக்கந்தப்பெருமானின் திருவருளுடன் எமது நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

மற்றும் கும்பாபிஷேகத்தை நிறைவுசெய்ய உதவி புரிந்த சிவாச்சார்யப் பெருமக்களும், தர்சனப் பேறுபெற்ற பக்தப் பெருமக்களும் , கருணைக்கடலாம் ஸ்ரீ கற்பக விநாயகரின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமான லண்டன் வாழ் மக்களனைவரும் நற்பேறு பெற்றவர்கள். எனவே அவனருளால் பல்லாண்டு பல்சீர் சிறப்புக்களும் பெற்று நற்பேறடையும் வண்ணம் "களிற்றின் மாமுகப் பண்ணவன் மலரடி பணிந்து ஸ்ரீ கற்பக விநாயகனை நாமும் சிரம் தாழ்த்தி வணங்குவோமாக!!"

"யஸ்சிவோ நாம்ரூபாப்யாம் யாதேவீசர்வமங்களா
தயோஸ் ஸம்ஸ்மரணாத் பும்சாம் சர்வதோ ஜயமங்களம்"

இவ்வண்ணம்
அன்புடன்
ஆலய நிர்வாகத்தினர்
சிவாச்சாரியார்கள்



ௐ
Aum Sakthi
ஸ்ரீ மேருபுரம் மஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
**SRI MERUPURAM**
**MAHA PATHIRAKALI AMMAN**
**THEVASTHANAM**
271 Forest Road, Watham Stow
E17 6 HD, London.
Tele/ Fax : 0208 - 5310872



# ஆசியுரை

இலண்டன் மாநகரில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான வோல்தம் ஸ்ரோவில் தாய் சக்தியின் வடிவமாம் அம்மனும், தனயன் விக்னேஸ்வரனும் எழுந்தருளி ஆன்மீக வலம் வருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைந்து வந்திருக்கிறேன். தற்போது சகல விக்கினங்களையும் தீர்த்து வைக்கும் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகர் ஆலயத்தில் புனராவர்த்தன பிரதிட்டா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதையிட்டு மேலும் மகிழ்ச்சியடைகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்பதற்கமைய ஆன்மீக நெறி பரப்பி வரும் கற்பக விநாயக ஆலயத்தின் மகிமை மேலோங்கவும் ஆலய சிவாச்சாரியார்கள், நிர்வாகிகள், அடியார்கள் அனைவருக்கும் இறைஅருள் கிடைக்கவும் வேண்டி நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் சிறீ மேருபுரம் மகா பத்திரகாளியம்மனை மனம் இறைஞ்சிப் பிரார்த்திக்கிறேன்.

தொடரட்டும் உங்கள் ஆன்மீக பணி!

வளரட்டும் சைவ நெறி!

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

இங்கனம்

**கயிலை காளிதாசன் சிவஸ்ரீ லிங்கலோகநாதக்குருக்கள்**

ஆலய ஸ்தாபகர்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Hindu Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel / Fax: 020 8514 4732
www.saivamunnettasangam.com **Registered Charity No: 292085**

*Vice- Patrons*
Dr. (Mrs) Indra Siva-yoham
Dr. V Balasegaram
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hon. General Secretary & Trustee*
Mr S Niranjan

*Hon. Treasurer & Trustee*
Mr V R Ramanathan

*Trustees*
Mr V R Loganathan
Mr W Nagaratnam
Mr G Parameswaran
Mr C Sithamparapillai
Mr V C Vamananathan

*Building Project Secretary*
Mr S Balasingam

*Examination Secretary*
Mr V Jegendirabose

*School Secretary*
Mr S Kugarajah

*Religious Secretary*
Mr M Ravindradas

*Social Service Secretary*
Mrs P Sabaratnam

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Membership Secretary*
Mr M Yasotharan

*Assistant Treasurers*
Mr M Indusegaran
Mr. S Thamboo

*Committee Members*
Mrs A Gunarasa
Mrs B Kanagasabesan
Mrs V Kanagenthiran
Mrs Vasantha Mahadevan
Mrs P Nadaraja
Mr S R Pasupathy
Mrs Sri Ponnuthurai

02.06.2014

திரு. கோபாலகிருஷ்ணன்
தலைவர்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
வோல்தம்ஸ்ரோ
இலண்டன்

அன்புக்குரிய ஆலய நிர்வாக சபையினர், சிவாச்சாரிார்கள், தொண்டர்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஸ்ரீகற்பக விநாயகப் பெருமான் ஆலயத்தின் எதிர்வரும் கும்பாபிஷேகம் ஆலயத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் நல்ல நாள். நீங்கள் பல ஆண்டுகளாக சமயத்திற்கும் சமுகத்திற்கும் சிறப்பான பணி செய்து வளர்த்துள்ள உங்களின் சேவைக்குக் கிடைக்கும் சான்றும், இறைவனின் வரமும் - இப்புண்ணிய நாளாகும்.

நீங்கள் பல இன்னல்களையும் கடந்து ஆலயத்தின் வாயிலாக பக்தியையும், பண்பாட்டையும் மக்களிடையே தொடர்ந்து வளர்க்க எடுக்கும் முயற்சிகள் இக்கும்பாபிஷேகத்தின் மூலமாக மேலும் வலுவடையும் என்பது வரவேற்கத்தக்கது.

இறை பணி செய்ய சந்தர்ப்பம் கிடைப்பதும், அது மக்களுக்கு நன்மையாய் அமைவதும் அவனருளால்தான். இது ஓர் அரிய வாய்ப்பு. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்கள் ஆலயத்தின் சேவை இன்னும் பல மடங்கு பெருகி மக்கள் குலம் மேன்மையடைய ஸ்ரீகற்பக விநாயகப் பெருமான் வழி நடத்துவார் என்று நம்புவோமாக.

இத்தொண்டில் ஈடுபட்டுள்ள எல்லா நல்ல உள்ளங்களையும் நாம் பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு

ச ஆனந்தியாகர்

சதாசிவம் ஆனந்தியாகர்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
**Justice C.V.Wigneswaran**

தொலைபேசி / දුරකථනය / Telephone — 021 320 2465

தொலைநகல் / ෆැක්ස් / Fax — 021 221 7227

**முதலமைச்சர் - வட மாகாணம்**
**ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත**
**Chief Minister – Northern Province**

26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்
26, සෝමසුන්දරම් ඇවනියු, චුන්ඩිකුලි යාපනය
26, Somasundaram Avenue,
Chundukkuli, Jaffna

நிதியும் திட்டமிடலும் சட்டமும் ஒழுங்கும் காணி, வீதி அபிவிருத்தி மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், நீர் வழங்கல் கூட்டுறவு அபிவிருத்தி சமூக சேவைகள் புனர்வாழ்வளித்தல் மகளிர் விவகாரம் தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு சுற்றுலா உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் உணவு வழங்கலும் விநியோகமும் அமைச்சர்

උතුරු පළාත් මුදල් හා කුමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, මාර්ග සංවර්ධන, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, ජල සම්පාදන, සමුපකාර සංවර්ධන, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන හා පළාත් පරිපාලනය සහ ආහාර සැපයුම් හා බෙදාහැරීම් අමාත්‍යාංශය

Minister of Finance & Planning, Law & Order, Lands, Road Development & Electricity, Housing & Construction, Water supply, Cooperative Development, Social Service & Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise promotion, Tourism, Local Government and Provincial Administration, Food supply and Distribution


---

எனது இல / මගේ අංකය / My Ref. — NPC/CM/01/2801/2014

திகதி / දිනය / Date — 07.06.2014

## ஆசிச் செய்தி

வோல்த்தம்ஸ்ரோ கற்பக கணபதி ஆலயத்தின் 04.07.2014ந் திகதிய கும்பாபிஷேக தினத்தையொட்டி வெளியிடவுள்ள மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மன மகிழ்வடைகின்றேன். இவ்வாலயத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் மக்களுக்குஞ் சேவை செய்து மகேஸ்வர புத்திரனுக்கும் அவர்கள் சேவை செய்து வருவதே.

மதிப்பிற்குரிய திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் முன்னின்று இந்த இரு கைங்கரியங்களும் நடைபெறுவதற்கு உற்சாகமும், ஊக்கமும் அளித்து வருகின்றார். ஆலயப் பணியுடன் அதிசமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். அவரின் ஆலயப் பணியும் ஆழ்ந்தகன்ற சமூகப் பணியும் தொடர்ந்து வெற்றியுடன் நடைபெற இறைவனை வேண்டுகின்றேன். கும்பாபிஷேகம் குதூகலத்துடன் குற்றம் இன்றி நடைபெற வேண்டும். அதற்கு முருகனின் மூத்தவன் முன்னின்று அருள் புரிவானாக!

அன்புடன்.

க.வி. விக்னேஸ்வரன்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்**
**வடமாகாணசபை**
**யாழ்ப்பாணம்**

*Bharathirajaa*

E-2/G. Parsn Apartments.
Gemini Compound.
Chennai - 600 006
Phone : 044-28225474
Fax : 044-28267128
E-mail :
bharathirajaal@yahoo.com
manojkumarb_2004@yahoo.com

15.6.2014

என் இனிய தமிழ் மக்களே....

"தாயகத்தில் வாழ வழியில்லை,

தமிழ் மண்ணில் குலசாமி வைத்து குறை சொல்ல நீதியில்லை"

நினைத்தால் நெஞ்சுக்குள் அனல் காற்று வீசும்...

உங்கள் அழைப்பை கேட்ட பிறகு என் மீது தென்றல் வீசுவதாக உணர்கிறேன்.

நம்மை அடிமையாய் ஆட்சி புரிந்த மண்ணிலேயே, தமிழ் கொடியை நட்டு, கூடவே விநாயகருக்கு குட முழுக்கு விழா எடுக்கப் போவதை அறிந்து பெருமையடைகிறேன் ..அதை தமிழனின் வெற்றி விழாவாக பார்க்கிறேன்.

ஒவ்வொரு வரலாற்று சுவடுகளின் வெற்றிகளின் பின்புலத்தில் தனிமனிதன் ஒருவன் இருப்பான். அப்படிதான், இந்த லண்டன் மாநகரிலேயே வோல்தம்ஸ்ரோ சாலையில் வீற்றிருக்கும் கற்பக விநாயகரின் கருவறைக்கு பின்னணியில், என் இனிய நண்பர்... ஈழத்து இன உணர்வாளர் திரு.கோபாலாகிருஷ்ணன் இருப்பது எனக்கும், கடல் கடந்து வாழும் நம் உறவுகளுக்கும் சிறப்புடையதாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

தற்பொழுது கோயில்கள் பொருளாதர நோக்கத்துடன் செயல்படும் நிலையில் கற்பக விநாயகர் கோயில் நிதி கொண்டு, தாயகத்தில் வாடும், தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் , கல்விக்கும் , தொண்டாற்றும் நண்பர் திரு. கோபாலகிருஷ்ணன் மற்றும் இவருடன் பணியாற்றும் கோயில் நிர்வாகிகளுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியும்! பாராட்டுகளும்!.

அன்புடன்



Congratulations to the Hindu community in Waltham Forest and London on this important day for the Sree Karpaga Vinayagar Temple. I am extremely proud to serve as the Member of Parliament for Walthamstow and represent a community which actively celebrates our many cultures int his way, as well as seeking to share goodwill with our neighbours everyday. I look forward to working with you in the coming year for the benefit of our shared futures.

Stella Creasy - MP of Walthamstow

I would like to send my best wishes to the Hindu citizens of Waltham Forest and London more widely on this very special occasion for the Sree Karpaga Vinayagar Temple. Your community is one of the many that make Waltham Forest such a vibrant place to live and I look forward to continuing to work closely with you all.

Best wishes,
Cllr Chris Robbins
Leader of Waltham forest Council





I am delighted that so much progress has been made by the local Tamil Hindu community in developing a better building for the purposes of worship and community development. I will look forward to supporting you in the future and will continually work to facilitate closer links between the Tamil Hindu community and people of all faiths and none in Waltham Forest."

Yours

Clare xx - Waltham Forest Councillor

10.05.2014

පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

**PARLIAMENT**

## இலண்டன் மாநகரில் மாண்புறும் ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில்

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றாலும் நம் தமிழ் மக்கள், சைவமக்கள் தம்பண்பாடு, ஒழுக்கம் காத்து நிற்பதும் ஆன்ம ஈடேற்றத்தின் பால் நம்பிக்கை கொண்டு அருள் வேண்டி நிற்போர் இலண்டன் மாநகரில், தழைத்தோங்கி அருள்பாலிக்கும் ஸ்ரீ கர்ப்பக விநாயகர் கோவில் பெருமளவில் கூடி நிற்பதும், கண்கொள்ளாக் காட்சியாக விநாயகர் பவனி வருவதும் மனதிற்கு மகிழ்ச்சி தருகிறது.

இக் காட்சியைப் பல தடவைகள் நேரிலேயே கண்டு அனுபவித்திருக்கிறேன் . அச் சந்தர்ப்பத்தை, அப் பாக்கியத்தை திரு கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கியமைக்காக அவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்வரும் ஆடித்திங்களில் நடைபெறவுள்ள திருவிழாவிலும் மலர் வெளியீட்டிலும் கலந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளமையும் மகிழ்ச்சி தருகிறது.

திரு.கோபாலகிருஷ்ணன் கற்பக விநாயகர் கோவிலில் அறங்காவலராய் நின்று தலைவராக இருந்து சிறப்பிப்பது மட்டுமல்ல, இலங்கையில் இனப் போரின் காரணமாய் அரசினால் ஏதிலிகளாக அநாதரவாக விடப்பட்ட மனித குலத்திற்கு, மக்களுக்கு ஆலமரமாக நிற்பதும் அவர் பேருதவி புரிந்து வருவதும் பெரும் ஆறுதல் தரும் மான்புறும் செயலாகும். கல்விக் கூடங்களும் அனாதரவான குழந்தைகளும் பெரும் பயன் பெறும் வகையில் அவர் உதவிகள் அமைந்துள்ளன. பயன்பெறுவோருக்குக் கலங்கரை விளக்கமாய், கற்பகதருவாய் விளங்கி நிற்கும் திரு.கோபாலகிருஷ்ணனையும் ஆன்மகதில் நிறுத்திப் போற்றுவோம்.

இலண்டன் மாநகர் கற்பகவிநாயகர் திருவிழா, அத்துடன் வெளிவரும் ஆன்ம மலர் சிறப்புறவும், அடியார் அருள் பெறவும் எம் இதயம் நிறைந்த, அர்ப்பணம் நிறைந்த வாழ்த்துக்களையும் வழங்கி மகிழ்கின்றோம்.

மாவை.சோ.சேனாதிராசா,பா.உ

Department
for Culture
Media & Sport

Ministerial Support Team
4th Floor
100 Parliament Street
London SW1A 2BQ

T 020 7211 6000
F 020 7211 6309

www.gov.uk/dcms

Sgd. Dr C P Thiagarajah
Honorary Secretary
Sree Karpaga Vinayagar Temple
2-4 Bedford Road
LONDON
E17 4PX

Your Ref:
Our Ref: CMS 249592/DC

21 May 2014

Dear Dr Thiagarajah

Thank you for inviting the Secretary of State for Culture, Media and Sport and Minister for Equalities, Sajid Javid, to second Consecration ceremony (Kumba Abhisekam) on Friday 4 July.

Unfortunately, on this occasion, the Secretary of State is unable to accept your kind invitation due to prior commitments.

Please accept our best wishes.

Kind regards,

D Chbow

**Doreen Chen-Bow**
**Ministerial Support Team**

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882. ஆறுமுகம் வீதி
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
தொலைபேசி : 021 3207584, 021 2280024
தொலைநகல் : 021 2221595, 021 2280024
கைபேசி : 077 6913244
மின்னஞ்சல் : shritharan08@hotmail.com
இணையத்தளம் : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi.
Tel. : 021 3207584, 021 2280024
Fax. : 021 2221595, 021 2280024
Mob : 077 6913244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com

2014.05.17.

முதல்வன் கற்பக விநாயகப்பெருமானின் அருள் ஏழைகளின் வாழ்வில் வியாபித்துள்ளது.

இலண்டன் வோல்த்தம்ஸ்றோ ஸ்ரீ கற்பக கணபதி ஆலயம் விழாக்காண்தல் அறிந்து பூரிப்படைகின்றேன். எம்பெருமான் பன்னிரண்டுவருடங்கள் கடந்து புலம்பெயர் மண்ணில் இலண்டன் மாநகரில் வேண்டுவோரின் விக்கினங்கள் தீர்ப்பவனாய் விளங்குவதை கண்கூடாக நாம் கண்டு பேரின்பமடைகின்றோம். ஔவைப்பிராட்டியை கயிலையில் ஏற்றி அழகு பார்த்த அற்புதமான ஆண்டவனாய் விநாயப்பெருமான் திகழ்கிறார். வேதம் எழுத வியாசருக்கு தன் தந்தத்தை தந்த தத்துவப்பெருங்கடலாம் கணபதி இன்று தமிழ்களாகிய நாம் உலகமெலாம் பரந்து நாடற்று அலைந்து எமது வரலாறுகள் மறைக்கப்படும் வேளையில் தன் அருட்தந்தத்தை தந்து தமிழரின் ஈகை வேதத்தை எழுத அருளும்படி வேண்டி நிற்கின்றோம்.

இலண்டனின் மதிப்பிற்குரிய திரு.கோபாலகிருஸ்ணன் என்ற கருணைஉள்ளங்கொண்டவரின் வழிநடத்தலின் கீழ் இலண்டன் வோல்த்தம்ஸ்றோ கற்பக விநாயகர் ஈழத்தில் ஏதிலிகளாய் வாழும் மக்களுக்கு தக்க தருணத்தில் கரம் கொடுத்ததை இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கொள்கின்றோம். கோபால் அண்ணனை நாம் கேட்ட போதெல்லாம் எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் பேரால் தாய்,தந்தையை இழந்த மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர் களுக்கும் தங்கள் கணவரை இழந்து பிள்ளைகளோடு தவிக்கும் குடும்ப தலைவிகளுக்கும் பல்வேறு வாழ்வாதார உதவிகளை திருகோணமலை, மட்டக்களப்பு தொட்டு வன்னி, கிளிநொச்சி ஈறாக யாழ்ப்பாணம் வரை இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியில் வழங்கி வாழவைத்துள்ளார்கள் என்பதை இத்தருணத்தில் நன்றியுணர்வுடன் நினைத்துப் பார்க்கின் றோம். இலண்டனில் எழுந்தருளி இருக்கும் கற்பக விநாயகர் ஈழத்தின் கிராமங்களுக்குள் போரினால் வலிசுமக்கும் தன் தமிழ்அடியார்களின் வாழ்வுக்கு ஆதாரமான சுருதியை இலங்குகிறான்.

தும்பிக்கையானில் நாம் கொண்ட நம்பிக்கைகளை திரு.கோபால் அண்ணர் அவர்கள் ஈழத்தமிழர்களின் இடர்களையும் பணியில் காண்கிற இந்த வேளையில் அவரூடாக எம்பெருமான் இலண்டன் ஸ்ரீ கற்பக கணபதி தன் பரிவாரமூர்த்திகளுடன் விழாக்கோலம் பூணும் நன்நாளுக்கு அடியேன் ஒரு வாழ்த்துச்செய்தி பகிர திருவுளங்கனிந்திருப்பதற்கு மிக்க நன்றிகள்.

அன்பும் அறமும் ஓங்குக!

நன்றி

சி. சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.



**ஆன்மீகம் மூலமாக அறப்பணி புரியும் ஆலயத்தின் சேவை வளர மனதார மட்டக்களப்பு மண்ணில் இருந்து வாழ்த்துகிறோம்.**

பிரித்தானியா நாட்டில் புலம்பெயர் உறவுகளின் உண்மைத் தெய்வமாய் பன்னிரண்டு ஆண்டுகள் "வோல்தம்ஸ்ரோ கற்பக கணபதி ஆலயம்" ஆரம்பிக்கப்பட்டு தற்போது மகா குடமுழுக்கு இடம்பெறும் நாளில் பரிதவித்த ஈழமண்ணின் சோகத்திற்கு விடிவுவர எம்பெருமானின் திருக்கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென முதலில் பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்த ஆலயத்தின் உதவிகளூடாக எமது தாயகமக்களின் அவலவாழ்வுக்கு பற்பல உதவி களை வாரி வழங்கி வந்தமையானது ஒரு ஆறுதலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு தந்து, வடக்கிலும், கிழக்கிலும் வதைகளால் காயப்பட்ட எம் உறவுகளுக்கு உரிமையுடன் உளமாற இந்த ஆலயத்தை வழி நடாத்தும் மதிப்பார்ந்த "கோபால்" அவர்கள் நேரடியாக எம்மண்ணிற்கு வருகைதந்து துன்ப துயரங்களை கண்டு தன்னாலான பலபணிகளையும், உதவிகளையும் மேற்கொண்டுவருவதை எவரும் இலகுவாக மறந்துவிடமுடியாது.

இன்று சமாதானம் எனக்கூறி ஐந்து வருடங்களாக திறந்த வெளிச்சிறைச்சாலையில் வாழும் எமது உடன்பிறப்புக்களுக்காக எஞ்சி இருக்கும் நம்பிக்கை புலம்பெயர் உறவுகள் மட்டுமே!

புலம்பெயர் உறவுகளின் உதவிக்கும் ஆப்புவைக்கும் நடவடிக்கைகள் தொடரும் இவ்வேளையில்தான் "வோல்தம்ஸ்ரோ கற்பக கணபதி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்" இனிதாய் இடம் பெறுகிறது, எல்லாம் வல்ல எம்பெருமானாம் கற்பகக் கணபதி தடைகளை உடைத்து தமிழினம் தலை நிமிர அருள்பாலிக்க வேண்டுமென பிரார்த்திப்பதுடன் இந்த விழா இனிதே நடந்தேற எனது சார்பாகவும், மட்டக்களப்பு மக்கள் சார்பாகவும், தமிழ் தேசிய கூட்டமைப்பு
சார்பாகவும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்,

**பா.அரியநேந்திரன்/அரியம்**
தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு மாவட்டம்

சுரேஷ். க. பிறேமச்சந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணம்

## வாழ்த்து செய்தி

இங்கிலாந்தின் லண்டன் மகாநகரில் வோல்தம்ஸ்ரோ என்ற இடத்தில் எழுந்தருளி இருக்கும் சிறீ கற்பக விநாயகர் ஆலயத்தின் கும்பாபிசேகத்துக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமையடைகின்றேன். அதிலும் எனது இட்ட தெய்வமாகிய விநாயகப்பெருமானுக்கு சிறியோனாகிய நான் வாழ்த்துச் செய்தியனுப்ப சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு, கோவில் நிர்வாகத்திற்கும் குறிப்பாக தலைவர் கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகரை அவரது கும்பாபிஷேகத்தின் போது தரிசிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தும், வேலைப்பழு காரணமாக வரமுடியாமைக்கு வருந்துகின்றேன்.

இலங்கையின் தமிழ் இனவொழிப்பு நடவடிக்கைகளால் ஈழத்தமிழ் மக்கள் உலகம் பூராகவும் விரட்டியடிக்கப்பட்டனர். இன்று ஏறத்தாழ 1.5 மில்லியன் தமிழ் மக்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்ரேலிய நாடுகளில் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ எமது மக்கள் தொகையில் அரைப்பகுதியினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்தில் 3 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்காம் என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலும் கூட, இடம்பெயர்ந்த மக்கள் தமது மொழி, மதம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணிப்பாதுகாத்து வளர்த்து வருவதென்பது பெருமைக்குரிய விடயம். ஈழத்தமிழ் மக்களிலும் விட புலம்பெயர் தமிழ் மக்கள் ஆடல், பாடல், சங்கீதம் போன்ற பல்துறைகளில் மிகப்புலமை பெற்றவர்களாக திகழ்கின்றனர். அதிலும் எமது 2 ஆம், 3 ஆம் தலைமுறைகள் ஈடுபாட்டுடன் செயற்படுவது வரவேற்புக்குரியது.

முன்னைய காலத்தில் ஆலயங்கள் தான் பள்ளிகளாகவும், கல்வி நிறுவனங்களாகவும், அரங்கேற்றும் அரங்குகளாகவும் செயற்பட்டன. அதேபோன்று புலம்பெயர் நாடுகளில் செயற்படும் ஆலயங்களும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமென எதிர்பார்க்கின்றேன். வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம் அவ்வாறான விடயங்களில் முன்னணியில் திகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அதுமாத்திரமல்லாமல் கற்பக விநாயகருக்கு கிடைக்கும் சிறிய வருமானத்தில் பெரும் பகுதி தாயகத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு சென்றடைகின்றது என்பதை இங்கிருந்து நாங்கள் நேரடியாகவே பார்க்கின்றோம்.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட அநாதைக் குழந்தைகளை இவர்கள் பராமரிக்கின்றார்கள், மகாதேவா ஆச்சிரமத்தில் குழந்தைகள் உணவருந்துவதற்கான மண்டபத்தை அமைத்துக் கொடுத்து இருக்கின்றார்கள் யுத்தத்தால் பாதிப்பட்ட கிளிநொச்சியில் ஒரு கணனிக் கல்லூரியை நடத்தி வருகின்றார்கள், இங்கும் 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இலவசமாக கணனிக் கல்வியை கற்று வருகின்றார்கள். இதனை விட கிழக்கு மாகாணத்திலும். கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை நல்கி வருகின்றனர். அவ்வகையில் கற்பக விநாயகருக்குக் கிடைக்கும் நன் கொடைகள் யாவும் மக்களைச் சென்றடைதல் என்பது போற்றுதற்குரியது.

இவ்வாலயம் மென்மேலும் வளர்ந்து சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் ஸ்தாபனமாக உயர வேண்டும். அதே போல் அவர்களுடைய கல்விப் பணியும் சமூகப்பணியும் மென்மேலும் தொடர வேண்டும். தனது பக்தர்களால் ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் வயிறார உணவு உண்ணுகின்றார்கள். குழந்தைகள் கல்வி பயிலுகின்றார்கள் என்ற பெருமை ஸ்ரீகற்பக விநாயகருக்கு ஏற்பட வேண்டும்.
உங்கள் சமூகப்பொறுப்பு மிக்க பணிகள் ஆலயத்தை இன்னும் பலபடி வளர்ச்சி நிலைக்கு முன் கொண்டு செல்லுமெனத் திடமாக நம்புகிறேன்.

இக்கோயில் வளர்ச்சிக்கும், ஈழத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் கோவில் தர்மகத்தா சபைக்கும் குறிப்பாக அறங்காவல் குழுத்தலைவர் திரு கோபாலகிருஷ்ணன் அவர்களையும் வாழ்த்துவதோடு இவ்வாலயம் பல நூறு வருடங்கள் வளர்ந்து மக்களுக்கு அருள்பாலிக்க வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகரின் பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.
நன்றி

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை

**FEDERATION OF YOUNG MEN'S HINDU ASSOCIATION**

BATTICALOA DISTRICT – SRI LANKA

**BT/D.Y.M.H.A**


பதிவு இல / Regd No: HA/04/BT/216

வங்கி இல / Bank No: 190-100180000518 மக்கள் வங்கி, களுவாஞ்சிக்குடி SWIFT CODE: PSBKLKLX

1105040264, SWIFT CODE : CCEYLKLX, Bank Code : 7056-105, கொமர்ஷியல் வங்கி, மட்டக்களப்பு

சீ.யோகேஸ்வரன் (M.P)
தலைவர்,
புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
Tel: 0776034559, 0718049439

சா.மதிசுதன் (JP)
பொதுச்செயலாளர்,
கிரான்குளம் மத்தி, கிரான்குளம்.
Tel: 0774445128

ந.புவனசுந்தரம் (JP)
பொருளாளர்,
செட்டிபாளையம், பட்டிருப்பு.
Tel: 0653654473


Date / திகதி 29/05/2014

## வாழ்த்துச் செய்தி

மேலைத்தேய நாடான பிரித்தானியா மண்ணில் ஸ்தாபிக்கப்பட்டு ஆன்மீகத்தையும், அறப்பணியையும் முன்னெடுத்துவரும் வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பக கணபதி ஆலயம் தமது பன்னிரண்டாவது வருடத்தை பூர்த்தி செய்து 2வது மஹா கும்பாபிசேக பெருவிழா காண்பதை இட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் ஆலயமானது அறப்பணி செம்மல் மதிப்புமிக்க கோபாலகிருஸ்ணன் அவர்களின் தலைமையிலான தர்மகர்த்தா சபையால் வழிநடாத்தப்பட்டு மிகச்சிறந்த நிலையில் சமய சமூகப் பணிகளை எமது இந்து சமூகத்துக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் வழங்கி வருவதை யாராலும் மறக்கவோ அன்றி மறுக்கவோ முடியாது.

கடந்த 02.09.2001இல் முதலாது கும்பாபிசேகத்தை பெற்ற இவ்வாலயம் வருடாந்த உற்சவத்துடன் மாத்திரமின்றி இந்துக்களின் விசேட தினங்களுக்கான பூசைகள், விரத கால பூசை நிகழ்வுகள் உட்பட பல பூசை நிகழ்வுகளை சிறப்பாக நடாத்துவதுடன், பண்ணிசை நிகழ்வு, முதியோர் ஆன்மீக மேன்பாட்டு நிகழ்வு, சிறந்த ஆன்மீகவாதிகளின் ஆன்மீக பிரசங்க ஒழுங்கமைப்பு, தமிழ் உணர்வாளர்களை ஆன்மீகத்துடன் இணைக்கும் செயற்பாடுகள் போன்ற பல ஆன்மீக மேன்பாட்டு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

எமது சமயம் சனாதன தர்மம் எனப்படுகிறது. இந்த வகையில் இவ்வாலயத்தினால் எமது ஈழத்திருநாட்டில் கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு துன்புறும் எமது தமிழ் உறவுகளுக்கு பல சமூகசேவை பணிகள் நடாத்தப்படுகின்றது என்பது வெள்ளிடை மலையாகும்.

குறிப்பாக வடக்கு மண்ணில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னார் போன்றவற்றிலும், கிழக்கு மண்ணில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்றவற்றிலும் இவ்வாலயம் பல சேவைகளை வழங்கியுள்ளது. அதுமட்டுமின்றி இவ்வாலயத்தினால் பல பணிகள் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.


மாவட்ட காரியாலயம் : இல.84, பார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 0776034559, 0718049439, 0653656608, 0652228018, 0652228273
தொலைநகல் : 0652228273 E-Mail: btdymha@gmail.com

# மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
# FEDERATION OF YOUNG MEN'S HINDU ASSOCIATION
## BATTICALOA DISTRICT – SRI LANKA
**BT/D.Y.M.H.A**

பதிவு இல / Regd No: HA/04/BT/216

வங்கி இல / Bank No: 190-100180000518 மக்கள் வங்கி, கருவாகுரிச்சுடி SWIFT CODE: PSBKLKLX

1105040264, SWIFT CODE : CCEYLKLX, Bank Code : 7056-105, கொமர்ஷியல் வங்கி, மட்டக்களப்பு

சீ.யோகேஸ்வரன் (M.P)
தலைவர்,
புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
Tel: 0776034559, 0718049439

சா.மதிசுதன் (JP)
பொதுச்செயலாளர்,
கிரான்குளம் மத்தி, கிரான்குளம்.
Tel: 0774445128

த.புவனசுந்தரம் (JP)
பொருளாளர்,
செட்டிபாளையம், மட்டக்களப்பு
Tel: 0653654473


Date / திகதி 29/05/2014

இந்தவகையில் எம் ஈழ நாட்டில் வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி போன்ற இடங்களில் மிகவும் வறிய ஆதரவற்ற பெற்றோரை இழந்த சிறுவர்களை பராமரிக்கும் செயற்பாடு, இயற்கையாகவும், யுத்தத்தாலும் கணவனை இழந்து வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியாத நிலையில் கஸ்டப்படும் கணவனை இழந்த பெண்களுக்கான சுய தொழில் வாய்ப்பு, வறிய இளைஞர் யுவதிகளுக்கான சுயதொழில் உதவிகள், இயற்கை அனர்த்தம் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசிய நிவாரண உதவி கள், வறிய மாணவர்களுக்கான கல்வி, கணனி பயிற்சிகள், பல்கலைக்கழக வறிய மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் செயற்பாடுகள் உட்பட பல தரப்பட்ட பணி-களை எமது மண்ணில் துன்புறும் எம் உறவுகளுக்காக வழங்கி வரும் பெருமை இவ் ஆலயத்துக்கு உண்டு.

உண்மையிலே ஒரு ஆலயம் என்பது சமூதாயத்தின் மையமாகும். இது சமூகத்துக்கு பல வழிகளிலும், வழிகாட்டுவதாகவும், வழிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். இக்கோட்பாட்டை இயன்றவரை இவ்வாலயம் பின்பற்றி வருவது பாராட்டத்தக்கதாகும்.

ஒரு ஆலயம் சிறந்து விளங்குவதற்கு இறைவனின் திருவருளும் இவ்வாலய தர்மகர்த்தா சபையினரினதும், இவ்வாலயத்தில் வழிபடும் பக்தர்கள், தொண்டர்களினதும் அயராத சேவையும், பங்களிப்புமே காரணமாக அமைகின்றது.

ஆகவே எமது மண்ணில் இருந்து புலம்பெயர்ந்தாலும் எமது மண்ணையும் எமது மக்களையும் மறவாமல் இன்றுவரை எமது சமூகத்தினதும், எமது சமயத்தினதும் பாரம்பரிய பண்பாடுகளை பேணிப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டும் எம் உறவுகளுக்கு தலை வணங்க என்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வகையில் இவ்வாலய தர்மஹர்த்தா சபைக்கும், விசேடமாக மதிப்புக்குரிய அறப்பணி


மாவட்ட காரியாலயம் : இல.84, பார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 0776034559, 0718049439, 0653656608, 0652228018, 0652228273
தொலைநகல் : 0652228273 E-Mail: btdymha@gmail.com

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை

FEDERATION OF YOUNG MEN'S HINDU ASSOCIATION

BATTICALOA DISTRICT – SRI LANKA

BT/D.Y.M.H.A

பதிவு இல / Regd No HA/04/BT/216

வங்கி இல / Bank No 190-100180000518 மக்கள் வங்கி, களுவாஞ்சிக்குடி SWIFT CODE: PSBKLKLX

1105040264, SWIFT CODE : CCEYLKLX, Bank Code : 7056-105, கொமர்ஷியல் வங்கி, மட்டக்களப்பு

சீ.யோகேஸ்வரன் (M.P)
தலைவர்,
புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
Tel: 0776034559, 0718049439

சா.மதிசுதன் (JP)
பொதுச்செயலாளர்,
கிரான்குளம் மத்தி, கிரான்குளம்.
Tel: 0774445128

ந.புவனசுந்தரம் (JP)
பொருளாளர்,
செட்டிபாளையம், பட்டிருப்பு.
Tel: 0653654473


Date / திகதி: 29/05/2014

செம்மல் கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கும், இலங்கை வாழ் இந்து, தமிழர்கள் ஆகிய நாங்கள் தாங்கள் மேற்கொள்ளும் சமய, சமூக பணிகளுக்கான நன்றியுடையவர்களாக உள்ளோம் என்பதை தெரிவிக்க விரும்புகின்றோம். தங்கள் பணி தடையின்றி தொடர இறை ஆசி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

இவ்வேளை இரண்டாவது தடவையாக நடைபெற்றும் இவ் ஆலய மஹா கும்பாபிடேகத்தில் வெளிவரும் இம்மலர் இவ்வாலயத்தின் சிறப்பையும், ஈழத்திருநாட்டின் துயர் துடைப்பில் இதன் பணிகளையும் பாரிலுள்ள இந்து தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டும் என எதிர்பார்க்கின்றேன். மஹா கும்பாபிசேக சிறப்பு மலருக்கு எனது நல்வாழ்த்தைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

S.YOHESWARAN (J.P)
President
Federation of Y.M.H.A
Batticaloa District
District Office, Batticaloa.

சீ.யோகேஸ்வரன் (பா.உ),
தலைவர்,
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை.


மாவட்ட காரியாலயம் : இல.84, பார் வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி இல : 0776034559, 0718049439, 0653656608, 0652228018, 0652228273
தொலைநகல் : 0652228273 E-Mail: btdymha@gmail.com

## ஆலய சிவாச்சாரியர்கள்



சிவஸ்ரீ.உ. ஆதித்த சிவாச்சாரியார்.    சிவஸ்ரீ. பா. வசந்த சிவாச்சாரியார்.

பிரும்மஸ்ரீ. சோ. பிரணவசர்மா    சிவஸ்ரீ. ப. கணேச சிவாச்சாரியார்.

சுகி. சிவம், B.A. B.L.

அலுவலகம்: 24995358
24984177

அன்புடையீர்,

வணக்கம். நலமே மலர்க.

சொந்த மண்ணிலிருந்து வந்த மண்ணுக்குத் தன் கடவுள், கலாச்சாரம், வாழ்வியல் வழிகளையும் சுமந்து செல்வது பாரட்டத் தக்கது.

சொந்தங்களை மறந்தாலும் சுயம் சார்ந்த பந்தங்களை மறவாதுபேணும் அடையாளமான திருக்கோயிலை வாழ்த்துகிறேன்.

தமிழர் கலை பண்பாட்டுக் களமாகத் திருக்கோயில் விளங்க என்றும் இறையருளை இறைஞ்சுகிறேன்.

குடமுழுக்கு மக்கள் ஒற்றுமையின் அடையாளமாக விளங்கட்டும். தனி மனித நல்லொழுக்கப் பண்பாடுகளைத் தமிழர் மறவாது உயர் வாழ்வு வாழ கோயில். பக்தி துணை நிற்க வாழ்த்துகிறேன்.

அன்பினிய

சுகி சிவம்

## SREE KARPAGA VINAYAGAR TEMPLE

**2-4 BEDFORD ROAD WALTHAMSTOW LONDON E17 4PX**
**(Charity No: 1092252 & Sponsor Licence No: MMJ20VRB5)**
**Telephone: 020 8527 3819**

ஜனனி அடுக்ககம், 313/9, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை – 600 018.
எஸ்.எஸ். பவுண்டேஷன், 20/21, வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, பெருங்குடி, சென்னை – 600 096. போன்: 24961110

# நிழலாடும் நினைவுகள்




முதல் கொடியேற்றம் 2002



ஐயப்ப மகரஜோதி வழிபாடு




பறவைக் காவடி 2007



சூரன்போர் கந்தசஷ்டி - 2012



"Vaadyavisharath, Kalaviththakar,
Kalajothy, Kriyarathna, Sivaagamavitpannar"

**Brahmasri A. N. Somaskanda Sarma M. Phil**

Hindu Priest - Vethagama Sabah, London.
Lecturer - Mirdangam & International Music Examiner

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனர் ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக ஆசிச் செய்தி:

"கற்பக விநாயகர் அடி தொழ
முற்பக வினையறும்"

ஐக்கிய ராச்சிய லண்டன் நகர் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகப் பதியுறை கற்பக விநாயகப் பெருமானின் முதலாவது புனர் ஆவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா 04-06-2014 வெள்ளிக்கிழமை நிகழ்வது அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சிப் பெரும் பேறாகின்றது. தரிசனங்களுள் சிறந்தது கும்பாபிஷேக தரிசனமேயாம். கோபுர கலச தரிசனமும் முக்கியத்துவமுடையது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்காதே" என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கமைய கிழக்கு திசையில் வீற்றிருந்து நாடளாவிய ரீதியில் அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் திருவருட் பார்வை கிழக்கில் உதயமாகி மேற்கே செல்லும் சூரியனின் ஒளிப் பிரவாகத்தைப் போலவே அனைவருக்கும் ஒரே வேளையில் கற்பக தருவின் செயற்பாட்டின் அடிப்படையில் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

கற்பகவிநாயகரின் திருவருளின் உந்துதலினாலேயே இக்கும்பாபிஷேகம் ஆலய நிர்வாகத்தினர், ஆலய குருமார்கள், பக்தர்கள் ஆகியோரினது மனங்களை உற்சாகமூட்டி இவ்வரு புண்ணியம் செய்ய ஏதுவாகியது. என்பது கற்பக விநாயகரின் திருவருளைப் பிரதிபலித்துக் காண்பிக்கின்றது.

இவ்வாலயம் பல்லாண்டு காலமாக பலவித சிறப்பு பூஜைகளையும், மஹோற்சவங்களையும் நிகழ்த்தியும், பக்தர்களுக்கு அருள் வழங்கியும், மேலும் "கற்பகம்" என்னும் பெயர் தாங்கி பல சமுதாய பேருதவிகளை தாய்நாட்டிலும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வகையிலேயே கற்பகவிநாயகரின் பணி தொடர்கின்றது என்பது மிகச் சிறப்புக் கைங்கர்யம்.

→

4, Thornton Row, Thornton Heath, Surrey, CR76JN, London, U. K.
Tel & Fax: 0044-208-6657639. Mobile : 0044-79-51908227 / 0044-79-61421722. Email: somaskanda3@hotmail.com

"Vaadyavisharath, Kalaviththakar,
Kalajothy, Kriyarathna, Sivaagamavitpannar"

**Brahmasri A. N. Somaskanda Sarma M. Phil**

Hindu Priest - Vethagama Sabah, London.
Lecturer - Mirdangam & International Music Examiner

ஆலயம் என்பதன் இலக்கணவிலக்கியத்திற்கேற்ப சேவை
புரிவதுடன் கும்பாபிஷேகதினத்தில் பக்தப்பெருமக்களுக்கு
வழிபாட்டுக்கான "கும்பாபிஷேகமலர்" என்னும் ஞானமலரை
மக்களுக்கு வழங்கவிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.
இம்மலரை மக்கள் பெற்று வாசமிகு வண்ணமிகு பொன்மல
ராக ஏற்று, கற்பகப்பெருமானுக்கு சொரிந்து, தங்கள் வேண்
டுதல்களை நிறைவேற்றி வாழ்வாங்கு வாழ வேண்டும் என
விநாயகப்பெருமான் திருவருளை வேண்டுகிறேன்.

ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகமும்,
கும்பாபிஷேக நறுமலராகிய கும்பாபிஷேகச்சிறப்பு
மலரும், சிறப்பாக அமைய வேண்டும் என நம் மக்களின்
சார்பில் அனைத்து தெய்வங்களின் ஆசி அருள் வேண்டிப்
பிரார்த்தித்து அமைகிறேன். அனைவருக்கும் எமது நல்லாசிகள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வமாகிறான்

கற்குஞ்சரக் கன்று நன்னில் - கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண். "என்பது திருவருள்"

"ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து:"

இப்படிக்கு
அ.நா. சோமாஸ்கந்தசிவாச்சார்யர்
10-06-2014 (சத்யோஜாதசிவம்)

4, Thornton Row, Thornton Heath, Surrey, CR76JN, London, U. K.
Tel & Fax: 0044-208-6657639. Mobile : 0044-79-51908227 / 0044-79-61421722. Email: somaskanda3@hotmail.com

# வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பக கணபதி ஆலய இரண்டாவது கும்பாபிஷேகத்திற்கான வாழ்த்துச்செய்தி



**"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்ற திருநாவுக்கரசரின் நாவார்ந்த வாக்கிற்கிணங்க தாய் நாட்டில் மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் தம் பெருமைதனை நிலைநாட்டி இந்த அறப்பணி செய்து வரும் வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பக கணபதி ஆலய பரிபாலன சபையினருக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை என்சார்பாகவும் மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லக்குழந்தைகள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்வதில் அளவிலா ஆனந்தமடைகின்றேன்

உலகில் சமூகப்பணியே தலைசிறந்த பணியென தன்னார்வ உளம் கொண்டு புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் ஆலயப்பணிக்கூடாக சமூகப்பணியையும் மக்களிடம் அதிகரிக்கச்செய்து வருகின்றமையும் போற்றுதற்குரியது.

எம் தாயகத்தில் கடந்தகால அசாதாரண சூழ் நிலைகளால் ஏற்பட்ட வடுக்களை நெஞ்சில் சுமந்து ஆதரவற்றவர்களாக கதிகலங்கி நின்ற பிஞ்சு உள்ளம் கொண்ட சிறார்களை அணைத்தெடுத்து ஆதரவுகாட்டி வரும் எமது சிறுவர் இல்லத்துக்கு இவ் ஆலயம் வழங்கி வரும் நிதி ஆதரவு என்றும் பாராட்டுக்குரிய ஒன்றாகும் என்பதனைக் குறிப்பிடுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

சிறுவர்கள் மாத்திரமன்றி யுத்த வடுக்களைச் சுமந்து சமூகத்தில் தனி மரமாக்கப்பட்ட பெண்களுக்கும் தம்மாலான பணிகளை தாயகத்தில் ஆற்றி வருவதற்கூடாக அவர்களின் வறுமை என்னும் ஆற்றாமையை தணிப்பதற்கு வழி சமைத்துள்ளது. இவ்வாறான சமூகப்பணிகளுக்கு ஊடாக எம் நாட்டு மக்களின் துயர் துடைத்துவரும் இவ்வாலய அறங்காவல் சபையினருக்கு என்றும் எம் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

அத்துடன் வறுமைப்பிணிக்குள் சிக்கித்தவிக்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவி நாளை நம்நாட்டில் நற் பிரஜைகளாக மிளிர வழிசமைத்துக் கொண்டிருக்கும் தங்களின் பணி என்றும் வாழ்க

இத்தகைய தன்னலமில்லா பிறர் நலத்திற்காக என்றும் தங்கள் முனைப்பான பணி நம்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

இவ்வண்ணம்
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்

வித்யாபூஷணம், வித்யா ப்ரகாசனர், சாதக சிரோமணி
**ப.சிவானந்த சர்மா B.A.(Hons)**
(கோப்பாய் சிவம்)
இந்து மதகுரு
**நிர்வாக இயக்குநர்**, வித்யா பவனம் – நூலகசேவை.
உரிமையாளர், ஸ்ரீவித்யா கணினி அச்சகம்.
**ஆசிரியர்**, "விவித வித்யா"
**தலைவர்**, சர்வானந்தமய பீடம்.
**ஸ்ரீநகரம், அளவோடை வீதி,**
**இணுவில், சுன்னாகம், இலங்கை.**

ௐ



Vidya Booshanam, Vidyaprakasana, Sathaka Siromani
**P. SIVANANDA SARMA B.A.(Hons)**
**(KOPAY-SIVAM)**
**Hindu Preast**
**MANAGING DIRECTOR** - VIDHYA BHAVANAM - LIBRARY SERVICES.
**PROPRITOR**-SRIVIDYA COMPUTER PRESS.
**EDITOR**- "VIVITHA VITHYA".
**PRESIDENT**- SARVANANDAMAYA PEEDAM.
'SRINAGARAM', Alavodai Road,
INUVIL, CHUNNAKAM, SRILANKA.

☎ 0094 (0)21 224 1504 email: kopaysivam@gmail.com

Date: 19.06.2014

## ஆசிச் செய்தி

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டா" எனும் ஔவை வாக்கிற்கிணங்க, நம்மவர்கள் தாம் சென்று குடியேறும் இடங்களிலெல்லாம் ஆலயங்களை அமைத்து வழிபாடியற்றி மகிழ்கிறார்கள். புலம்பெயர் நாடுகளில் இதனால் இந்து ஆலயங்கள் அநேகம் தோன்றிவிட்டன. நமது கலை, பண்பாட்டுச் சின்னங்களாகவும், கலாசார மையங்களாகவும் திகழ்பவை நமது ஆலயங்களே. அதனால், குடியேறிய இடங்களின் கலை, பண்பாட்டம்சங்களில் சிலவற்றை ஏற்றுக்கொண்டபோதிலும் நமது பாரம்பரியத்தை விடாமல் பேணவும் நமது அடுத்த தலைமுறையினருக்கு அவற்றை எடுத்துச் சொல்லவும் நமக்குத் துணைபுரிவன நமது ஆலயங்களே.

இவ்வகையில் இங்கிலாந்து நாட்டில் நீண்ட காலத்திற்கு முன்னரே அமைக்கப்பெற்று வெகுசிறப்பாக நடைபெற்று வருவது 'வோல்தம்ஸ்ரோ' என்னும் பதியில் இருக்கும் கற்பக விநாயகர் ஆலயமாகும். இங்கு வேண்டுவார் வேண்டுவன ஈபவராக பெயருக்கு ஏற்ற முறையில் அருள் பாலித்து வருகிறார் கற்பக விநாயகர்.

இவ்வாலயத்திலே புனருத்தாரண வேலைகள் நடைபெற்று இப்போது மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது. புதுமெருகூட்டப்பட்டு அழகுறக் காட்சி தரும் ஆலயத்திலே சிவாகம முறைப்படி ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதன்மூலம் அங்கு வாழும் அடியவர்கள் கற்பக விநாயகரின் கருணைப் பொலிவினால் பெருவாழ்வு வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தக் கும்பாபிஷேகப் பெருவிழாவின் சிறப்பு வெளியீடாக மலர் ஒன்றும் வெளிவருவதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

ஆலயத்தின் அருட்பொலிவை அதிகரிக்கும் வகையில் தமது கைங்கர்யத்தைச் செய்கின்ற சிவாசார்யப் பெருந்தகைகளும், பரிபாலன சபையினரும், அடியார்களும், இம்மலர்க் குழுவினரும், இப்பணிகள் யாவற்றிலும் பங்குகொண்டிருக்கும் கொடையாளர்களுக்கும் எம்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அனைவர்க்கும் நல்லாசி கூறுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இங்ஙனம்,
ப. சிவானந்த சர்மா
(கோப்பாய் சிவம்)

முதலாவது மஹோற்சவம் தேர் 2002





ௐ

**காயத்ரீ பீடம், தர்மசாஸ்தா குருகுலம்**

அதிபர்,

'சிவாகமஞான பாஸ்கரன்'

**சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்**



**SIVASRI**
**T. MAHADEVA KURUKKAL**
GAYATRI PEETAM
**DHARMASASTA GURUKULAM**
**INUVUL, CHUNNAKAM.**



T.P. 021 224 1560

ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யாலயம்
இணுவில், சுன்னாகம்.

திகதி : 10.06.2014

வால்தம்ஸ்ரோ திருவருள்மிகு கற்பக
விநாயகராலய புனராவர்த்தன மஹா
கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
பிரார்த்திக்கிறேன். மஹா கும்பாபிஷேகத்தின்
பெறுபேறு கர்ப்பக்கிருகத்தில் ஸ்தாபிக்கப்படும்
விக்ரகங்களில் தெய்வ சான்னித்யத்தை
ஏற்படுத்தி ஸ்திரப்படுத்துவதாகும்.
சிவாசாரியர்கள் மந்திரம் கிரியை பாவனை
கள் மூலம் இக்கைங்கர்யத்தை நடாத்தி
வைக்கிறார். கும்பாபிஷேகம் நிறைவெய்திய
வுடன் விநாயகப் பெருமானை.
சூர்ய சந்திரர்கள் உள்ளவரை தாங்கள்
இந்த மூர்த்தியில் சான்னித்யமாக
இருந்து அருள் புரிய வேண்டும் என்று
பிரார்த்திக்கிறார்கள் அதே பிரார்த்தனை
யை நானும் விநாயகப் பெருமானிடம்
சமர்ப்பித்து கும்பாபிஷேகத்தின் பயனை
லண்டன் மாநகர ~~மக்க~~ சைவப் பெருமக்கள்
சிறப்புற வாழ பிரார்த்திக்கிறேன்.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

Sivasri T.Mahadevakurukkal (J.P)
97/10/N.E/J/A/1733
Inuvil, Chunnakam

# CARLTON LEISURE

Worldwide Travel & Tours



கடந்த எட்டு வருடங்களாக இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்.

SriLankan Emirates QATAR BRITISH AIRWAYS Specialist Partner JET AIRWAYS ETIHAD ROYAL JORDANIAN OMAN AIR KUWAIT AIRWAYS

## UNBEATABLE FLIGHT OFFERS
## Colombo/Chennai/Canada

price match guarantee

Special Family Discount

OFFERING MOST GENEROUS BAGGAGE ALLOWANCE



Worldwide Holidays

**SOUTH INDIA TEMPLE TOUR 14 Nights**

Tour Highlights: Chennai, Tirupati, Kanchipuram, Mahabalipuram, Tiruvannamalai, Pondicherry, Chidambaram, Tanjore, Trichy, Madurai, Rameshwaram, Kanyakumari, Trivendrum, Kovalam

**KENYA & TANZANIA SAFARI 14 Nights**

Wildlife Highlights: Lion, Elephant, Buffalo, leopard, cheetah, hippos, crocodiles, wildebeest, zebra, antelope, gazelle, impala, waterbuck, topi, eland, plains game, giraffe and rhino.

www.carltonluxuryholidays.com

GOLD AWARD WINNER 2012/2013




தமிழில் உரையாடி உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

## HOTLINE: 0208 100 0000

IATA

EAST HAM — 7 STATION PARADE, EAST HAM, LONDON, E6 1JD — 020 8586 7675

ILFORD — 742 EASTERN AVENUE, ILFORD, ESSEX, IG2 7HU — 020 8554 4200

TOOTING — 233 MITCHAM ROAD, TOOTING, LONDON, SW17 9JG — 020 8672 5757

HARROW — 299 RAYNERS LANE, HARROW, MIDDX, HA5 5EG — 020 8426 1266

For worldwide flights Book Online **www.carltonleisure.com**




உ

Sivashri"kayilai" T.N.MUTHUGURUKKAL("aagama praveenar")

Dharumai aadhinam – Thirukkadaiyur

Sri Amruthakadeswara Swami devashthana achagar

Thirukkadaiyur-609311 TAMILNADU

கிழக்கு லண்டன் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் கும்பாபிஷேக வைபவம் கண்ணுரும் அனைத்து ஆன்மாக்களுக்கும் நினைத்தை கொடுக்கும் அற்புதம் ஈன்ற கற்பக களிர் பூரணமாக அருள் புரிய இறைஞ்சுகிறேன்! உலகுக்கு வியாசர் சொல்லிய மஹாபாரதத்தை தனது தந்தத்தை ஒடித்து எழுதிய முதல் எழுத்தாளர்! ஔவையாரை விநாயக அகவல் யோகநூல் செய்ய வைத்து ஸ்ரீ சுந்தர் கயிலை செல்லும் முன்பாக தனது துதிக்கையால் சேர்பித்தவர்!! திரிபுரங்கள் எரித்த சிவபெருமானின் தேர் அச்சு முறித்து விக்னங்களை போக்க முதல் வழிபாடு செய்ய அங்காரம் பெற்றவர்! அகஸ்திய முனிவரின் சாபத்தை வரமாக்கி காவேரி நதியை பாரதத்திற்கு தந்தவர்! சந்திரனின் பதினாறு கலைகள் தட்சன் சாபத்தினால் ஒவ்வொரு நாளும் குறைய தனது கருணையினால் சங்கடங்களை நீக்கிய சங்கடஹரர்! ஓவ்வொரு உயிரின் குண்டலினி சக்தியாக மூலாதாரத்தில் வீற்றியிருப்பவர்! ஆறு ஆதாரத்தில் முருகப்பெருமானின் ஆறுபடை வீட்டில் இருப்பது போல வினாயகரும் ஆறுபடைவீட்டில் அருளுகிறார்!

திருவண்ணாமலை ஸ்ரீ செந்தூரகணபதி –முதல்படைவீடு! முதுகுன்றம் (விருதாசலம்) ஸ்ரீ ஆழத்து விநாயகர் இரண்டாவது படைவீடு! இவ் ஊர் மணிமுத்தா நதியில் ஸ்ரீசுந்தரர் 12 ஆயிரம் பொன் பதிகம் பாடி திருவாருர் கமலாய குளத்தில் பதிகம் பாடி பெற்றார்! திருக்கடவூர் ஸ்ரீகள்ளவாரணவிநாயகர்! மூன்றாவது படைவீடு! மதுரை ஸ்ரீமுக்குருணி விநாயகர்! நான்காவது படைவீடு! காசீ ஸ்ரீ துண்டி விநாயகர் ஐந்தாவது படைவீடு! திருமுறைகளை சிதம்பரம் ஸ்ரீநடராஜசபையிலிருந்து எடுத்து கொடுத்த திருநாரையூர் ஸ்ரீபொள்ளாபின்ளையார் ஆறாவது படைவீடாக அருளுகிறார்!

"கூறும் திருவருனை கூப்பா முதுகுன்றம்-வீறு கடவூர்

விண்முட்டும் மாமதுரை காசீ மருவு திருநாரையூர்

வேழமுகத்து அறுபடை வீடு! !என சான்றோர்கள் வாக்கு"

ஒரு சமயம் தூர்வாச முனிவர் சிதம்பரம் ஸ்ரீ நடராஜரை தரிசிக்க தனது சீடர்கள் பலருடன் அகால வேளையில் வருகிறார்கள்! ஒரு சத்திரத்தில் தங்குகிறார்கள்! அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலமான சிதம்பரத்தில் அன்னை பராசக்தி ஸ்ரீ சிவகாமி அம்மை அந்தணர் பெண்ணாக உணவு பரிமாற வருகிறாள்! ஸ்ரீநடராஜரை தரிசிக்காமல் உணவு அருந்த மாட்டோம்! என பிடிவாதமாக இருந்த முனிவர் முன் தனது உடலில் பூசிய மஞ்சளை ஒன்று திறட்டி பிடித்து போட்டாள்! ஆந்தமஞ்சள் உருண்டை துள்ளி குதித்து நட்டியம் ஆடி நிருத்தன விநாயகராக காட்சி கண்டு உணவு உண்டார்கள்! அது முதல் இன்றுவரை பிள்ளையார் பூஜை துவக்கத்தில் மஞ்சள் பிடித்து ஹரித்ரா கணபதியாக வழிபடுவது வழக்கத்தில் உள்ளது! ஸ்ரீ கற்பகவிநாயகர் அருள் பெற்று எல்லோரும் வளம்பெற்று வாழ்வாங்கு வாழ்வோம்!!

**திருக்கடவூர் கயிலை -சிவஸ்ரீ டி-என் முத்துகுருக்கள்**

# தமிழ் நாடு அர்ச்சகர்கள் சமூக நலச்சங்கம் 121/90


**எஸ்.அருணாசலம்** B.A., B.L.,
மாநிலத் தலைவர்
புதுப்பாளையம் மெயின் ரோடு,
கடலூர் – 1,
போன் : 215886 செல் : 98430 30886

**ச.கஜேந்திர அய்யங்கார்**
மாநிலத் துணைத் தலைவர்
2/12, மாயாண்டி சந்து,(விநாயகர் கோவில்சந்து)
உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம் – 642 126.
Ph : 04252 - 231799 Cell : 98420 64263

**புலவர் இரா. பாலசடாட்சரம்**
மாநிலப் பொதுச் செயலாளர்
O.A. 1, யாகசாலைத் தெரு,
கும்பகோணம்.
போன் : 2425679 செல் : 94437 36506


## வாழ்த்துச் செய்தி

கிழக்கு லண்டனில் வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஓர் வரப்பிரசாதி என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். **"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்பதும், **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பதும் நம் முன்னோர் வாக்கு. ஒவ்வொருவரும் தங்களது வீட்டில் தங்கள் நலனுக்காகவும், தங்கள் குடும்பத்தார் நலனுக்காகவும் செய்வது ஆத்மார்த்த பூஜை. ஊரின் பொது இடங்களில் ஆலயங்கள் அமைத்து இறைவனை பல்வேறு திருஉருவங்களில் எழுந்தருளச் செய்து அங்கு செய்யப்படுகின்ற பூஜை பரார்த்த பூஜை எனப்படும். பரார்த்த பூஜை என்பது உலகத்தில் உள்ளோர் அனைவரின் ஷேமத்திற்காக ஆலயங்களிலே செய்யப்படுகின்ற பூஜை.

இறைவனது பல்வேறு திரு உருவங்களுள் விநாயகர் திருவுருவமும் ஒன்று. விநாயகர் இந்துக்களால் முழுமுதற் கடவுளாக வணங்கப்படுகிறார். அவரை எந்த உருவத்திலும் வழிபடுவதுண்டு. மஞ்சளை பிடித்து வைத்து அதை விநயாகராக வழிபடுவர். சந்தனத்தை உருட்டி வைத்து அதனை விநாயகராக வழிபடுவர். ஒருபிடி மண்ணை பிடித்து வைத்து அதில் விநாயகரை வழிபடுவார்கள். ஏன் பசுஞ்சாணத்தை உருட்டி வைத்து அதில் விநாயகரை வழிபடுவார்கள். மேலும் யானைத்தலையுடனும், ஒற்றை தந்தத்துடனும், தும்பிக்கையுடனும், தொங்கும் வயிற்றுடனும் உள்ள விநாயகருக்கு பல்வேறு த்யான ஸ்லோகங்கள் உள்ளன. விநாயகரை எவ்வுருவிலும் வழிபடலாம் என்பதோடு அல்லாமல் எங்கும் வழிபடலாம். மூலை முடுக்குகளில், நாற்சந்திகளில், மரத்தடிகளில் என்று எல்லா இடங்களிலும் எத்திசையை பார்த்த வண்ணமும் விநாயகர் அமர்ந்திருப்பது அவரது தனிச் சிறப்பாகும். விநாயகரே வேண்டும் வரங்களை தரக்கூடியவர். அதேபோல கற்பகமும் வேண்டும் வரங்களை தரக்கூடியது. இவ்விரு நாமங்களையும் தாங்கியிருக்கும் கற்பக விநாயகர் **"பால் நினைந்து ஊட்டும் தாயினைப் போல"** அவரவரது தேவைகளை அறிந்து அருள்பாலிக்க வல்லவர் என்பது கண் கூடு.

எதிர்வரும் **04.07.2014** அன்று நடைபெற இருக்கும் "ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய" மஹாகும்பாபிஷேகத்தை ஒட்டி ஓர் மலர் வெளியிடப்படுவது மிகமிகப் பொருத்தமே. கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறவும், மலர் நல்ல பலவிஷயங்களை தாங்கி வந்திடவும் வேண்டி அற்புத அருள்புரி கற்ப கணபதி பொற்பதம் போற்றி நிற்கிறேன்.

வணக்கம்!

S. Arunachalam




உ

சிவமயம்

**வேதாகம வித்யா பூஷணம், சிவாகம ரத்னா**

**பிரம்மஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா (வி. சோமசுந்தர ஐயர்)**

(சர்வ சாதகர் - ஆகம ஆலோசகர்)

**SRI. VISHVANARAYANA SHARMA (V. Somasunthara Iyer)**

(Aagamic Executive)

20C 2/1,
Fernando Gardens,
Dehiwala, Sri Lanka.
Telephone: +94 112734722
Mobile: +94 722849104
E-mail: ushanarayanasharma@gmail.com


Date: ....01-05-2014........

---

உ

கணபதி துணை

## ஆசிச் செய்தி

ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஷண்மதங்களில் காணபத்தியம், கணபதியை முதல் தெய்வமாகக் கொண்டது. ஸ்ரீ விநாயகர் இந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளிலும், வழிபாட்டில் முதலிடம் பெறுகிறார். பலவித வடிவங்களில் முறையே, பதினாறு (16), முப்பத்திரண்டு (32), அறுபத்தி நான்கு (64) என விநாயக புராணமும், வேறு பல கிரந்தங்களும் கூறுகின்றன. தேவலோக கற்பக தரு போல் வாரி வழங்குவதால் கற்பக விநாயகன் என சைவப் பெரும் மக்களால் உலகம் எங்கும் ஆலயம் அமைத்து வழிபடும் பெருமைக்குரியவர்.

இவ்வகையில் பூவுலகின் மிகச் சிறந்த நாடாகிய இங்கிலாந்து தேசத்தில் 'வோல்தம்ஸ்ட்ரோ' எனும் பகுதியில் அழகிய கற்பக விநாயகர் கோவில் கொண்டருளுகின்றார். இவ்வாலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு ஆனித் திருமஞ்சள் நாளில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

சிறந்த சிவாச்சாரியார்கள், உயர்ந்த பரிபாலன சபை, நிறைந்த பக்தர்களுடன் நடைபெறும் மஹா கும்பாபிஷேகமும், பிரசாதமாக மலரும் கும்பாபிஷேக மலரும் சிறப்புற ஒரு மருப்பான் பாதம் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

வேதாகம வித்யா பூஷணம்
சிவாகம ரத்னா
பிரம்ம ஸ்ரீ விஸ்வநாராயண குருக்கள்
கொழும்பு
ஸ்ரீ லங்கா

# WALTHAM FOREST TAMIL SANGAM
## வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்



உ

## மஹா கும்பாபிஷேகம் காணும் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்

கிழக்கு லண்டனில் வேண்டுவார்க்கு வேண்டும் வரங்கள் பல ஈந்தருளும் அற்புத அருள்புரி கற்பகக்கணபதியானின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 04.07.2014 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மிகக்குறுகிய காலத்தில் எம்பிரானின் திருக்கருணையினால் பெருமளவிலான புனருத்தாபன வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 02.07.2014 எண்ணெய்க்காப்புடன் 04.07.2014 அன்று கும்பாபிசேகம் காணவுள்ளது அற்புதமே.

வோல்தம்ஸ்ரோவில் கற்பகபதியில் கற்பக விநாயகர் உறைந்திருந்து இங்கு வாழ் மக்களுக்கு நல்லருள் புரிவதோடு சகல திருவிழாக்களையும் சிறப்பாக நடாத்துவித்து விசேடமாக பாற்காவடி, பறவைக்காவடி, பிரதட்டைகள், பாற்சொம்பேந்துதல், கற்பூச்சட்டி ஏந்துதல் போன்ற சைவத்தின் பிரதிபலிப்புக்களை புலம்பெயர்நாட்டில் சிறப்பாக நடாத்துவித்தும், புலம்பெயர் சிறார்களுக்கும் இவற்றை உணர்த்துவித்தும், இங்கு வாழ் சைவ அன்பர்களை சிறந்த நற்சீலராக சைவ சமயத்தை முறையாக ஒழுகுபவர்களாக வாழ வைத்திருக்கின்றார். புலம்பெயர் சைவச்சிறார்கள் விருப்பத்தோடும் பக்தியோடும் தாமாகவே கற்பகனை வேண்டி வணங்குவது நாளாந்தம் பார்க்கக் கூடியதொன்றாகும்.

இந்த வகையில் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கமும், அதன் அங்கமாக தமிழ்ப்பாடசாலையும் இவ்வாலயத்துடன் நெருங்கிய பிணைப்பில் இருப்பதும், சங்க அங்கத்தவர்களும் பாடசாலை மாணவர்களும் திருவிழாக்காலங்களிலும் ஏனைய சிறப்பு நாட்களிலும் தொண்டர்களாக, அடியார்களாகப் பங்குபற்றுவதும் சிறப்பானதாகும். தமிழ்ப்பாடசாலை மாணவர்கள் இங்கு பஜனைகள் வைப்பதும், தோத்திரப்பாடல்கள் ஓதுவதும், நடனம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் வைப்பதும் ஆலயத்திற்கும் பாடசாலைக்கும் உள்ள நெருக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி மிகப்பெரிது. தமிழ்த் தொலைக்காட்சிகள் மூலம் இவ்வாலயத்தின் திருவிழாக்கள் அகில உலகெங்கும் ஒளிபரப்பப்படுவதால் அனைவரும் அறிந்த இவ்வாலயம் பிரசித்தி பெற்றது. தமிழகத்திலிருந்தும் ஈழத்தில் இருந்தும் பிரபலமானவர்கள் இங்கு வந்து சொற்பொழிவாற்றித் தரிசித்துச்சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதுமட்டுமன்றி இவ்வாலயத்தின் மூலம் தாயகத்தில் அனாதரவற்று வாழும் எமது சிறார்களைப் பராமரிப்பது, மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களுக்கு உதவியளிப்பது போன்ற தொண்டுகளும் இடையறாது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

அத்துடன் புலம்பெயர் நாட்டில் மனச்சிக்கல்களுக்கு ஆளாகியிருப்பவர்கள், வாழ்வில் விரக்தியுற்று இருக்கும் அனைத்து வயதினரையும் அரவணைத்து அவர்களுக்கு நல்யோசனைகள் வழங்கி, சமுதாயத்துள் அவர்களை நல்ல முறையில் உள்வாங்குவதும் இவ்வாலயத்தின் சிறப்புப்பணியாகும். கற்பக விநாயகன் தொடர்ந்தும் இங்குவாழ் சைவப்பெருமக்களுக்கு நல்லாசிகள் வழங்க வேண்டும் என்றும் தாயக மக்களின் துயர் துடைக்க அருட்கண் பார்க்கவேண்டும் என்றும் வேண்டி அமைகின்றேன்.

அற்புத அருள்புரி கற்பக கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

பால.ரவீந்திரன்(பாலரவி)
தலைவர்
வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்

tel : +44 20 8503 6643 | fax: +44 20 8521 3967
59 - 61, Hoe Street | Walthamstow | London E17 4QR
e-mail: info@wfts.org.uk | web : www.wfts.org.uk

# Tamil Elders Welfare Association (TEWA)

Walthamforest.

## தமிழ் மூத்தோர் நலன்புரி அமைப்பு – வோல்த்தம்பொறஸ்ற்

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX, Tel: 020 8527 3819
Tuesdays :- From 09:30am to 1:30pm

01-08-2001ம் திகதி மேற்படி அமைப்பு கற்பக விநாயகர் ஆலய கேட்போர் கூடத்தில் ஆலய நிர்வாகத்தினரின் ஆதரவுடனும், ஆலய அந்தணர்களின் ஆசியுடனும், மூத்தோர் பலரின் ஆதரவுடன் ஆரம்பாகி இன்று வரை கற்பக விநாயகரின் ஆசியால் எந்தவித குறையுமின்றி வாராந்தம் பிரதிச்செவ்வாய்க்கிழமைகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை 45 அங்கத்தினர்களுடன் நடைபெற்று வருகின்றது.

பிரதானமாக மூத்தோரின் சுக வாழ்வையும், மன ஆறுதலையும், நிம்மதியையும் முன்னிலைப்படுத்தியே அமைப்பின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

காலை 10.00 மணியளவில் யோகாசனப்பயிற்சியுடன் ஆரம்பமாகும் நாள், தொடர்ந்து அதனால் கிடைக்கும் நன்மைகள், பயன்பாடுகள் பற்றிய சிறு விளக்கத்துடன் நிறைவேறும். வருடத்தில் 3 அல்லது 4 முறை நடைபெறும் யோகாசனப்பயிற்சி முகாமில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் உரைகளுடன் கூடிய பயிற்சிகள் இடம் பெறும்.

அடுத்து சுகவாழ்விற்கு முக்கியமாகத் தேவையான உடற்பரிசோதனைகளான குருதி அழுத்தம் சலரோகம், முதலான பரிசோதனைகளும், அவற்றிற்கான விளக்க உரைகளும் வருடத்தில் 3 அல்லது 4 முறை வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்டுள்ள குறைகளுக்கான விளக்க உரைகளும் இடம் பெறும்.

கடற்கரைச் சுவாத்தியத்தின் பயன்பாடு கருதி கோடை காலத்தில் 2 அல்லது 3 முறை கடற்கரைப் பிரயாணங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கோடை காலச்சுற்றுலாக்களின் வரிசையில் இந்நாட்டிலுள்ள ஆலயங்கள், பிரசித்தி பெற்ற, சரித்திர சம்பந்தமான இடங்கள், பட்டினங்கள், நகரங்களையும், பார்த்து வரத்தவறுவதில்லை.

மற்றும் தமிழ் நாட்டிலிருந்தும், இலங்கையிலிருந்தும் இங்கு வருகை தரும் சமய, தமிழ் இலக்கிய நன்நெறிகள் மற்றும் வாழ்க்கைத்தத்துவங்கள் முதலியவற்றில் பாண்டித்துவம் பெற்ற அறிஞர்களுடன் இந்நாட்டு அறிஞர்களையும் வரவழைத்து அவர்களின் சொற்பொழிவுகளுக்கும் ஒழுங்கு செய்து பயனடைகின்றனர்.

அத்துடன் செவ்வாய்க்கிழமைகளில் ஆலயத்தில் நடைபெறும் "மதிய பூசையில்" தவறாது பங்கு பற்றி கற்பக விநாயகரின் ஆசியையும், பிரசாதத்தையும் பெறும் பாக்கியம் கிடைத்துள்ளதை நினைத்து அமைப்பினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

மேலும் "வசந்த நவராத்திரி" விழாக்களில் ஒரு நாள் விழாவை "மூத்தோர் அமைப்பு" பங்கேற்று நடாத்துவதுடன், சிறிய சிறிய பூசைகளிலும் பங்கேற்று கற்பக விநாயகரின் அருளைப்பெற்று ஆத்ம திருப்தியுடன் "மூத்தோர் அமைப்பு" நலமே நடைபெற்று வருகின்றது.

மூத்தோர் அமைப்பை நல்ல முறையில் நடாத்தி வருவதற்குச் சகல உதவிகளையும், ஆதரவையும் தந்து உதவிக்கொண்டிருக்கின்ற கற்பக விநாயகர் ஆலய நிர்வாகிகளுக்கும், மதிப்பிற்குரிய அந்தணர் பெருமக்களுக்கும், ஆலயத்தொண்டர்களுக்கும் "மூத்தோர் அமைப்பு" மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

# ஆலய வரலாறு

கோயில்கள் சைவநெறி தழைத்தோங்கவும், மானிடம் உலக வாழ்வூடாக ஆன்மீக நெறியில் சென்று இறை திருவடிப்பேறு பெற்று பேரின்பம் பெறவும் நம் முன்னோர்கள் ஊர்கள் தோறும் ஆலயங்கள் அமைத்து வழிபட்டனர்.

உலகெலாம் உணர்ந்தோதுதற்கு அரியவனாகிய இறைவனை எளியராக்கி திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்தனர். தனிமனித மனங்களில் கருக்கொண்ட கோயிலின் தோற்றம் நிலையான கோயில்களாகின. குடியிருக்கும் இடமெல்லாம் கே-ாயில் கண்டவர்கள் தமிழர்கள். அவ்வாறு தோற்றம் பெற்றது தான் வோல்தம்ஸ்ரோ கற்பகவிநாயகர் ஆலயம்.

ஓர் இனத்தின், ஓர் அரசின் திருத்தல வரலாற்றினை எழுத பலவகையில் ஆராய்தல் வழமை, புதைபொருள் ஆய்வு, கல்வெட்டுக்கள் செப்பேடுகள், எழுத்தாவணங்கள் என்பவற்றை ஆய்வு செய்வர். அரசுக்கோ அன்றி அரசால் கூட்டப்பட்ட திருக்கோயில்களுக்கோ மேற்குறிப்பிட்ட ஆதாரங்கள் உண்டு. மக்களால் / தனி மனிதனொருவனால் ஸ்தாபிக்கப்படும் கோயில்களுக்கு ஆதாரங்கள் பெறுதலரிது.

இப்புனித ஸ்தலத்தின் வரலாறு ஒன்று எழுத்தில் அமைக்கப்படவேண்டும் என்பதற்கமையவும் எமது ஆலய வரலாற்றினை எமது எதிர்கால சந்ததியினரும், இன்றைய இளம் சந்ததியினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் இதனை வெளியிடுகிறோம். மேலும் இவ்வாலயத்தை உருவாக்க எடுத்த முயற்சிகள், எமது அறங்காவலர்களும் மற்றும் அடியார்களும் ஆற்றிய பணிகள் அனைவரும் அறிய வேண்டும் எனக்கருதி இதனை வெளியிட விரும்புகிறோம்.

தியாகமும், சேவையும் தமது பண்பாட்டிலும் சமயத்திலும் இணைந்து வாழ்பவர்கள் தமிழ் மக்கள். வாக்காலும் மனத்தாலும் காயத்தாலும் ஒன்றுபட்ட தூய நினைப்போடு இவ்வாலயத்தை ஆரம்பித்து வைத்தவர்களையும் சேவை செய்தவர்களையும் அவர்களின் பணிகளையும் நினைவு கூர்வதே நாம் அவர்களுக்கு செய்யும் நன்றிக்கடன்.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என் கொல் புகாதே"

- அப்பர் சுவாமிகள்.

கோயில் வெறும் கட்டடம் அன்று. அது தத்துவ அமைப்பு. அவ்வமைப்பின் நுட்பம் தெரியாது கும்பிட்டால் அது கல்லாக மண்ணாக வேடிக்கையாகவே தோன்றும்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்துள் மறைந்தது மாமத யானை

யானையாக மரத்தைப் பார்த்தால் யானையாகவும், மரமாக யானையைப் பார்த்தால் மரமா-கவும் எம் கண்களுக்கு தோன்றுவது எமது ஒன்றிப்போதலின் தன்மை. இவ்வாறே எமது வழிபாடும் அமைய வேண்டும். இறைவனிடத்தில் நாம் நம்மை அர்ப்பணிக்கவேண்டும்.

அப்போதுதான் எமக்கு இறைவன் தெரிவான், நாம் வேண்டுபவற்றை அருள்வான்.

ஒருவர் படுத்திருக்கும் முறையில் கோயில்கள் அமையப்பெறுகின்றன. கால்கள் - முன்கோபுரம், மூலாதாரம் - கொடித்தம்பம், தொப்புள்கள் - பலிபீடம், சிரசு - கர்ப்பகக்கிரகம், சிரசின் மத்தி - மூலஸ்தானத்திலுள்ள தாமரைப்பூவும் கண்ணாடியும் - தீப ஒளி - இறைவனின் அருவுருவம்.

இங்கிலாந்து நாட்டிலே திருக்கோயில்கள் பெரும்பாலானவை கிறீஸ்தவ தேவாலயங்களே. கிறீஸ்தவர்களால் பெரும்பாலான தேவாலயங்கள் இந்நாட்டிலே கைவிடப்பட்டு வரும்வேளையில் இந்து ஆலயங்கள் பெருகி வருவது சிறப்பானதொன்று.

1990களுக்கு முன் இந்நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆலயங்களே இருந்தன. ஆனால் 2000ம் ஆண்டின் பின் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு விட்டன. 2010ம் ஆண்டிலும் மேலும் 2 அல்லது 3 புதிய ஆலயங்கள் ஆரம்பமாகி வருகின்றன.

இங்கிலாந்து நாட்டின் தலைநகரம் இலண்டன் மாநகர். இவ்விலண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் அமைந்தது வோல்தம்ஸ்ரோ. இது வோல்தம் பொறஸ்ட் மாநகராட்சியின் ஒரு பகுதி. இந்நகரத்திலேயே உலகிலேயே மிக நீளமான நடைபாதைச் சந்தை அமைந்து இந்நகரத்திற்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்றது.

இந்த வோல்த்தம்ஸ்ரோ பகுதி கட்டட வேலையாட்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு நகரம். இங்கிருந்தே அயலிலுள்ள சகல கிராமங்களுக்கும் வேலையாட்கள் சென்று குடிமனைகளும் அவைசார் கூட்டங்களையும் கூட்டியுதாக வரலாறு கூறுகிறது. இதனாலேயே பெரும்பாலான கட்டிடங்கள் வீடுகள் எல்லாம் ஒரே வகையான அமைப்புடன் அப்போது காணப்பட்டனவாம். ஆனால் இன்று அவை மாற்றம் பெற்று வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வாலயம் அமைந்த நாற்சந்தி "Bell corner" என்றழைக்கப்படத் தொடங்கி விட்டதாகவும் வரலாறு கூறுகிறது. "Bell" என்பதன் அர்த்தம் தமிழில் "மணி" என்பதாகும். எல்லா ஆலயங்களிலும் (இந்து, கிறீஸ்தவம், பௌத்தம், மற்றும் பல) மணி இருப்பது நாம் அறிந்ததே. இம்மணிகள் சிறிதாகவும், சில ஆலயங்களில் "காண்டாமணி" என பெரிய மணியும் இருக்கின்றது. இம்மணியின் ஒலிகள் பல மைல்களுக்கப்பால் கேட்கும்.

எம்பெருமான் கற்பக விநாயகர் தான் எழுந்தருளும் இடத்தில் மணி இருக்கப் பெறாவிடினும், மணி என்ற பெயராவது இருக்க வேணடும் என அருள்பாலித்து தனது இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்தார் என்றால் மிகையாகாது.

கோவில் அமைந்த வீதி "Bedford" என்றழைக்கப்படுகிறது. இதன் அர்த்தம் படுக்கையணை/படுக்கைத்துறை ஒரு திருக்கோவில் அமைவதற்கு மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கமைய வேண்டும். மூர்த்தியாக எம்பெருமானும் தலமாக பூங்காவோடு தீர்த்தமாக நீரோடும் LLoyds Park அருகே எவரிடமுமே கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய Bell Corner அருகே படுக்கைத்துறையில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளி உள்ளார் கற்பக விநாயகர்.

எம்பெருமான் தனது தாயார் மதுரை மீனாட்சியம்மனது சேவகனாக வழிவந்த சிவஸ்ரீ செல்லப்பா பட்டர் (ரமேஷ் குருக்கள்) அவர்களிடம் தான் இங்கிலாந்து மாநகரிலே குடிகொள்ள விரும்புவதை தெரிவித்தார். இருந்தபோதும் அவருக்கு உறுதுணையாக

# நிழலாடும் நினைவுகள்


2007ம் ஆண்டு தேர்


பஞ்சமுக விநாயகர் 2007ம் ஆண்டு தேர்


வைரவர் மடை 2007


தேர் – 2002

இன்னொருவரும் சேர்ந்தாலே பலாபலன் உண்டாமென கூறி திரு கோபாலகிருஷ்ணன் அவர்களையும் அனுப்பி வைத்தார்.

மறைந்த சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியரின் ஆசியுடன் அவருடைய மருமகன் சிவஸ்ரீ பால-குமார் சர்மா தலைமையில் எம்பெருமானின் திருக்கோவில் வேலைகள் ஆரம்பமாகியது. இதனிடையே எம்பெருமானையும், மீனாக்ஷி சமேத சுந்தரேஸ்வரர், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், நவக்கிரகம் தற்காலிகமாக இப்போது வெளி மண்டபமாக இருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்தனர். இவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட அதே திருநாளில் ஸ்ரீமேருபுரம் மகாபத்திரகாளி அம்மனும் சமீப தூரத்தில் திருக்கோவில் ஒன்றை அமைத்து பிரதிஷ்டை செய்து கொண்டார்.

திரு. கோபாலகிருஷ்ணர் தனது சொந்த வீடுகளில் ஒன்றை விற்று கோவில் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட ஆரம்பித்த அதே வேளை விக்கிரகங்களைத் தேர்ந்தெடுப்பதில் சிவஸ்ரீ செல்லப்பா பட்டர் அவர்கள் ஈடுபடலானார். இந்தத் திருப்பணி வேளைகளுக்காக சிவஸ்ரீ பாலகுமார் சர்மா அவர்களும் அவர்களது ஊழியர்களும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வந்தார். வேலைகளும் ஆரம்பமாகியது.

திருப்பணி வேலைகள் எல்லாம் முடிவுற்று கும்பாபிஷேகம் 2 Sept 2001ம் ஆண்டு, சதய நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய ஆவணித்திங்கள், ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணியளவில் நடந்தேறியது.

இந்தியாவிலிருந்து அமரர் சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர் புதல்வர்கள், பிள்ளையார் பட்டி சிவசிறீ பிச்சைக்குருக்கள், அவர்தம் மாணாக்கர்கள், இலண்டன் வாழ் சிவாச்சாரியார்கள் என பலர் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து எம்பெருமான் திரு-வருளைப் பெற்றேகினர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இனிதே நிறைவேறியது. தொடர்ந்து பிள்ளையார் பெருங்கதை விரதம் இடம்பெற்றது. 2003ம் ஆண்டு முதல் காலையிலும், மாலையிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள், பஞ்சமுக அர்ச்சனை, கஜமுக சம்காரம், எம்பெருமான் திருவீதி உலா என்பன சிறப்பாகவும் யாவரும் வியக்கும் வண்ணமும் நடைபெற்று வருகிறது. தினமும் மாலை பிள்ளையார் கதை படிப்பும் இடம் பெறுகிறது.

பக்தர்கள்/உபயகாரர் அனைவரும் குறித்த நேரத்திற்கு வரவும், எல்லாப் பூஜைகளும் காலாகாலத்தில் நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டு சிறப்பாக ஈழத்தில் நல்லூர் போல இலண்டனில் கற்பக விநாயகர் என பெயர் பெற்று பூஜைகள் தற்போது நடைபெறுகின்றன. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து விரதங்களுக்குரிய பூஜைகளும் மகாசண்டிஹோமமும் நடைபெற்றது. சண்டிஹோமத்திற்காக சிவஸ்ரீ செல்லப்பா பட்டரின் மைத்துனர் சிவஸ்ரீ சதீஸ் குருக்கள் மௌனவிரதம் இருந்து ஹோம பூஜைகளை நிறைவேற்றினார் என்றால் மிகையாகாது. இச்சண்டிஹோமம் இந்நாளில் வசந்த நவராத்திரியாகவும் சந்திர ரதோற்சவமாகவும் நடைபெற்று வருகிறது. சண்டிஹோம உபயங்களை ஏற்றுச் செய்த பெருமக்களில் பலர் தொடர்ந்தும் தமது உபயங்களை வசந்த நவராத்திரியாக செய்து வருகின்றனர்.

இங்கிலாந்து மகாநகரில் முத்தேர் பவனிவரும் அழகு இவ்வாலயத்திற்கு மேலும் ஒரு சிறப்பாகும். 22 அடி உயர ஆழித்தேர் 18அடி தேர், 17அடி சிற்பத்தேர் என்பனவே

அம்முத்தேர்களுமாகும், மேலும் இத்தேர்கள் அனைத்தும் சிவஸ்ரீ பாலகுமார் சர்மா அவர்களால் நாளும் பொழுதும் மிகவும் நுண்ணியமாக மேற்பார்வை செய்யப்பட்டு உருவாக்கப்பட்டவை. 2004ம் ஆண்டு முதல் முத்தேர் பவனி வந்தாலும், முழுமையான முத்தேர்கள் 2005ம் ஆண்டு முதல் தொடர்ந்து பவனி வருகின்றன.

பாதை வசதி கருதி இக்கும்பாபிஷேத்திற்கு பின் ஒரு தேர் பவனி வரும். இங்கு நாம் கூறும் சிவஸ்ரீ பாலகுமார் சர்மா இலங்கையில் சுழிபுரத்தை தம் பிறந்த மண்ணாகக் கொண்டவர். பின்னாளில் இந்தியா சென்று நுட்பசாத்திரங்களைப் பயின்று Fibre Glass என்ற உபகரணத்தின் உதவியோடு தேர், கோயில் விமானங்கள், வாகனங்கள் திருமண மணவறைகள், சிற்ப சிலைகள் என்பவற்றை செய்வதில் சிறந்து விளங்குகின்றார். மேலும் அவர் ஆகம வேதங்களையும் கற்றுத் தேறியதனால் அவர் தன் திறமைகளை மேலும் மெருகூட்டி ஆலயங்களை ஆகம விதிக்கமைய உலகெங்கும் நிர்மாணித்து வருகிறார். இற்றை நாள் வரை, இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, சுவிற்சலாந்து, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து தென்ஆபிரிக்கா என ஐந்து கண்டங்களுக்கும் சென்று தன் திறமையினால் தன் நாமம் பதித்துள்ளார்.

இவ்வாலயத்திற்கான சிறப்பம்சம், எதையும் எம்பெருமான் செய்வித்துக் கொள்வதாகம். 2003ம் ஆண்டு முதல் இன்றையநாள் வரை இங்கிலாந்திலே / தூக்குக்காவடி / பறவைக்காவடி எடுக்கப்படுவது இவ்வாலயத்தில் மட்டுமே. வேறு எவ்வாலயத்திலும் இந்த சிறப்பம்சம் கிடையாது. மற்றைய ஆலயங்களிலும் காவடி எடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. ஆனால் முயற்சிகள் கைகூடவில்லை. இது எம்பெருமானின் திருவருளே.

இவ்வாலயத்தின் சந்திரோதவேற்சவம் இங்கிலாந்து நாட்டில் சகல இந்து ஆலயங்களின் மகோற்சவங்கள் ஆரம்பமாவதற்கு முன்னோடியவாகவும் எம்பெருமானது மகோற்சவ முத்தேர் சகல மகோற்சவங்களுக்கு நிறைவாகவும் அமையுமாறு அமைந்துள்ளது.

பங்குனி மாத பூர்வபக்க பிரதமையுடன் ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கான அலங்காரத்திருவிழா ஆரம்பமாகிறது. தினமும் காலையும் மாலையும் அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று தினமும் மாலை 1) ராஜராஜேஸ்வரி 2) அபிராமி 3) சரஸ்வதி 4) காமாட்சி 5) கேதார கௌரி 6) சந்தானபாக்யலக்ஷ்மி 7) துர்க்கை எனப்பல்வேறுபட்ட அலங்காரங்களுடன் வீதி உலாவரும் அம்பாள் ஸ்ரீ இராம நவமியாகிய 9ம் நாள் தங்கரதத்தில் மின்னொளியுடன் இரவு 8 மணியளவில் இங்கிலாந்து நகரில் திருவீதி உலா வருவாள். இது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். மேலும் இவ்வாலயத்திலிருந்து சுமார் 1/2 மைல்கல் தூரத்தில் மீனாக்ஷியம்மன் மகாமேருபுரம் பத்திரகாளி அம்மனாக வீற்றிருக்கிறாள். இவ்வாலயமும் எமதாலயமும் 9ம் திகதி செப்டெம்பர் மாதம் 2000ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு பூஜைகள் நடந்தன. 5ம்திகதி செப்டெம்பர் 2001ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அம்பாள் ஆடிப்பூரத் திருவிழாவிற்காக ஆடிப்பூரத்திற்கு, முதல் வரும் ஞாயிறு விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அடியார்களது பால்குட யாத்திரை ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடைவதும் அம்பாள், தன் விநாயகர் சகிதம், எம்பெருமானின் ஆலயத்திற்கு சென்று வருவதும் வெளிநாடுகளில் எங்குமே இடம் பெறாத ஒன்று. இலங்கையில், இந்தியாவில் இவ்வாறு ஓர் ஆலயத்திலிருந்து இன்னோர் ஆலயத்திற்கு எம்பெருமானோ, எம்பிராட்டியோ சென்று வருவது ஒரு திருவிழாவாகும். ஆனால் மேலைத்தேய நாடுகளில் இவை நடைமுறைச் சாத்தியமற்றவை.

தை மாதம் முதற்கொண்டு மார்கழி வரையாக அல்லது சித்திரை முதற்கொண்டு பங்குனி வரையாக சகல விரத நாட்களும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்துவாகப் பிறந்து விட்டால் 365 நாட்களுமே திருவிழா நாள்தான். மாதப்பிறப்பு முதல் பிரதமை முதல், அச்சுவினி முதல் என வகைப்படுத்தி பூரணை /அமாவாசை வரை, ரேவதி வரை என சகல நாட்களுமே ஏதோ வகையில் இந்துக்களுக்கு விரத நாட்களாகவே அமையும்.

இவ்விரத தினங்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் அஷ்டமி திதி நாட்களில் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ பரமேஸ்வர கணேஷக்குருக்கள் அருள்வாக்கு கூறி அடியார்களது குறை நிறைகளை நிவர்த்தி செயது வருகிறார்.

மேலும் ஆலயத்திற்கென்று நிரந்தரமான தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் தங்கள் சேவைகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றனர். இந்தியாவிலிருந்து நாதஸ்வரக் கலைஞர்களாக மணிகண்டன் செந்தில்நாதனும் தவில் வித்துவான்களாக கிருஷ்ணமூர்த்தி, சண்முகவேல், முத்துக்குமாரசுவாமியும் இலங்கையிலிருந்து புகழ்பெற்ற கேதீஸ்வரன் நாதஸ்வரமும் உதயசங்கர் தவில் வித்துவான்களாகவும் பூமாலைகள் கட்டும் பணியில் திரு சு. இராசேந்திரா அவர்களும் ஆலயத்திற்கும் எம்பெருமானுக்கும் புகழ் சேர்த்த வண்ணம் உள்ளார்கள். அத்துடன் அருட்பணி அலுவலராக திரு விஜயகுமார் அவர்கள் சிறந்த முறையில் கடமையாற்றுகின்றார்.

சிவாச்சாரியார்கள் வரிசையிலே மதுரை மீனாக்ஷியம்மன் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ செல்லப்பா பட்டர் அவர்கள் ஆரம்பகால அல்லது முதல் குருவாக இருந்தார். கும்பாபிஷேகம் நடைபெற்று முதலாவது மகோற்சமும் நிறை வேற்றினார். இதன் பின்னர் சிவஸ்ரீ பாலச்சந்திரக் குருக்கள் ஓரிரு வாரங்கள் தலைமைக்குருவாக அமர்ந்தார். இருந்தபோதும் சிவஸ்ரீ ஆதித்தக்குருக்கள், உருத்திரமூர்த்திக்குருக்கள் தமது சேவையை வழங்க முன்வந்ததைத் தொடர்ந்து சிவஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள் இறைவனுக்கான நைவேத்திய தயாரிப்பிலும் சோதிட கணிப்பிலும் தனது பங்களிப்பை வழங்க ஆரம்பித்தார். சிவஸ்ரீ ஆதித்தக்குருக்களின் பொறுமையான பொறுப்பான ஆழ்ந்த பூஜைகளினால் அடியவர்கள் அனைவரும் கவரப்பட்டார்கள்-

எம்பெருமான் கூட தனது விருப்பைக் காட்டினார் என்பதற்கு ஆதித்தக்குருக்களின் முதலாவது மகோற்சவ முடிவில் அவரால் அர்ப்பணிக்கப்பட்ட மலர் எம்பெருமானால் தனது துதிக்கையால் ஏற்றுக்கொண்டதை நாமெல்லோரும் அறிவோம். இவ்வாலயத்திலே இற்றைநாள் வரை கடமையாற்றி வரும் சிவாச்சாரியார்கள் அனைவரும் தாம் இறை தொண்டு செய்கிறோம், கடமை செய்யவில்லை என்று மனதால் நம்புவதால் எம்பெருமான் அவர்களுக்கு நல்லாசி வழங்கி வருகிறார்.

சிவஸ்ரீ செல்லப்பா பட்டர் அவர்களைத் தொடர்ந்து முதல் இரு மகோற்சவங்களையும் நயினை சிவஸ்ரீ கைலாசவாமதேவக்குருக்கள் நடாத்தி வைத்தார். இதனைத் தொடர்ந்து ஆலய சிவாச்சாரியார்களே மகோற்சவத்தை சிறப்புற நடாத்தி வருகின்றார்கள்.

சிவஸ்ரீ ஆதித்தக்குருக்களுடன் ஒரு வருட சேவையாற்ற சிவஸ்ரீ திவாக்குருக்கள் இணைந்தார். அவரைத் தொடர்ந்து சுரேன் சர்மா இணைந்து மூன்றாண்டுகளின் பின் விலகினார்.

அதனைத் தொடர்ந்து சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள் இணைந்தார். இலங்கையிலே சகல

பாகங்களிலும் சகல ஆலய கும்பாபிஷேகங்களைச் சிறப்புற நடாத்துவதில் தனது மனப்பூர்வ பங்குகளை ஆற்றி வந்தார். இவர் ஆர்ச்வே முருகன் ஆலயத்திற்கு இரு வருடம் பணி செய்ய இங்கிலாந்து வந்து சேர்ந்தார்.

இங்கிருந்த காலத்தில் தனது பேச்சு, கல்வித் திறமைகளினால் அடியவர்களது மனம் கவர்ந்தார். இதனால் இவரை ஈலிங் கனக துர்க்கையம்மன் ஆலய நிர்வாகத்தினர் மீண்டும் குடும்ப சகிதம் இங்கிலாந்து கொணர்ந்தனர். ஒரு வருடம் அம்மனுக்கு தனது சேவையை வழங்கி வந்தார். திரு கோபாலகிருஷ்ணனின் விருப்பினால் ஸ்ரீ கற்பக விநாயகர் பாதம் பணிந்தார். 2004ம் ஆண்டின் பிற்பகுதி முதல் இன்றுவரை பணியாற்றுகிறார். ஐந்து கண்டங்களிலும் உள்ள ஆலயத்திற்கு சென்ற பெருமையாளர்களுள் ஒருவர்.

வசந்தக்குருக்கள் ஆரம்பகாலக் கல்வியியல் முதல் இன்றுவரை சமய, ஆகம, வேத, புராண, தமிழ் இலக்கிய இலக்கணம் என சகல் துறைகளிலும் ஒரு விற்பன்னர். அது மட்டுமன்றி அவர் இயற்கையோடு கூடிய ஓர் நகைச்சுவை மன்னர் வசந்தக்குருக்களின் சொற்பொழிவுகளுக்கு அவர் கூறும் உவமான உவமேயங்களே சிறப்புச் சேர்க்கின்றன. மேலும் எவ்வினத்தவர் எது கேட்டாலும் எம்முடைய சமயத்திலே நாம் ஏன் எவ்வாறு, அவ்வாறு செய்கிறோம். என அவருக்குத் தெரிந்த இலகு வழி உதாரணம் மூலம் விளக்கிவிடுவார்.

இவ்வாறான சிறந்த சிவாச்சாரியார்களுடன் இந்தியாவிலிருந்து பரமேஸ்வரகணேச குருக்கள் சுவாமி அலங்காரத்தில் மிக வல்லுனர், இலங்கையிலிருந்து பிரணவ சர்மா சோமஸ்கந்த சர்மாவும் இணைந்து பல்வேறு பணிகள் மூலம் ஆலயத்தை மேலும் மெருகூட்டி வருகின்றனர்.

ஸ்ரீ கற்பக விநாயகர் அன்னதான விநாயகர் எனப் போற்றப்படுகின்றார். இதுமட்டமல்ல, அலங்கார இசைப்பிரியரும் கூட . ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் அனைவரும் விதம்விதமான பிரசாதங்களையும், வடை - மோதகம், எள்ளுருண்டை, அவல், கடலை எனப்பல பணியாரங்களையும் உண்ணாமல் சென்றதில்லை. இவற்றையெல்லாம் செய்வதற்கு சிவாச்சாரியார்களுடன் ஒரு சில அடியார்களும் தம் நல்லாதரவை வழங்கி வருகின்றனர்.

மேலும் திருவிழா நாட்களிலும் சரி சாதாரண நாட்களிலும் சரி எம்பெருமான் அலங் காரத்துடனேயே காணப்படுவார். இவர்களோடு தொண்டர்கள் திருவிழாநாட்களில் அலங்காரத்தைமிகச்சிறப்பாகச் செய்து வருவது யாபேருமறிந்ததே. இவ்வலங்கார ங்கள் எல்லாவற்றையும் புகைப்படம் எடுத்து வரலாறாக வகைப்படுத்தி வைப்பதில் திரு. மனோரஞ்சனுக்கு வேறு யாரும் நிகராக மாட்டார்கள்.

இங்கிலாந்து நாட்டில் "பிரசங்கம்" "சொற்பொழிவு" என்பது முற்றிலும் அற்றுப் போன ஒன்று. ஆனால் கற்பக விநாயகர் அருளால் சொற்பொழிவுகளை நடாத்த திரு சுக-ிசிவம், நாகைமுகுந்தன், மணிகண்டன், சாரதா நம்பியாரூரன், தேசமங்கையர்க்கரசி, சரஸ்வதி ராமநாதன் போன்ற தமிழறிஞர்கள் இந்தியாவிலிருந்தும் கம்பன் கழக திரு ஜெயராஜ், தமிழருவி சிவகுமார், ஆறுதிருமுருகன், போன்றோர் இலங்கையிலிருந்தும் வந்திருந்தார்கள். வசந்த நவராத்திரி, மகோற்சவம், பிள்ளையார் கதை போன்ற திருநாட்களில் பிரசங்கங்களை மேற்கொள்ள மேற்படி தமிழறிஞர்கள் இவ்வாலயத்திற்கு வந்து சென்றமை பெருமைக்குரிய ஒன்றே.

இதே வேளையில் எமது ஆலயத்தில் சிறந்த முறையில் தொண்டாற்றிய யோககுமார் முத்துக்குமாரசாமி 2003 மார்கழி 14ல் இறையடி சேர்ந்தார். இவர் தொண்டர்களுக்கு ஓர் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். பின்பு ஆலயத்திற்கு பல தொண்டர்கள் அவ்வப்போது வந்து உதவிச் சென்றாலும் சில தொண்டர்கள் நிரந்தரமாகவே தொண்டராகச் சேவையாற்றி வருகின்றனர்.

அண்மைக்காலமாக விநாயக (ஆவணி) சதுர்த்தி நாளில் 1008 பால்குட அபிஷேகம் கற்பக விநாயகப் பெருமானுக்கு இடம் பெற்று வருகிறது. பக்தப்பெருமக்கள் அனைவரும் இந்த அபிஷேகத்தில் கலந்து எம்பெருமானின் பேரருளை பெற்று ஏகுகின்றனர்.

மேலும் வட இந்தியாவிலே விநாயக சதுர்த்தி நாளில் எம்பெருமானது திருவுருவங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று ஏழாம் நாள் அவ்வுருவங்கள் (நீர் நிலைகளில்) கடலில் திருமஞ்சனம் செய்யப்படுவது இந்துக்கள் அனைவரும் அறிந்த விடயமே. இவ்விழா இங்கிலாந்தில் 2010ல் ஆண்டு முதன்முறையாக எம்மாலயத்தில் கணேசக்குருக்கள் அவர்களால் 6 அடி விநாயக உருவம் செய்யப்பட்டு (இவ்வுருவ எடை 750kg) பூஜிக்கப்பட்டு 7ம் நாள் இத்திருவுருவம் Clacton On Sea என்னும் கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூஜைகள் செய்யப்பட்டு கடலுடன் திருமஞ்சனமானார் விநாயகப்பெருமான். பெருந்திரளான மக்கள் இவ்விழாவிலே கலந்து பேரருள் பெற்றனர். வரும் வருடங்களில் மேலும் பல பக்த கோடிகள் கலந்து பேரருள் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இவ்வாலயம் அமைந்துள்ள அமைப்பை சகல திருவிழாக்களையும் சிறப்பாக செய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது கோவிலின் முன்னே அமைந்துள்ள வாகனத்தரிப்பிடத்தில் வேட்டைத் திருவிழா, மானம்பூ திருவிழா, •சூரசம்ஹாரம், கஜமுகசம்ஹாரம் என எல்லா சம்ஹாரங்களும் நடைபெறும்.

வருடாவருடம் மகா சண்டீஹோமம் நவராத்திரியைத் தொடர்ந்தும், பங்குனி மாத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு ஏக தின லட்சார்ச்சனையும் அதனைத் தொடர்ந்து 108 கலசாபிஷேகமும், விநாயக விரத காலத்தில் எம்பெருமானுக்கு இலட்சார்ச்சனையும் நடைபெற்றுவருகிறது.

சண்டீஹோமம், இலட்சார்ச்சனை, கலசாபிஷேகம் போன்றவற்றிற்கு பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் வந்து கலந்து கொள்வது சிறப்பம்சமாகும்.

இந்துமதத்துடன் ஆரம்பகாலத்தில் ஐயப்ப வழிபாடு இல்லாதிருந்த போதும், அண்மைக்காலமாக இவ்வழிபாடு அடியார்கள் மத்தியில் பெருகி வருவதால் ஐயப்ப பக்தர்கள் விருப்பத்திற்கமைய இவ்வாலயத்திலும் ஸ்ரீ ஐயப்பர் வழிபாடுகள் நடைபெறுகிறது. மாதந்தோறம் மாதப்பிறப்பன்று விசேஷ அபிஷேக ஆராதனையும் படிக்கட்டு பாடலும் இடம் பெறுகிறது. கார்த்திகை முதலாந்திகதி முதல் மண்டல பூஜைகள் நடைபெற்று, தை முதலாம் திகதி மகர ஜோதி தரிசனக் காட்சியும் இடம்பெறுகிறது. கார்த்திகை முதல் மண்டலகாலம் முடியும் வரை பிரதி சனிதோறும் விசேஷச அபிஷேக ஆராதனையும் பஜனையும் இடம் பெற்றுவருகிறது.

மேலும் ஒவ்வொரு பிரதோஷ நாட்களிலும் ஸ்ரீ ஆத்மலிங்க பெருமானுக்கு அடியார்கள் பாலபிஷேகம் செய்து வில்வ அர்ச்சனையும் செய்து வருகின்றனர்.

இதேபோல பிரதி வெள்ளிக்கிழமைதோறும் இராகுபிரானுக்கு இராகுகாலத்தில் பாலாபிஷேகம் செய்து தமது தோஷங்களை அடியார்கள் நிவர்த்தி செய்து வருகின்றனர்.

மாதாந்தம் ஒரு ஞாயிறு விசேஷமாக காயத்திரி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும் அம்பாள் திருவீதி உலாவும் வருடமொருமுறை காயத்திரி ஜெபமும் இடம் பெறுகிறது.

இந்துமத திருவிழாக்கள், அபிஷேகங்கள் என்பவற்றுக்கு மேலாக செவ்வாய்க்கிழமை களில் மூத்தோர் ஒன்றுகூடல் இடம் பெற்று வருகிறது. இவ்வமைப்பு கோடைகாலத்தில் பல இடங்களுக்கும் சென்று வருவதோடு அவ்வப்போது திருத்தலயாத்திரைகளும் மேற்கொண்டு வருகின்றது.

இளம் சிறார்களை எம்மோடு சேர்த்து வருங்காலத்தில் அவர்கள் சிறந்த இந்து மதத்தினராக வருவதற்கு முன்னோடியாக பண்ணிசை வகுப்புக்கள் பிரதி செவ்வாய் தோறும் திருமதி ஸ்ரீவித்யா வசந்தக்குருக்களால்

நடாத்தப்பட்டு வருகிறது. இவ்விளம் சிறார்கள் திருவிழா நாட்களிலும் விசேட தினங்களிலும் பஞ்சபுராணம் ஓதுகின்றனர். அதுமட்டுமன்றி சைவசமய போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களை பெற்று தமது திறமைகளை வெளிக்கொணர்கிறார்கள்.

இது மாத்திரமன்றி அறப்பணிகளாக 2002ம் ஆண்டு முதல் மட்டக்களப்பிலுள்ள சிவானந்தா சிறுவர் இல்லத்திலிருந்த 15 சிறார்களுக்கான மாதாந்த செலவீனங்களைப் பொறுப்பேற்று, ஆலய அடியவர்கள், உதவி வந்தார்கள். ஆனால் 2004ல் ஏற்பட்டசுனாமி அனர்த்தத்தினால் இவ்வுதவிகள் நிறுத்தப்பட்டிருந்தன. ஆனால் மீண்டும் பாரியளவில் இவ்வுதவித்திட்டம் வவுனியாவில் உள்ள கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி அனாதைகள் இல்லத்தில் உள்ள சுமார் 75 குழந்தைகளுக்கும் மன்னாரில் கிறீஸ்தவ பாதிரியாரால் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளுக்கும் எம்மடியார்கள் உதவிக்கரம் நீட்டி பராமரித்து வருகிறார்கள். மேலும் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்திலுள்ள சிறார்களையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்று செவ்வனே நடாத்தி வருகிறோம்.

இங்கிருந்து அனுப்பப்படும் பணவுதவி சிறார்களைச் சென்றடைகிறதா, வீண்விரயம் செய்யப்படுகிறாதா என்பதை இத்திட்டத்தை முன் நின்று கவனித்துவரும் திரு மகேஸ்வரன் தீவிரமாக கண்காணித்து தக்க நடவடிக்கைகளையும் அவ்வப்போது செய்து வருகிறார். மேலும் சிறார்கள் ஆச்சிரமங்களை விட்டு வெளியேறும் தறுவாயில் புதிய குழந்தையைப் பொறுப்பேற்று முந்தைய குழந்தைக்கு பணவுதவி செய்து வந்த குடும்பத்திற்கு அறிவித்தல் தருவதோடு புதிய குழந்தை பற்றிய விபரத்தையும் அவ்வுதவாளர்களுக்கு திரு மகேஸ்வரன் அறிவித்து அவர்கள் அனுமதியையும் பெற்று செவ்வனெ தன் பணி செய்து வருகிறார்.அத்துடன் 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் தொடர்ந்து 108 தினங்கள் ஒரு நாளுக்கு ஆயிரம் தீபம் என்ற வகையில் ஒரு லட்சம் தீபம் ஏற்றி வழிபாடு ஆற்றப்பட்ட பெருமைக்கு உரிய ஆலயமாக விளங்கியதுடன் இப்புண்ணியபதி கற்பகபதி என திருத்தலப் பெயர் சூட்டப்பட்டது.

அத்துடன் புதிய பரிவார ஆலயமாக துர்க்கை அம்மன் சந்நிதானம் கட்டப்படுகின்றது.

இவ்வாறு பல பெருமைகளுடைய இக்கோவில் மண்டபம் உயர்த்தப்பட்டு அருகாமையில் உள்ள வீடும் கொள்வளவு செய்யப்பட்டு பெரும் திருப்பணிகளுடன் இரண்டாவது கும்பாபிஷேகத்தைக் காண்கிறது.

திரு சி.ரஜீவ்

உபசெயலாளர், கற்பக விநாயகர் ஆலயம்

நிழலாடும் நினைவுகள்



திருக்கல்யாணம் 2005

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும்
அனைத்து தேவைகளுக்கும்



Office and Showroom : Unit 2 Alpha Business Centre,
60 Grove Raod, London E17 7NX

**Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135/ 0787 201 5560**

www.uwps.co.uk info@uwps.co.uk uwps@hotmail.co.uk

FIND US ON







நிழலாடும் நினைவுகள்



பண்ணிசை பயிலும் சிறார்களும் மற்றும் ஆசிரியைகளும்



## ஆலய வழிபாடு


**சைவப்புலவர் சைவசித்தாந்தபண்டிதர்,**
**சிவஸ்ரீ ப.வசந்தக்குருக்கள்** B.A.(Hons)

கற்பகபதி கற்பகவிநாயகர் கோவில்


உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பு ஆலயம் என்றார் திருமூலர். இதன்பொருள் இரண்டும் எப்போதும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையே தெய்வீகம் என்பார்கள். கோவில் கடவுள் இருக்கும் இடம் என்றால் ஆலயம் ஆன்மா ஒருவழிப்பட்டு ஒடுங்கி இருக்கும் இடம். வழிப்படுதல் என்பதே வழிபாடு என்றாயிற்று.

நாம் எப்போதும் ஏதோ ஒரு கவலையில் இருப்போம். கவலை சங்கிலி போன்று தொடர்ச்சியாக வரும். இதனை உணர்ந்து திருவாசகத்தைப் போற்றும் ஒரு வெண்பா தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி அல்லல் அறுத்து என்று கூறுகிறது ஒரு துன்பம் போக மறு துன்பம் வரும். நாம் எமது துன்பத்தை மற்றவரிடம் சொன்னால் அவர் அதைப் போல் ஆயிரம் துன்பம் சொல்வார். யாரிடம் நோவேன் யார்க்கெடுத்து உரைப்பேன் என மணிவாசகர் கூறுவது தான் சரி.

எமது மனக் கவலையை மாற்ற உள்ள ஒருவர் தனக்குவமை இல்லாத இறைவன் தான்.வள்ளுவர் இதனை வலியுறுத்தி கூறுகிறார்.தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.

நாம் எமது துன்பத்தை கூற மன அமைதி அடைய உள்ள ஒரே இடம் ஆலயம்.இவ்வாறான ஆலயங்களை ஊர் தோறும் கட்டினார்கள்.கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள் இதனை பெரும் சாந்தி என்றார்கள் அதாவது நல்ல மன நிறைவான அமைதி. மக்கள் அங்கு கூடி தமது உள்ளத்துக் குறைகளையும் துன்பங்களையும் தீர்த்துக் கொள்கிறார்கள்.இறைவன் அங்கு அனுக்கிரக மூர்த்தியாக எழுந்தருளி இருப்பார். அனுக்கிரகம் என்பது இறைவன் அருள் .அது தாமாகவே எம்மை வந்து பிடிக்கும். ஆனால் எமது மனம் தூய்மையானதாக இருந்தால் மட்டுமே பற்றும்.கிரக என்றால் பிடித்தல்.அநுஎன்றால் கூடவே ஆகவே கூடவே எம்மை பற்றிப் பிடிக்கும் ஆற்றல் உள்ளது.இறை அருள்.

பெருக்க நுகர்வினை பேரொளியாய் எங்கும் அருக்கன் என நிற்கும் அருள் என்றார் உமாபதிசிவாச்சாரியார்.

சூரியஒளி இருந்தாலும் கண் தெரியாதவன் காண முடியாமல் இருப்பது போல் மனஅழுக்கு ஆணவம் என்னும் இருளில் இருப்பவர்க்கு இறை அருள் ஒளிஅனுபவிக்க முடியாது. மனத்தூய்மையை ஏற்படுத்திதரும் இடமாக ஆலயம் விளங்குகிறது. பிரதிஸ்டை என்றால் ஒரு இடத்தில் சிறப்பாக நிலை நிறுத்துதல் என்ற பொருள் உண்டு இறை அருளை ஆலயத்தில் நிலை நிறுத்துதல்.

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கில் உள்ளான் வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்.என்றார் அப்பர் சுவாமிகள்.பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்றார் அருணகிரிநாதர் இறைவன் வழி பாடுதல் என்பதே வழிபாடு என்பதன் இன்னுமொரு கருத்து.

இதனால் இறை புகழ் பாடும் வழக்கம் எல்லா மதத்திற்கும் உண்டு ஸ்தோத்திரங்கள் திருமுறைகள் அருட்பாடல்கள் பஜனைகள் என்பன பொதுவாக இறைவன் புகழ் பாடும் நிகழ்வாக ஆலயங்களில் நடைபெறும்.

ஆலய அமைப்பினை நாம் உற்று அவதானித்தால் மிகப் பெரும் தத்துவம் அடங்கியிருக்கும். கோபுரங்களும் விமானங்களும் மிக உயரமாக இருக்கும். இதன் பொருள் இறைவனே மிக உயர்ந்தவன் இக்கோபுரங்கள் மேல்நோக்கி ஒடுங்கி அமையும். நுனியில் சிறு புள்ளியுள்ள கலசம் இருக்கும். எனவே மனத்தை நன்கு ஒடுக்கி குவிய வைத்தாலே இறை அருள் பதியும் என்பதைக் குறிக்கிறது. இதுவே தியானம் யோகம் எனப்படும்.

மற்றும் வெளி மண்டபங்களில் இருந்து மூலஸ்தானம் வரை மண்டபங்கள் ஒடுங்கி உயர்ந்து போகும்

அமைப்பை பொதுவாகப் பார்க்கலாம்.எமது பொறி புலன்களை ஒடுக்கி இறைவன் பால் உயர்த்திக் கொண்டு போக வேண்டும் என்பதைக் குறிக்கிறது.விநாயக வழிபாடு உடல் ஆரோக்கியத்தையும் ஞாபக சக்தியையும் அதிகரிக்கும்.விழுந்து கும்பிடுதல் வீதி பிரதக்சனம் என்பன உடற்பயிற்சியாக அமைந்து விடுகிறது.பூமி தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் வலமாக சுற்றி வருகிறது. நாமும் அதே போன்று ஆலயத்தை வலமாக சுற்ற வேண்டும்.உலகத்தோடுசேர்ந்து வாழ்கிறோம். என்ற ஒற்றுமை காட்டப்படும்.உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு.என்பார்கள் உலகத்தோடு ஒத்து வாழாதவன் பல கற்றும் கல்லாதவன் என்றார் வள்ளுவர்.ஒற்றுமையின் உயர்வை ஆலயம் காட்டுகிறது. இதனால் இங்கு ஏழை பணக்காரன் கல்வி கற்றவன் கல்லாதவன் எனப்பலரும் ஒன்று கூடுவார்.

அடுத்து பலிபீடம் எமது ஆணவ மலங்களை பலியிடும் இடம் அதற்கு முன்பு நந்தி இருக்கும் இது தூய்மையான ஆன்மாவைக் குறிப்பது. எப்போதும் இறைவனைப் பார்த்தபடி இருக்கும்.ஆணவ மலங்களை பலியிட்டால் ஆன்மா இறைவனை நோக்கும் என்பதைப் புலப்படுத்துகிறது அத்துடன் இறைவனும் நம்மைப் பார்ப்பான். பலிபீடம் பத்திர லிங்கம் எனப்படும் எம்மைப் பத்திரப் படுத்தினால் இறைவன் வருவான் என்பதைக் குறிக்கும்

ஆயபதிதான் அருட் சிவலிங்கமாம் ஆய பசுவும் அடலேறெனநிற்கும் ஆய பலிபீடம் ஆகு நற்பாசமாம் ஆய அரனிலை ஆய்ந்துகொள்வார்க்கே என திருமந்திரம் கூறுகிறது.

சூரிய ஒளி எங்கும் இருந்தாலும் அதில் இருந்து நெருப்பு பெறமுடியாது ஆனால் ஒரு வில்லையை வைத்து பிடித்தால் அக்கதிர் குவிக்கப்பட்டு நெருப்பு பெறமுடியும் இதேபோலத்தான்.இறைவன் அருள் எங்கும் இருந்தாலும் ஆலயங்கள் வழிபாடுகள் மூலம் குவிக்க முடியும். லயம் என்பதே ஒரு இடத்தில் குவித்தல்.எனப் பொருளும் உண்டு.

ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கல் அனல் பானு ஒழியப்படின் என்று இக்கருத்தை திருவருட் பயன் கூறுகிறது. எனவே ஆலய வழிபாட்டில் ஒவ்வொரு ஆத்மீக மனிதனும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இறைவன் உலகத்தில் உள்ள உயிர்களுக்கு முக்கியமான பஞ்ச பூதங்களை படைத்தார்.இதனால் உலகம் பிரபஞ்சம் எனப்பட்டது.உடம்பும் பூதவுடல் எனப்படுகிறது. ஈஸ்வரனும் எல்லாபூதங்களுக்கும் அதிபதி எனப்படுகிறான் ஈஸ்வரஸ் சர்வ பூதானாம் இந்த பஞ்ச பூத அடையாள வழிபாடே ஆலயங்களில் கும்பாபிசேகம் திருவிழா நித்திய பூசைமுதலியவற்றில் நடைபெறுகிறது.

நிலத்தின் வடிவமாக நைவேத்தியம் சந்தனம் நீரின் வடிவமாக அபிசேகம் கும்பம் தீர்த்தம் நெருப்பின் வடிவமாக தீபம் விளக்கு அக்னி ஆபரணம் காற்றின் வடிவமாகதூபம் சாமரை மந்திரம் மங்கள வாத்தியம் திருமுறை ஆகாசத்தின் வடிவமாக பூக்கள் குடை என்பன பயன்படுத்தப் படுகிறது.

ஒருவகையில் இதனை பஞ்ச உபசாரம் என்பார்கள் இறைவன் எமக்கு தந்த இந்த பஞ்ச பூதங்களுக்காக நாம் அவருக்கு செய்யும் நன்றி உபசாரமாக இது அமையும். பஞ்ச என்பதற்கு அகன்ற பெரிய என்ற கருத்தும் உண்டு. பூதங்கள் என்றாலும் மிகப் பெரிய என்ற கருத்து கூறப்படுகிறது. நீர் முதல் ஆகாயம் வரை அனைத்தும் மிக அதிகமாக இருப்பவை.

ஆலயங்களில் காட்டப்படும் பஞ்ச ஆராத்திரி மிகப் பெரிய தீபம் என்ற கருத்தில் குறிப்பிடப் படுகிறது. இதனால் இத்தீபம் ஐந்துகண் என்றில்லாமல் எழு ஒன்பது என விரிந்திருக்கும்.

பூஜையின் நிறைவில் கைதட்டுவார்கள் இது சண்டேஸ்வர பூசை என்பதைவிட உடலுக்கு வலிமையையும் இரத்த ஓட்டத்தையும் அதிகரிக்கிறது.

பிரசாதமாக கிடைக்கும் வீபூதி அக்னியின் வடிவம் அதாவது ஞானாக்னி அது எம்மை தூய்மைப்படுத்துகிறது. தீர்த்தம் ஆரோக்கியம் நீரின் தன்மை குளிர்ச்சி. சந்தனம் நிலத்தின் வடிவம் மகிழ்ச்சி குங்குமம் ஆற்றல் சக்தியின் வடிவம் காற்றின் அம்சம் பூ அன்பின் வடிவம் ஆகாச அடையாளம் பூசைகளின் நிறைவிலும் பஞ்ச உபசார பிரசாதம் பெறுவதுடன் ஆலய வழிபாட்டின் மூலம் தூய்மை மகிழ்ச்சி குளிர்ச்சி ஆரோக்கியம் ஆற்றல் அன்பு என்பவை கிடைக்கும்

இதனால் ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றார்கள் ஆலய வழிபாட்டால் ஆன்ம லாபம் அடைவோம்.




2013 தேர்த்திருவிழாவில் வோல்தம் பொறஸ்ட் – உள்ளுராட்சி முதல்வர்கள்



தேவஸ்தான ஆஸ்தான நாதசுர வித்வான்
திரு. இரா. மணிகண்டனுக்கு – கௌரவம் 2008



தேவஸ்தான ஆஸ்தான தவில்
வித்துவான் திரு கிருஷ்ணமூர்த்திக்கு
கௌரவம்




2001 – முதலாவது கும்பாபிஷேகத்தில் சிவாச்சாரியார்கள்

## புராதன கால இலங்கையில் சைவர்களான தமிழர்களும், அவர்கள் அமைத்த அரசுகளும்

எமது சமயமாக கொள்ளப்படும் இந்து சமயமானது பல பிரிவுகளை கொண்டுள்ளது. அதில் சிவனை முழுமுதற் கடவுகளாக கொண்டது சைவசமயம், இச்சைவ சமயத்தை மூலாதாரணமாக கொண்ட இனமே தமிழ் இனமாகும்.

ஏனெனில் இந்து சமயம் பல இன மக்களின் ஒரு சமயமாக உள்ளது. ஆனால் சைவ சமயம் தமிழை அடிப்படையாக கொண்டு விளங்குகின்றது. நம்மொழி இலக்கியத்துள் முதன் முதலான மொழி வழித்தேசிய இனம் என்ற புதிய மரபினை தோற்றுவித்தவர். 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த எமது சைவ சமயத்தின் காவலர் திருநாவுக்கரசு நாயனார் என்றால் மிகையாகாது.

தமிழன் என்ற சொல் சங்ககாலம் முதலாக வாழ்ந்தாலும் அதை சைவ சமயத்துடன் தொடர்புபடுத்தி தெளிவாகக் காட்டியவர் திருநாவுக்கரசர் நாயனார். இவர் தமது தேவாரத்தில் "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என குறித்து பாடுகின்றார். அதுமட்டுமின்றி இறைவன் தமிழ் மொழித் தலைவன் என நாவுக்கரசர் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தர் 52 இடங்களில் தமிழ் மொழியின் சிறப்பையும், 70 இடங்களில் தம்மை தமிழுடன் இணைத்துப் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாரை தடுத்தாட் கொண்ட இறைவன் "சொற்றமிழ் பாடுக" என பணிக்கின்றார்.

தமிழ் சங்கங்களுக்கு தலைவனாக மதுரையில் இறைவன் இருந்த வரலாறுகளும் காட்டப்படுகின்றது. இவ்வாறு பல உதாரணங்களை நிலை நிறுத்த முடியும். எனவே எமது சமயம் பற்றி சிந்திக்க வேண்டிய நாங்கள் இச்சமயத்திற்கு உரிய இனமான தமிழர் பற்றியும் அவர்களின் ஈழ நாட்டு பூர்வீகம் பற்றியும் சிந்திப்பதும், அதனை உணர்ந்து செயற்படுவதும் மிகவும் அவசியமானதாகும்.

இவ்வகையில் தமிழும் சைவமும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. தமிழ் இனத்தின் அடையாளம் அழிக்கப்படுவது சைவ சமயத்தின் அடையாளத்தை அழிப்பதற்கு ஒப்பாகும்.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் துட்டகைமுனு அநுராதபுரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பு 32 தமிழ் அரசர்கள் இருந்தனரென்று **மகாவம்சம்** கூறும் (25:75).அவர்களை வென்றதன் பயனாகவே அவன் அநுராதபுரத்தைக் கைப்பற்ற முடிந்தது. **சீஹளவத்துப் பக்கரண** என்ற நூலும் இதனைச் சொல்கின்றது. அந்தத் தமிழ் அரசரின் ஆள்புலங்கள் மகியங்கனைக்கும் அநுராதபுரத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அமைந்திருந்தன. அவர்கள் பலரின் பெயர்களைக் குறிப்பிடுவதோடு அவர்களைத் தமிழரென்றும் **மகாவம்சம்** குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த எல்லாளனுக்கும் அவர்களுக்கும் இடையில் எந்தவிதமான தொடர்புகளும் இருந்ததாக மகாவம்சம் கூறவில்லை.

கிழக்கிலங்கையிலுள்ள தமிழ் அரசர் குறுகிய மன்னர் முடிசூடாதவர்கள். ஆனால் **ராஜா** என்ற பட்டம் பெற்றவர்கள் புராதனமான பிராமிச் சாசனங்களும் **ராஜா** என்று பெருந்தொகையான குறுநில மன்னர்களைக் குறிப்பிடுகின்றன. மத்திய காலம் முதலாகப் பேசப்படுகின்ற மட்டக்களப்பு தேசத்து வன்னி அரசுகள் அவற்றை மூலமாகக் கொண்டவை. அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இராசதானிகளில் இருந்த மன்னர்களுக்கும் மட்டக்களப்பு தேசத்துக் குறுநில மன்னருக்கும் இருந்த தொடர்புகளை இடையிடையே பூர்வசரித்திரம் குறிப்பிடுகின்றது. அந்தத் தொடர்புகள் அதியரசனுக்கும் பிராந்திய அரசனுக்கும் இடையான தொடர்புகள்.

மிகப் புரதான காலத்தில் உருவாகிய குடியேற்றங்களின் விளைவாக அப்பிராந்திய அரசுகள் வளர்ச்சியடைந்தன. கிழங்கிலங்கையிலுள்ள தமிழரசுகள் பற்றி மகாவம்சம் மூலமாக அறியப்படும் விளக்கம் நாணயங்கள் மூலமாகக் கிடைக்கும் விபரங்களினால் உறுதியாகின்றது. தென்கிழங்கிலங்கையிலே அகுறுகொட என்னும் இடத்தில் சில தசாப்தங்களுக்கு முன் எதிர்பாராத வண்ணமாக நிலத்திலே மட்குடத்தில் புதைக்கப்பட்டிருந்த நாணங்கள் கிடைத்தன. அவற்றுடன் சிலவற்றிலே கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய பிராமி எழுத்துக்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழ்ப்பிராமி வரிவடிவங்களில் அமைந்த பெயர்கள் உண்டு.

ஆனைக்கோட்டை, சந்திரத்தை (காரைநகர்) சாட்டி (வேலணை), நகர்கோயில் முதலான இடங்களிலே பெருங்கற்படைக்காலப் பண்பாட்டுக்குரிய கரும்-செம் மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அவற்றிலே


JR Print
www.jrprint.com
- experience of the power -
25 years experience in the Printing World
59-61 Hoe Street, London E17 4QR
0208 503 6643 | ravi@jrprint.com
* Arangetram Books
* Souvenirs & Invoices
* Leaflets, Visiting Cards
* Letter Heads
* Wedding Cards
* Raffle Tickets
* Cake Boxes
* Bill Books, Invoices
* Rich Cakes & Boxes
* Birthday Cards
* Short Eat Boxes
* Compliment Slips
* Colour Printing
* Invitation Cards
* Sign Writing
* Banner Printing
Digital & Litho Printers
ALL YOUR PRINTING
REQUIREMENTS

தமிழ்ப் பிராமியிற் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. அபிசிதன் (கந்தரோடை) வேளான், (பரமன்கிராய், பூனகரி) போன்ற சொற்கள் அவற்றில் உள்ளன. தென்னிந்தியாவின் போலத் தமிழ் பிராமியில் இலங்கையிலும் முத்திரைகள், மோதிரங்கள், நாணயங்கள் என்பவற்றிலும் தமிழ்ச் சொற்களை எழுதியுள்ளனர். கந்தரோடையில் கிடைத்த பழங்காசொன்றிலே **நாகபொலம்** என்ற சொல் காணப்படுகின்றது. ஆனைக்கோட்டையில் ஈமக்கல்லறை காணப்பட்ட முத்திரை ஒன்றிலே **கோவேதன** என்னும் பெயர் உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருங்கற்படைக் கால மக்களின் குடியிருப்புகள் குறுநில அரசுகளாக வளர்ச்சி பெற்றன.

யாழ்ப்பாணம் தவிர்ந்த பகுதிகளிலும் பெருங்கற்படைக் காலப்பண்பாடு பரவியது. வில்பத்து பிரதேசத்திலுள்ள பொம்பரிப்பு, கரம்பன்குளம், தேக்கம், கொல்லன்கனத்தை ஆகிய இடங்களில் பொருங்கற்படைக்கால மக்களின் சின்னங்கள் உள்ளன. பொம்பரிப்பு என்பதில் மட்டும் 8,000 ஈமத்தாழிகள் உ திரன், தஸ பிட்டன, மகாசாத்தின என்பன தமிழ் பிராமியில் எழுதப்பட்ட பெயர்களாகும். அவை தமிழரசரின் பெயர்கள். அவற்றிலே மகாசாத்தன் என்பதில் **அன்** விகுதி தனிச்சொல்லாக தொல்காப்பியத்திலே கூறுவது போல அமைந்திருக்கின்றது. வேறொரு நாணயத்திலே **திஸபுரதாட்ட நாகரசன்** என்று எழுதப்பட்டுள்ளது. ராஜா என்பதற்குப் பதிலாக அரசன் என்ற தமிழ்ச் சொல் காணப்படுகின்றது. தாட்ட நாகன் நாகர் குலத்தவன் என்பதும் திஸபுரத்தில் இருந்து அரசு புரிந்தவன் என்பதும் இதனால் புலப்படுகின்றது. தென்கிழக்கிலே நாகர் தமிழ் பிராகிருதம் ஆகிய மொழிகளைப் பேசினார்கள் என்பதும் இந்நாணயம் மூலமாகத் தெரிய வருகின்றது.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலே கிழக்கிலங்கையிருந்து தமிழர் ஆட்சி புரிந்த குறுநிலப்பிரிவுகள் பற்றிய மகாவம்சக் குறிப்புகள் நாணய விபரங்கள் மூலம் உறுதியாகின்றமையினை இதுவரை கவனித்தோம். இதே நிலை இலங்கையின் வடகிழக்கு, வடக்கு, வடமேற்குப் பகுதிகளிலும் காணப்பட்டது. கி.மு.ஏழாம் நூற்றாண்டு முதலாக ஏற்பட்ட பெருங்கற்கடைக்காலப் பண்பாட்டு மக்கள் ஏற்படுத்திய குடியேற்றங்களும் சமூக-பண்பாட்டு முன்னேற்றங்களுமே அதற்கான காரணமாகும். வடக்கிலே, யாழ்ப்பாணக்குடா நாட்டிலும் அதற்கு அண்மையிலுள்ள தீவுகளிலும் அவர்கள் முதன்முதலாகக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினார்கள். அங்கு கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணம் தவிர்ந்த வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் பெருங்கற்படைக்கால மக்கள் அங்கு வாழ்ந்த கற்கால மக்களோடு கலப்புற்றனர். பழங்குடி மக்கள் பெருங்கள் கடைக்காலப் பண்பாட்டின் அம்சங்களைப் பெற்றுக் கொண்டனர். இருப்பின் உபயோகம், உலோக வார்ப்பு முதலியன பற்றிய மரபுகளையும் கற்றுக் கொண்டனர். விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் என்னும் தொழில்களும் ஏற்பட்டன. கிராமங்களும் நகரங்களும் துறைமுகப்பட்டினங்களும் உருவாகின. இலங்கையிலே மூன்றில் ஒரு பகுதியிலே தமிழ் பேச்சு மொழியாகி விட்டது.

இதே விதமான மாற்றம் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்டது. அங்கும் பூர்வீக குடிகளின் மொழி வழங்கற்றுப் போய்விட்டது. அங்கு பௌத்த சமயத்தின் பொது மொழியான பிராகிருதம் எற்படுத்திய செல்வாக்கின் விளைவாகக் காலப்போக்கிலே சிங்கள மொழி உருவாகியது. மொழி வழியாக இரு வேறு சமூகங்கள் இலங்கையில் உற்பத்தியாகின. மொழி வழக்கின் காரணமாக இலங்கை இரு வேறு பகுதிகளாக வளர்ச்சியுற்றது. பௌத்தம் காரணமாகவும் தொழில் காரணமாகவும், இரு சமூகங்களுக்கிடையிலும் நெருங்கிய தொடர்புகளும் பரஸ்பரமான நல்லிணக்கமும் ஏற்பட்டன. ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழரில் கணிசமான தொகையினர் பௌத்தராயிருந்தனர். தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள பௌத்த நிலையங்கள் பற்றித் தென்னிந்திய நூலான **மணிமேகலையும் மகாவம்சம்** போன்ற நூல்களும் குறிப்பிடுகின்றன.

வட இலங்கையிலே கி.மு.இரண்டாம் நூற்றாண்டளவிலே தமிழ் பேச்சு மொழியாக வழங்கியதற்கான ஆதாரங்களுண்டு. பெருங்கற்படைக்கால பண்பாட்டைச் சேர்ந்த கல்லோடுகளில் தமிழ்ப்பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. **அபிசிதன்** (கந்தரோடை) கோவேதன் (ஆனைக்கோட்டை) வேளான் (பரமன்கிராய், பூனகரி) முதலான பெயர்களும் சொற்களும் கல்லோடுகளில் கிடைத்துள்ளன. அநுராதபுரத்திலே தமிழப்பிராமி எழுத்துக்கள் பொறித்த சங்கு சில நாட்களுக்கு முன்பு பல்கலைக்கழக ஆய்வாளர்களினால் அடையாளங்காணப்பட்டுள்ளது. மட்பாண்டங்களில் பெயர்களை எழுதும் வழக்கம் அநுராதபுரம் வரை பரவியிருந்தது. கலாசார முக்கோணத்தின் ஜேதவனாராம அருங்காட்சியத்தில் சிதைவுறாத மண்கலம் ஒன்றுண்டு அதிலே **உபலதர்மந்** என்னும் பெயர் எழுதப்பட்டுள்ளது. இலங்கையின்

Since 1995

VGJ

HIGH STREET CONVENIENCE STORE
355 High street North, Manor Park
London E12 6PQ
020 8548 1503

SAI SUPER MARKET
162 Queensway, Bletchley, Milton Keynes,
Buckinghamshire MK2 2SW
01908 644245

Zeon
CREATIONS
EVENT MANAGEMENT


வடக்கு கிழக்குக் கரையோரப் பகுதிகளில் உருவாகியிருந்த தமிழ் பேசுவோரின் குடியிருப்புக்கள் பண்டைக்காலம் முதலாகக் குறுநிலப் பிரிவுகளாக வளர்ச்சி பெற்றிருந்தன. அநுராதபுர மன்னர்களில் சிலர் சில சமயங்களில் அவற்றின் மீது மேலாதிக்கம் ஏற்படுத்தியிருந்தனர். ஆயினும் பிரதேச அரசுகளின் அரசியல் மரபுகளையும் சுயாட்சி உரிமைகளையும் பேணி வந்தனர். அக்காலத்தில் மட்டக்களப்பில் ஆட்சி புரிந்த பிரதேச அரசர்களில் சிலர் அநுராதபுர மன்னர்களோடு கொண்டிருந்த தொடர்புகளை **மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்** என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

தமிழர் வாழ்ந்த பிரதேசங்களிலுள்ள பிராந்திய அரசுகள் 13ஆம் நூற்றாண்டு முதலாக வன்னி என்று சொல்லப்பட்டன. வடக்கிலே பளனங்காமம், செட்டிகுளம் பற்று, கரிக்கட்டுமூலை, கருநாவல் பற்று, மேல்பத்து, முள்ளியவளை, தென்னமரவடிப்பற்று என்ற ஏழும் யாழ்பாணப் பட்டினம் என்னும் இராச்சியத்தினுள் அடங்கியவை. திருகோணமலை, கட்டுக்குளம் பற்று, தம்பலகாமம், கொட்டியாரம் பற்று என்னும் நான்கும் திருகோணமலைப் பிரதேசத்து வன்னிப் பிரிவுகள். தமிழ்ப் பிரதானிகளே 18ம் நூற்றாண்டின் முடிவிலும் திருகோணமலை தவிர்ந்த பிரிவுகளில் வன்னிபங்களாய் இருந்தனர். திருகோணமலையில் வன்னியர் வம்சாவழியினைப் போர்த்துக்கேயர் அழித்துவிட்டனர். திருகோணமலைப் பிரதேசத்தில் மட்டுமே வன்னி அரசர்களின் சாசனங்கள் கிடக்கின்றன.

திருகோணமலை வன்னியர் 14ம் நூற்றாண்டில் சுதந்திரமாக ஆட்சி புரிந்தமைக்குக் கங்குவேலிக்கல்வெட்டு ஆதாரமாகும். அவர்களின் நிர்வாக அதிகாரிகள் திருக்கோணேஸ்வரத்தின் பரிபாலனத்துக்கும் பொறுப்பானவர்கள் என்பது அச்சாசனத்தினாலே புலனாகின்றது. மட்டக்களப்பு, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, நாடுகாடு, கோறளைப்பற்று, உன்னரசகிரி என்பன மட்டக்களப்பு தேசத்து வன்னிப பிரிவுகள். அவற்றின் ஆட்சியாளரான **வன்னிபம்** என்றும் வன்னியனார் என்று சொல்வது வழமை. அவர்கள் நிர்வாகம் தொடர்பாக எல்லா உரிமைகளையும் கொண்டிருந்தனர். குடியானவர்கள் அரசுக்குரிய வருமான வரிகளை வன்னிபங்களுக்கே ஒப்படைத்தனர். நீதிபரிபாலனத்துக்கும் வன்னிபங்களே பொறுப்பாக இருந்தனர். அவர்கள் தங்கள் பொறுப்பிலே கணிசமான அளவு படைவீரர்களையும் வைத்திருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகக் கிழக்கிலங்கை வன்னிகள் மீது கண்டி அரசரின் மேலாதிக்கம் ஏற்பட்டபது. கொட்டியாரம் முதலாக்கப் பாணமை வரையிலுள்ள வன்னிபங்கள் ஆண்டு தோறும் கண்டி மன்னர்களுக்கு யானை, தேன், மெழுகு முதலியவற்றைத் திறையாகக் கொடுத்தனர்.

போர்க்காலங்களிலே படைகளைத் திரட்டிக் கொடுப்பதோடு வன்னியங்கள் போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குவதுண்டு. அத்துடன் இராச்சிய பரிபாலனம் தொடர்பாக அவர்கள் கௌரவமானதும் பிரதானதுமான ஒரு பங்கினைப் பெற்றிருந்தனர். இராச்சியத்திலுள்ள பிரதானிகளை இராசதானிக்கு வரவழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்த பின்பே கண்டி அரசன் முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வான். அத்தகைய சமயங்களில் கிழக்கிலங்கை வன்னியரும் பங்கு கொள்வர். வன்னியரின் படைபலம் பற்றி 17ஆம் நூற்றாண்டிலே ஒல்லாந்தரான பிலிப்பூஸ் வோல்டே (Philippors Baldeaus) தனது நூலில் சில விபரங்களைப் பதிவு செய்துள்ளார். ஜயவீர பண்டாரனுக்கு எதிராக விமலதர்மன் போர்புரிந்த காலத்தில் அவனுக்கெதிராக வன்னியர் படைகளை அனுப்பினார்கள். பழுகாமத்து வன்னியன் 5,890 படைவீரர்களையும் 25 அலியன் யானைகளையும் மூன்று போர் யானைகளையும் அனுப்பி வைத்தான். மட்டக்களப்பு வன்னியன் 9,800 படைவீரர்களையும் 30 அலியன் யானைகளையும் 14 போர் யானைகளையும் அனுப்பினான். பாணமை முதலான ஏனைய பற்றுகளின் வன்னியர் மொத்தமாக 59,896 படைவீரரையும் 63 அலியன் யானைகளையும் அனுப்பினார்கள். படைவீரரின் எண்ணிக்கை பற்றி **வோல்டே** பாதிரியார் கூறுவன. மிகைப்பாடானவையாக இருத்தல் கூடும். ஆயினும் வன்னியர்களில் ஒவ்வொருவரும் கணிசமான அளவில் படைகளை வைத்திருந்தனர் என்பது அவரது குறிப்பாலே தெளிவாகின்றது. அந்நாட்களின் கண்டிராச்சியம் ஒரு பிராந்தியங்களின் ஒன்றியமாக விளங்கியது.

வன்னிபங்கள் தங்கள் பிராந்தியங்களில் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்ததோடு இராச்சிய பிரபாலனத்திலும் அதன் பாதுகாப்பிலும் பங்கு கொண்டிருந்தனர் என்பது கவனித்தற்குரியதாகும். மட்டக்களப்பு வன்னிபமான தர்மசங்கரி பற்றிய விபரங்களும் முன்னே கூறியவற்றை உறுதி செய்கின்றன. ஸ்பில்வேர்கன் (ளிடைடிநசபநெ) என்னும் ஒல்லாந்தரின் தூதுவன் மட்டக்களப்பு ஏரியினை வந்தடைந்ததும் 1,603 வன்னிபமான தர்மசங்கரி அவனை இராணுவ மரியாதைகளோடு வரவேற்று விருந்துபசாரம் செய்து, பின்பு கண்டி அரசனிடம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.



கரகக்காவடி – மஹோற்சவம் 2006



சொற்பொழிவாளர் நாகை. முகுந்தன் ஆலயத்தில் 2001



சாரதா நம்பியாரூரன்

நிழலாடும் நினைவுகள்

வன்னிபத்தின் 1,500 வாட்படை வீரர் ஆயுதபாணிகளாக அணிவகுத்து நின்று ஸ்பில்வேர்கனுக்கு மரியாதை செய்தனர். அந்நாட்களில் முதலியார் ஒருவர் வன்னிபம் தலையிலான நிர்வாகத்தை நடத்தினார் என்பதையும் அவரைப்பற்றிய குறிப்பினால் அறியமுடிகின்றது. திருகோணமலையில் ஒல்லாந்தரின் அரசாங்க அதிபதியாக விளங்கிய ஃபான் செண்டன் (Van senden) 1786ஆம் ஆண்டில் எழுதிய அறிக்கையிலே அங்குள்ள நான்கு பற்றுக்களிலும் வாழ்ந்த குடியானவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் தமிழ் பேசும் சமூகங்களை மட்டும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடக்குரியது.

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆவணச் சுவடிகள் நிலையத்தின் பொறுப்பாளராக இருந்த டாக்டர் கியூ கிளெக்கோர்ண் 1796ஆம் ஆண்டிலே பிரித்தானிய நீதிபரிபாலனம் என்பன குறித்து ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்தார். அதிலே அவர் மேல்வருமாறு கூறுவார். மிகப் பழங்காலம் முதலாக இரு தேசிய இனங்கள் இலங்கையின் வெவ்வேறான பகுதிகளைத் தங்கள் உறைவிடமாக்கிக் கொண்டனர். அவர்களின் முதலாவது பிரிவினரான சிங்களவர் நாட்டின் மத்திய பகுதிகளிலும் வளவகங்கை தொடக்கம் சிலாபம் வரை பரந்துள்ள தெற்கிலும் மேற்கிலுமுள்ள பகுதிகளிலும் வாழுகின்றனர். இரண்டாவது பிரிவினர் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள மாவட்டங்களை உடைமையாக்கிக் கொண்ட தமிழராவர். சமயம், மொழி, பழக்க வழங்கங்கள் ஆகியவற்றில் இத்தேசியவினங்கள் இரண்டும் முற்றிலும் வேறுபட்டனவாகும்.

19ஆம் நூற்றாண்டில் எழுதி வெளியிட்ட தனது நூலில் பிரித்தானியரான ஹென்றி மார்ஸல் (Henry Marshall) சொல்லும் விபரங்கள் இதனை உறுதி செய்கின்றன. அவர் மேல்வருமாறு கூறுவார். "இலங்கையின் சனத்தொகையில் ஐந்து பிரிவினரை அடையாளங்கான முடிகின்றது. முதலாவதாகப் பௌத்தர்களான சிங்களவர்களைக் குறிப்பிடலாம். இந்த இனத்தவர் கிழக்கிலுள்ள மாகம் பத்து முதலாகச் சிலாபம் வரையாகப் பரந்துள்ள தெற்கிலும் மேற்கிலுமுள்ள கரையோரப் பகுதிகளிலும், கண்டி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழுகின்றனர். இரண்டாவதாக தமிழர்களாகவுள்ள இந்துக்களைக் குறிப்பிடலாம். இந்த வகுப்பினர் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள பகுதிகளில் வாழுகின்றனர்.

**தமிழரும், இந்துசமயமும், பௌத்தசமயமும்**

இலங்கை வரலாற்றில் இந்து சமயம் பௌத்த சமயம் ஆகியவற்றுக்கிடையான தொடர்புகளும் நல்லுறவுளும் பரஸ்பரமான இன ஒற்றுமைக்கும் அமைதிக்கும் அடிப்படையாக இருந்தவை. பௌத்தரான அரசர் எல்லோரும் இந்து சமயத்திற்கும் அதன் நிறுவனங்களுக்கும் ஆதரவு புரிந்துள்ளனர். தமிழரும் பிரதானிகளும் வணிகரும் இலங்கையின் பல பாகங்களிலும் பௌத்த பள்ளிகளையும் கோயில்களையும் அமைப்பதில் பங்கு கொண்டுள்ளனர். இந்த உறவுகள் ஆதிகாலம் முதலாக ஏற்பட்டிருந்தவை. ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழரில அதிகமானோர் பௌத்தராய் இருந்தனர். பிராமிச் சாசனங்கள் குறிப்பிடும் தமிழரில் பலர் பௌத்த சங்கத்தின் ஆதரவாளர். அநுராதபுரத்தில் அபயகிரி விகாரத்திற்குச் சமீபமாகவுள்ள சாசனம் குறிப்பிடும் தமிழர் சமணர் என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும்.

அநுராதபுரத்தில் ஏழாம் நூற்றாண்டில் அதிகாரம் பெற்றிருந்த **பொட்டகுத்தன்** என்னும் தமிழ்ச் சேனாதிபதி **மாட்டம்பிய** முதலான பல விகாரங்களை அமைத்து அவற்றுக்கு நிலமானியங்களை வழங்கினான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இலங்கையில் 11ஆம் நூற்றாண்டில் அரசுபரிந்த இரண்டாம் சோழ இலங்கேஸ்வரனின் அதிகாரியான பல்லாவராயன் தென்அநுராதபுரியில் போதி ஸ்ரீமிதிரரின் பேரால் சயித்தமும் பள்ளிகளும் செய்வித்தான். திருகோணமலையிலே பெரிய குளத்திலுள்ள நாத்தனார் கோயில் அங்குள்ள தமிழ்ப் பௌத்தகர்களால் புனர்நிர்மானச் செய்யப்பட்டது. அங்கு பதினாறு தமிழச்சாசனங்கள் உள்ளன. அக்கோயில் இராஜராஜப் பெரும்பள்ளி என்று பெயரிடப்பட்டது.

பொலனறுவைக் காலத்தில் இலங்கையில் வாணிபத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஐந்நூறுவரான நானாதேசிகள் என்னும் வணிகர் கணம் பல இடங்களில் பௌத்தப் பள்ளிகளை அமைத்தது. 11ஆம் நூற்றாண்டுக்குரிய ஒரு சாசனம் பெலன்னறுவையில் அவர்கள் அமைத்த பௌத்த கோயிலை **ஐந்நூற்றுவன் பெரும்பள்ளி** என்று குறிப்பிடுகின்றது. மாகல என்னும் ஊரில் முன்னாட்களில் அமைந்திருந்த வணிக நகரமான விக்கிரமசலாமேகபுரத்தில் அஞ்நூற்றுவன் பள்ளி என்னும் பௌத்த நிலையம் இருந்தது. மாத்தளை மாவட்டத்து விஹாரேஹின்ன என்னும் இடத்தில்

குளமொன்றின் சமீபத்திலே வனமொன்றின் எல்லைப்புறத்தில் பொலனறுவைக் காலத்துப் பௌத்த கோயில் ஒன்றின் அழிபாடுகள் உண்டு. கோயில் வளாகத்திலே மிக உயரமான கற்பலகையில் எழுதப்பெற்ற தமிழ்ச் சாசனமுண்டு. அது நானாதேசி வணிகர் உருவாக்கிய ஏறிவீரபட்டினம் பற்றிச் சொல்கின்றது. அது புத்தர்பெருமானுக்குரிய தர்மசாகரர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கியது. அதனை தன்மசாகரப்பட்டினம் என்று இச்சாசனம் குறிப்பிடுகின்றது.

மற்றுமொரு அஞ்ஞூற்றவன் பெரும்பள்ளி 13ஆம் நூற்றாண்டில் வெலிக்கந்தையிலே தமிழ் வணிகரால் அமைக்கப்பட்டது. 14ஆம் நூற்றாண்டில் 1344இல் சேனாலங்காதிகாரிகள் என்னும் பிர-தான மந்திரியினால் லங்காதிலகம் என்னும் பௌத்த கோயில் அமைக்கப்பட்டது. பதினெண்விஷயம் என்னும் பிரபல்யமான தமிழ் வணிககணம் கோயிலுக்கு நன்கொடையாக மகமை விளங்கிச்செப்பேடு எழுதிக் கொடுத்தமையினை அங்குள்ள தமிழ், சிங்கள மொழிச் சாசனங்களால் அறிய முடிகின்றது.

அரசருக்கும் வணிக நகரங்களுக்கும் சேவை புரிந்த தமிழர் படைப்பிரிவுகளும் பௌத்த நிறுவனங்களை பாதுகாப்பதிலும் அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தன. முதலாம் விஜயபாகு இறந்தபின் அபயகிரிமகா விகாரத்து உதுருள்மூலையின் நாயகரான **வியாரினி** முகலன் வேளைக்காரப் படையினை அழைத்து **தனதாப்பெரும்பள்ளி**யினையும் அதன் சொத்துக்களையும் சேவையாளரையும் பாதுகாக்கும் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைத்தார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் ருவான்வலி சாயவின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்ற தமிழ்ப் படையொன்று அதற்கு **ஜகதொப்ப கண்டன் பெரும்பள்ளி** என்று திருநாமம் சாத்தியது.

திருகோணமலை மாவட்டத்திலே மயிலன்குளம் என்னும் ஊரிலே 12அம் நூற்றாண்டிலே வேளைக்காரப் படையொன்றின் தலைவனாகிய கனவதி தண்டநாதன் பௌத்த கோயில் ஒன்றை அமைத்து அதற்கு **விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி** என்று பெயரிட்டான். அது வேளைக்காரப் படையொன்றின் பொறுப்பில் விடப்பட்டது. மற்றுமொரு வேளைக்காரப் படையின் தலைவனான உலோகநாத தண்டநாதன் பதவியாவிலே ஒரு பிரமாண்டமான விகாரத்தை அமைத்து அதற்கு **வேளைக்கார விகாரம்** எனப் பெயரிட்டான். அதனுடைய அறங்காவலுக்கு வேளைக்காரர் பொறுப்பேற்றனர். அது 13ஆம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகும்.

நவீன கால இந்து சமய மறுமலர்ச்சியை இலங்கையில் ஏற்படுத்தியவர் ஜளான ஆறுமுகநாவலரும், சுவாமி விபுலானந்தரும் இந்து பௌத்த சமயங்களிடையே நல்லுறவைப் பெரிதும் விரும்பினர். பெரும்பாலான வருமான வரிகள் பௌத்தர், சைவர் ஆகியோரிடமிருந்து அரசாங்கத்திற்குக் கிடைப்பதால் அவ்விரு சமூகத்தவரும் பாடசாலைகளை அமைப்பதற்கு அரசாங்கம் மானியங்களை வழங்க வேண்டுமென்று ஆறுமுகநாவலர் வலியுறுத்தினார். அதே சமயம் கிறிஸ்தவ பாதிரிமார்கள் இவ்விரு சமயங்களைச் சேர்ந்த மாணவர்களை அரசாங்க மானியம் பெறும் பாடசாலைகளைப் பயன்படுத்தி கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுவதை மிக வன்மையாக எதிர்த்தார்.

சட்ட சபையில் இலங்கைத் தமிழரின் பிரதிநிதியாக விளங்கிய முத்துகுமார சுவாமி பன்மொழி வித்தகர், பாளி மொழி இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டவர். சில நூல்களை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து வெளியிட்டவர். **தாட்டாவம்சம்** அவற்றிலொன்று அவரின் புதல்வரும் மகாமேதையுமான ஆநந்த குமாரசுவாமி இந்து, பௌத்த கலாசாரங்களைப் புரிந்து கொள்வதற்கான ஆற்றல்களை உருவாக்கி உலகப் பிரசித்தி அடைந்தவர். உன்னதமான புராதமான தென்னாசிய நாகரிகத்தின் அருமை பெருமைகளையும் இந்து, பௌத்த மரபுகளுக்கிடையிலான பொதுத் தன்மைகளையும் புரிந்து கொள்வதற்கான புதிய கண்ணோட்டங்களை சவயுகப் புலமை நெறியில் அவரால் எற்படுத்த முடிந்தது.

ஆதிகாலம் முதலாக 20அம் நூற்றாண்டு வரை இலங்கையிலே பௌத்த சமய வளர்ச்சியில் தமிழர் கொண்டிருந்த பங்கும் பணியும் குறிப்பிடக்குரியவை. இந்நாட்களில் இந்து, பௌத்த உறவுகள் பற்றிச் சில சமயங்களிலே பேசப்படுகின்றது. தேசிய நல்லிணக்கம் ஏற்படுவதற்குப் பரஸ்பரமான புரிந்துணர்வு இன்றியமையாத் தேவையாகும். தேச வரலாறுகளிலும் பாடநூல்களிலும் இலங்கையில் புரதான காலம் முதலாகத் தமிழருக்கும் பௌத்த சமயத்துக்கும் இடையில் இருந்த நல்லுறவுகளைப் பற்றிச் செய்வது இக்காலத்துக்குரிய இன்றியமையாத தேவையாகும்.

## கிழக்கிலங்கையில் இந்து சமயம்

கிழக்கிலங்கையில் இந்து சமயம் முதன்மை கொண்டதாக உள்ளது. ஆனால் இலங்கையிலுள்ள சமயங்களில் இந்து சமயமே புராதனமானது என்பதை எவரும் மறுப்பதில்லை. இன்று பௌத்தம் சிங்களவரின் பிரதான சமயமாகவும் சைவம் தமிழரின் சமயமாகவும் அமைந்துள்ளன. ஆனால் 15ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலங்களில் இச்சமயங்கள் இன அடிப்படையில் வேறுபட்டிருக்கவில்லை. தமிழர்களில் ஒரு பெரும் பகுதியினர் பௌத்தராய் விளங்கினர். சிங்களவரும் பல்வேறு மட்டங்களிலே இந்து சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர். இதை விளக்குவதாயின் அது மிக நீளமான வரலாறாகும். அதற்கு இங்கு இடமில்லை.

இலங்கையிலே சைவசமயம் ஆதிகாலம் முதலாக வளர்ச்சியடைந்தது. மிகவும் புராதனமான கோயில்கள் இலங்கையின் கரையோரப் பகுதியில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உற்பத்தியாகி இருந்தன. இவற்றுள் **திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்** என்பன முதன்மையானவை. இவற்றைப் பாடல்பெற்ற தலங்களென்று சைவர் போற்றுவர். சைவ நாயன்மார்களில் திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளிலே அவற்றைப் பற்றிய பதிகங்கள் பாடியுள்ளனர். இலங்கையின் கரையோரங்களிலுள்ள அனைத்துச் சிவாலயங்களையும் பௌத்த கோயில்களையும் போர்த்துக்கேயர் 17ஆம் நூற்றாண்டில் இடித்து விட்டனர் என்ற வரலாறு இங்குள்ள பலரும் அறிந்த ஒன்றாகும். இவற்றின் புனர்நிர்மானப் பணிகள் 19ஆம் நூற்றாண்டு முதலாக நடைபெற்றது.

கடந்த முப்பது ஆண்டுகளில் ஆயுதப்படைகளுக்கும் ஆயுதக்குழுக்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்களில் கிலமாகிப்பழுதடைந்த ஆலயங்கள் மிகப்பலவாகும். யாழ்ப்பாணத்தின் மிகவும் புராதனமான நகுலேஸ்வரம், மாவட்டபுரம், கந்தசுவாமி கோயில் என்பன அவற்றுள் அடங்கும். அவை அங்குள்ள மக்களின் அபிமானத்துக்குரிய புனித சேத்திரங்கள், யாத்திரைகளுக்குரிய விசேடமான தலங்கள்.

மட்டக்களப்பு தேசத்தவர்கள் தங்கள் சமயவழிபாடுகளிலும், யாத்திரைகளிலும் பண்பாட்டு மரபுகளிலும் முதன்மை பெறும் கோயில்களைத் தேசத்துக் கோயில்கள் என்று வகைப்படுத்தி உள்ளனர். இது ஒரு நெடுங்காலமாக நிலைபெற்று வந்த மரபாகும். திருக்கோணேஸ்வரம், வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், திருக்கோயில், போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், கதிர்காமம், செல்லக் கதிர்காமம் என்பன தேசத்துக் கோயில்கள் வருடாந்த உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கில் யாத்திரை செல்லும் அடியார்கள் அங்கு கூடுவது வழக்கம்.

இலங்கை மன்னருக்கும் இந்து சமயத்திற்கும் இடையிலான தொடர்பு மிகவும் நெருக்கமானது. பௌத்த சமயத்திலே பேரபிமானங் கொண்ட அரசர்களும் இந்து சமயத்திற்கும் அதன் நிறுவனங்களுக்கும் வைதீகப் பிராமணருக்கும் ஆதரவு புரிந்துள்ளனர். வேதம் வல்ல பிராமனரை அரண்மனையிலே புரோகிதராக நியமித்தனர். அரச குடும்பத்தவர் தம் வாழ்க்கை தொடர்பான சில சடங்குகளை இந்துப்பண்பாட்டு முறைகளுக்கேற்ப செய்தனர். முதலாம் பராக்கிரமபாகுவின் பாலிய பருவம் தொடர்பாக நாமகரணம், கர்ணவேதனம், அன்னப்பிராசனம், உபநயனம் முதலானவை பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

அநுராதபுரம், பொலன்னறுவை, கோட்ட சீதாவக்கை, கண்டி முதலிய இராசதானிகளில் பிரபல்யமான இந்துக் கோயில்கள் இருந்தன என்பது குறிப்பிடற்குரியது. அவற்றைப் பற்றி **மகாவம்சம், கந்தேஸ காவியங்கள்** சிலாவாசனங்கள் என்பவற்றின் மூலமாக அறிய முடிகின்றது. முன்னைய காலத்து மன்னர்களைப் போல கண்டி அரசர்கள் பௌத்த சமய மரபுகளைப் பேணியதோடு சைவ சமயப்பாதுகாவலராகவும் விளங்கினர். கிழக்கிலங்கையில் தமிழலக்கிய மரபிலே கண்டி அரசன் சைவ சமயப் பாதுகாவனாக விளங்குகின்றான். 17ஆம் நூற்றாண்டிலே கோகர்ணத்துக் கோணேசர் கோயிலைப் போர்த்துக்கேயர் அழித்துவிட்டதால் அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலே கோணேசரின் பெயராலே தாம்பலகாமத்தில் புதிய கோயிலை அமைத்தனர். அதற்கான ஏற்பாடுகளை பிரபல்யமான கண்டி ராசன் இரண்டாம் ராஜசிங்கன் செய்தான்.

அதனால் திரிகோணாசல புராணம் அவனைப் புகழ்ந்து பாராட்டுகின்றது. வெருகல் ஆலயத்திற்கு ஆதரவாக அவன் வழங்கிய தானங்களை 17ஆம் நூற்றாண்டிலே தம்பலகாமத்து வீரக்கோண் முதலியார் பாடிய **சித்திரவேலாயுகர் காதல்** வர்ணிக்கின்றது. தான்தோன்றீஸ்வரம் தொடர்பாக விமலதர்மசூரியன்

மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிய விபரங்கள் சில இலக்கியத்தில் பதிவாகியுள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட அனர்த்தங்களின் விளைவாகச் சேதமடைந்து விட்ட இந்து ஆலயங்கள் மிகப் பலவாகும். இவற்றைப் புனரமைத்து அங்கு வழமை போல வழிபாடுகளை நடைபெறச் செய்வது வடகிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள் கட்டமைப்பின் ஒரு பிரதான அம்சமாக வேண்டும். இந்து சமுதாயத்தின் உணர்வுகளைப் புரிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையிலே புருத்தான வேலைகள் நடைபெற வேண்டும்.

ஆனால் அவ்வாறான நிலை அற்று இன்று இந்து கோயில்களை இடித்து பௌத்த விகாரை கட்டுவதும், பௌத்தர்கள் இல்லாத இடத்தில் இந்துகளின் பூர்வீக வாழிடங்களில் பௌத்த மதத் தலங்களை கட்டுவதும் தற்போதைய இலங்கை அரசாங்கங்களின் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. இவ்வேளையில் இலங்கை தமிழர்களான இந்துக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு எமது இந்து தர்மத்தை எம் தாய் மண்ணில் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

இதன் அடிப்படையில் எமது தாய் மண்ணில் இருந்து புலம்பெயர்ந்தாலும் எமது மண்ணையும், எமது மக்களையும் மறவாது எம் மண்ணின் விடுதலைக்காகவும், எம் மக்களின் துன்பியலை தீர்க்கவும் தம்மாலான பணிகளை மேற்கொள்ளும் எம் உறவுகள், தமிழர் என்ற சைவ சமய பரம்பரையினரை தற்போதைய இந்து மக்களின் சமய உரிமைகளை பாதுகாக்கவும், வளர்க்கவும் உறுதுணை புரிவது தற்காலத்தின் தேவையும், எமது சமூதாயத்தின் எதிர்கால பாதுகாப்பு தேவையாக உள்ளதையும் நினைவுபடுத்தும் வேளை. தமிழையும், தமிழர் தம் பண்பாட்டையும், தமிழருக்கு உருத்தான சைவ சமயத்தையும் எமது உயிர் நாடியாக கொண்டும், எம் வாழ்வை அமைக்க எல்லோரும் முனைவோமாக!

**"வாழ்க தமிழ் வளர்க தமிழ் பண்பாடு, நிலைபெறுக இந்து சமயம்"**

**சீனித்தம்பி யோகேஸ்வரன்,**
(பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்)
தலைவர், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
தலைவர், கிழக்கு இந்து ஒன்றியம்
மாவட்ட காரியாலயம்,
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
இல.84, பார் வீதி, மட்டக்களப்பு.
இலங்கை.




Sharavana
OFF LICENCE
NEWSAGENT
GROCERY FRUIT & VEGETABLES
எம்மிடம் அனைத்து
விதமான
உடன் இறக்கப்பட்ட
மரக்கறி வகைகள்,
பலசரக்கு வகைகள்,
பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்,
தொலைபேசி அட்டைகள்,
பூஜைத்திரவியங்கள்
அனைத்தும்
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
Opening Hours:
7.00 am - 11.00 pm
(Seven Days a Week)
144 Hoe Street, Walthamstow, London E17 4QR
Tel: 020 8521 4955

## வேதாகம வித்தகர்" சிவஸ்ரீ . சௌபாக்கிய. சசிகுமரக் குருக்கள் B A (Hons)



### பிரதம குரு –கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் – பெரிய பிருத்தானியா

# இந்துக்களின் வேதஇலக்கியங்களில் மருத்துவ சிந்தனைகள் - ஓர் நோக்கு

வைதீக இலக்கியங்களைப் பொறுத்தவரை அவை சமயம் சார்ந்த இலக்கியங்களாக அமைந்தாலும், இவற்றில் அக்கால பண்பாடுசார் நெறிமுறைகளும், பழக்கவழக்கங்களும் இருப்பதனை அவதானிக்கலாம் .இந்தவகையில் வானிலை, ஆன்மிகம், போர்முறைகள், குடும்பவாழ்க்கை, விவாகமுறை, பெண்கள்நிலை,கல்வி ,கலை ,விளையாட்டு, பொழுதுபோக்கு, உணவு, உடை, பிணி, பிணிதீர்க்கும் மருந்து, ஆரோக்கிய வாழ்வு ஆதியனவை பற்றிய செய்திகளும் ஆங்காங்கு விரவி வருகின்றன.

வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள யாகம் முதலிய கர்மானுஷ்டானங்கள் சரீர ஆரோக்கியமின்றி நடைபெறாது. எனவே ஆரோக்கியத்தைப் பேணவும், வியாதிகளைக் குணப்படுத்தவும் இருமுறைகளைக் கையாண்டுள்ளதைக் காணமுடிகிறது. ஒன்று வேதப்படல்களில்சில பாடுவோந் தன்னைப் பிணிகளிலிருந்து விலக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் மற்றையது ஆரோக்கியமாகத் தான் வாழவேண்டும் என்று மருத்துவத்தை முன்வைத்து இறைஞ்சும் வகையில் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றன .இதனை நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழி விளக்குகின்ற ஆழமான சிந்தனையோடு ஒப்பு நோக்கிப் பார்க்கக் கூடியதாகவுமுள்ளது .

சில வேதப்பாடல்கள் விரிவுபட்ட முறையில் நோய்களை இனங்காணும் பாங்கும் அவற்றிற்கான மருந்து முறைகளைக் கையாள வழிகாட்டும் பங்கும் குணப்படுத்தும் முறைகளையும் தெருவிப்பதிலிருந்து அக்காலத்தில் இருந்த மருத்துவ முறையினைச் சந்தேகத்திற்கு இடமின்றிக் காணக்கூடியதாகவுள்ளது. "மருந்து பாதி மந்திரம் பாதி என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப மருந்துப் பொருட்களையும் மந்திர உச்சாடனத்துடனே வழிபாட்டில் பயன்படுத்துவதையும் வேதப்பாடல்களில் அதிகவளவில் காணமுடியும் .

வேதங்களுள் காலத்தால் முற்பட்டதும் ,முதன்மையானதும் இருக்கு வேதமாகும் .இது 1028 பாசுரங்களைக் கொண்டு 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ரிக் என்பது பாடல் எனப்பொருள்படும். இப்பாடல்கள் தத்துவம் சார்ந்தும் உலகியல் சார்ந்தும் அமைந்ததோடு மட்டுமல்லாமல் பிற்கால சம்ஸ்கிருத சிந்தனைகளிற்கு ஆதர்ஷமானவை என்று கருதுமளவிற்கு உயர்ந்து விளங்குகின்றன. இத்தகைய இவ்விருக்கு வேதத்தில் மருத்துவம் பற்றிய சிந்தனைகள் விரவிக்காணப்படுகின்றன .

இருக்கு வேதப்பாடல்களை அவதானிக்குமிடத்து அஸ்வினிகுமாரர்கள் தேவமருத்துவர்களாகக் குறிப்பிடப்பட்டு வருவதனைக் காணலாம். இவ்விரட்டையர் மீதும் இருக்குவேதம் ஏறக்குறைய 50 சூக்தங்களைக் கொண்டுள்ளது. இந்திரன் (250), அக்கினி (200), சோமன் (120) ஆகியோருக்கு அடுத்தபடியாக் அதிக சூக்தங்களைக் கொண்டுள்ளனர் என்ற பெருமை இவர்களுக்கே உரித்தானது. இதிலிருந்து அக்காலத்தில் மருத்துவர்களிற்கு வழங்கப்பட்ட உயர்வு நன்கு புலப்படுகிறது. அஸ்வினி குமாரர்கள் குறித்த பாடல்களில் குறிப்பாகவும் சிறப்பாகவும் பல மருத்துவ முறைகள் பற்றிய செய்திகள் எமக்குக் கிடைக்கின்றன. இவற்றை நம்புவதற்கு சற்றுக் கடினமானவை போலத் தோன்றினாலும் இன்று விஞ்ஞான ரீதியில் விருத்தியடைந்து வரும் மேல்நாட்டு வைத்திய முறைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும் பொது அதன் உண்மைத்தன்மை புலனாகும்.

இவ் அஸ்வினி குமாரர்கள் ததீசி முனிவருடைய தலையை வெட்டிஅதற்குப்பதில் குதிரைத் தலையை ஒட்டி மறுபடியும் அதையும் நீக்கிப் பழைய தலையை வைத்ததாக வருகிறது. இது அக்காலத்துச் சத்திரசிகிச்சையின் நுணுக்கத்தன்மையினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. சாபத்தினால் இந்திரன் தன் விதியினை இழக்க ஆட்டின் விதையினைப் பொருத்தி ஆண்மையைத் தோற்றுவித்ததாக வருவது

Transplaniation முறையை அன்றே செய்ததைக் காட்டுகிறது .மேலும் தம்மை வழிபட்ட விச்வகனின் இறந்த மகனை பிழைப்பித்தனரெனவும், நோயால் பீடிக்கப்பட்டுத் தகப்பனது வீட்டில் கிழத்தனத்தை அடைந்த கோஷைக்குநோயைப் போக்கி யௌவனத்தை ஆக்கினர் எனவும் ,வயது முதிர்ந்த யவனரை இளைஞராக்கினர். எனவும் இருக்குவேதப்பாடல்களில் வருகின்றன .(VII-71-5).(X-39-4).(I-117-13) குருடான கண்வருக்கும் செவிடாரான நார்ஷதருக்கும் நோய்தீர்த்தமையை பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது (I-117-8)

युवं श्यावाय रुशतिमदत्तं महः क्षेणस्योधिना कण्वाय ।
प्रवाच्यं तद्वषणाकृतं वां यन्नार्षदाय श्रवोआध्याघतम् ॥ ॥

இதுபோல் ராஜ கன்னிகையான கால் ஒடிந்த விச்பலைக்கு இரும்புக்காலை இணைத்துச சரிசெய்ததாகவும் (I-116-15) கடவான் என்பவருக்கேற்பட்ட குருட்டுத்தன்மையையும் செவிட்டுத்தன்மையையும் போக்கியதகவும் பூஷா என்பவரின் உடைந்த பல்லை நீக்கிப் புதுப்பல்லைக்கட்டி சரிசெய்ததாகவும் ,வத்திரிமதி என்பவளுக்கு மலட்டுத்தன்மை நீக்கி மகப்பேற்றை அளித்ததாகவும் காணப்படுகிறது . இதுபோல் பல்வேறு மருத்துவவியல்சார் சிந்தனைகள் 112 ,116,119ம் சூக்தங்களில் வருவதை அவதானிக்கலாம் .

இவ் அஸ்வினி குமாரர்களின் சூக்தங்களில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் இத்தகைய கருத்துக்கள் இருப்பதனை அவதானிக்கலாம். இருக்குவேதத்தின் பெரும் தெய்வமான இந்திரனது பாடல்களிலும் மருத்துவ சிந்தனைகள் பரவலாக உள்ளன. இந்திரன் அபலா என்பவரின் தோல் வியாதியையும், சோனா என்பவரின் நொண்டித் தன்மையினையும் பாரவராஜா என்பவருடைய கண் பிணியையும் போக்கியதாகவும் குறிப்புக்கள் உள்ளன.

அஸ்வினி குமாரர்கள் தேவமருத்துவர்களாகப் போற்றப்பட்டது போன்றே உருத்திரனும் சிறந்த வைத்தியன் எனப் போற்றப்பட்டுள்ளமையை நோக்கலாம். **भिषक्तमं त्वा भिषजां शृणोमि।** (II-31-1) இவர் இப்பாடலில் ஜலாச பேசஜன் என்று பேசப்படுகிறான் .அதாவது அவர் தனது குளிர்ந்த கையினால் தொட்டாலே நோயெல்லாம் தீரும் (II-33-7) (VIII-29-5) என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவர் மக்களது நோய்களை மட்டுமன்றி விலங்குகளது பிணிகளையும் தீர்க்கவல்லவர் எனவும்(I-141-1) குறிப்பிடப்படுகிறார். உருத்திரன் கொடுக்கும் இனிய மருந்தால் நூறு ஆண்டுகள் ஜீவிக்கலாம் எனவும், நன்மக்களைப் பெறலாம் எனவும், ஜுரத்தையும், கிருமிகளால் உண்டாகும் வியாதிகளையும் போக்க இவருக்கு ஆற்றல் உண்டு எனவும், இவரால் வியாதிகள் வராமல் தடுக்கவும் முடியும் எனவும் குறிப்பிடப்படுவதனை நோக்கலாம் .இவற்றினை எடுத்து நோக்குமிடத்து உருத்திரனைக் குறிக்கும் பாடல்கள் நோய்தீர்க்கும் வைத்திய முறைகளை மட்டுமன்றி நோய்வருமுன் அவற்றை வராமல் காப்பதற்கான வழிமுறைகளையும் அறிவுறுத்துவதாக உள்ளமையை அவதானிக்க முடிகிறது. மருத்துவ முறையைக் கையாள்வதனால் வாழ்வினை எவ்வாறு மகிழ்வுடன் அனுபவிக்கலாம் என்பதையும் இது மறைமுகமாகவோ ,நேர்முகமாகவோ தெரியத்தருகிறது .

இது போன்ற தெய்வங்களின் சூக்தங்களில் வருகின்ற மருத்துவக் குறிப்புக்களை மேலும் நோக்கினால் சூரிய சூக்தமும் முக்கியமானதொன்றாகவே அமைகின்றது. சூரிய ஸூக்தத்தில் அவரை வழிபடுமிடத்து தெளிவான பார்வையினையும் நற்சந்ததியினரையும், நோயின்மையினையும், வேண்டி வழிபடப்படுகிறது. மேலும் தற்காலத்தில் சூரிய நமஸ்காரத்தின் மூலம் பெறப்படுகின்ற நன்மைகள் பல என ஆய்வுகள் தெருவிக்கின்றன. காலைக் கதிரில் இருந்து விற்றமின் பெறப்படுவதும் இதனை உறுதிசெய்துள்ளது. இவைகள் தவிரவும் நேரடியான மூலிகைகளை வழிபாடும் தன்மையினையும் இருக்கு வேதத்தில் காணமுடிகிறது. மலையில் வளரும் மூலிகைச செடியான சோமலதையை வழிபாடும் முறைநோக்கலாம். சோமரசம் நீண்ட ஆயுளைத் தரும் என எண்ணி யாகங்களில் பயன்படுத்தப்பட்டு வந்ததனை சோம சூக்தத்தில் இருந்து அறியலாம்.

रथिंनेश्चित्रमाश्चिनमिन्दौविधायमाभर ।

இவ்வாறான மூலிகை வழிபாடு பற்றிய சிந்தனைகள் கிரேக்க அவஸ்தாவிலும் வருவதனை ஒப்புநோக்கலாம் இயற்கையாக வளருகின்ற இத்தாவரங்களை உபயோகித்தால் உயிரினங்களுக்கு நோய்நீக்கம் மட்டுமன்றி, தேகாரோக்கியமும் கிடைக்கின்றது என்ற சிந்தனையால் போலும் வேதங்கள் மூலிகைச செடிகளுக்கும் முக்கியமானதொரு இடத்தினை வழங்கியுள்ளது.

சோமசூக்தத்தை போன்று பூமி சூக்தத்திலும் மூலிகைச செடிகளை தாங்கி நிற்கின்ற நிலம் பற்றி குறிப்புக்கள் வருகின்றன. பல்வேறு ஆற்றல்களை உடைய மூலிகையை யார் தாங்குகிறாளோ அந்தப் பூமி நமக்குப் பரந்த இடத்தைத் தரட்டும் எனவருவது மூலிகைகள் இயல்பாகவே ஆற்றல் உடையனவாக வளர்வதனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இதுதவிர ஓஷதி சூக்தமும் மருந்து மூலிகை பற்றிக் குறிப்பிடுவதனையும் நோக்கலாம். மேலும் சில போதுப்பாடல்களிலும் இவ்வாறான சிந்தனைகள் உள்ளமையினைக் காணலாம். மூலிகைகள் நோய்களுக்கு மட்டுமன்றி வேறு சில தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டதனை பின்வரும் பாடல் விளக்குகிறது.

**अहमस्मि सहमानाथत्वमेसि सासहिः ।**
**उमेसहेस्वनि भूत्वी सपत्रीमे सदावहै ॥**

இதில் மனைவியொருத்தி கணவன் பிறஸ்திரியை நேசிக்காமல் தன்னையே நேசிக்க வேண்டுமாறு முலிகாப்பிரயோகங்கள் செய்த வழமையினையும் காட்டுகிறது. இதுதவிரவும் ஆங்காங்கு இருந்து வரும் குறிப்புக்களில் யக்ஷ்மா, க்ஷயம் முதலிய நோய்களைப்பற்றியும், இவ்வகை நோய்களை தவிர்க்கவல்ல மூலிகை வகைகளைப் பற்றியும், இவைகளை அறிந்து நோய்களைக்களையவல்ல வைத்தியர்களைப் பற்றியும் அறியக்கூடியதாக இருக்கிறது. இங்கு மனித வைத்தியமுறை மட்டுமன்றி மிருகங்களுக்கும் சிகிச்சை செய்கின்ற முறைகள் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. ஆயுர்வேதம் குறிப்பிடுகின்ற வாதம், பித்தம், கபம் என்று முன்று தோஷங்களையும் திரிதாது என்ற சொல்லினால் குறிப்பிடுவதில் இருந்து மருத்துவத்தின் முன்னோடித்தன்மை இருக்கு வேதத்துடனேயே ஆரம்பமானதேன்றால் மிகையில்லை எனக் கருதலாம்.

யசுர்வேதத்தைப் பொறுத்தவரையில் யாகாதிக் கிரிகைகளை முதன்மையாக எடுத்துரைத்தாலும் மருத்துவ சிந்தனைகளைக் கொண்டவைகளாகவே உள்ளது. சுக்கில யஜுர்வேதத்தில் சில மருந்துகளைப்பயன்படுத்தி குஷ்டம், இதயரோகம் போன்றவற்றை போக்குவதோடு காசம், பைத்தியம் போன்ற பிணிகளையும், மூன்று தோஷங்களையும் குறிப்பிடும் மந்திரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இருக்குவேதம் குறிப்பிடுகின்ற அதே அஸ்வினி தேவர்களை யசுர்வேதம் தேவர்களின் வைத்தியராகவே குறிப்பிடுகின்றது.

**अश्विनौ वै देवानां भिषजौ ।**

இதுதவிரவும் வைத்தியம் செய்வதற்கு எவ்வாறானவர்கள் செய்யலாம் என்பதையும் இதேயஜுர்வேதம் குறிப்பிடுகின்றது. இங்கு பிராமணர்கள் வைத்தியர்களாக முடியாது எனவும் வருகிறது. ஏனெனில் பிராமணர்கள் வைதீகக் கிரியைகளை நெறிப்படுத்துவதில் தம்மையாற்றுப்படுத்துவதனால் அப்பணிக்கு இடையூறாக இருக்கும் எனக்கருதிப்போலும் குறிப்பிடப்பட்டுள்ளது **ब्रामणेन भेषजं न कार्यम्** ।(6.4-9-2) என வருவதிலிருந்து காணலாம். மேலும் சதருத்திரியத்திலும் உருத்திரனை வைத்தியர்களுக்கெல்லாம் வைத்தியரான மஹா வைத்தியர் எனக்குறிப்பிடுகிறது.

அதர்வண வேதம் வைதீக இலக்கியத்துள் இறுதியாக இடம்பெற்றதாகும்.இதில் சாதாரண மக்களுடைய வாழ்வும், சமூக அமைப்பும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது .இதில் மந்திரம், மாயம், மருந்து, பில்லி, சூனியம், பேயகற்றல் பற்றிய சிந்தனைகளும் விரவிக்காணப்படுகின்றன. மேலும் இதில் ஏனைய போல் சமய வாழ்வியலை மையப்படுத்தாமல் அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ் என்ற மக்கள் கூட்டத்தினரின் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இதனால்தான் என்னவோ ஆயுர்வேத மருத்துவ முறைக்கு அதர்வண வேதமே மூலகாரணமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வேதத்தில் உள்ள ஆயிரக்கணக்கான மந்திரங்கள் இதைப்பறைசாற்றுவதாகவே உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக அதர்வண வேதத்தின் முதலாவது காண்டத்தின் முதலாவது பாடலே போதுமானது.

**ॐ येत्रिषप्राः परियन्ति विश्वा रूपाणि विभ्रतः ।**
**वाचस्यतिर्बला तेषां तन्वोवउपघ दाधातु मे ॥**

இப்பாடலின் பொருளை நோக்குவோமெனில் மூன்று தாதுக்கள், ஏழு உபதாதுக்கள் என்பனவற்றால் எவர் எல்லாவிதமான வடிவங்களையும் தினம்தோறும் ஒவ்வொரு உடலிலும் கொண்டிருக்கின்றாரோ அவருடைய முழுப்பலத்தையும் இப்போது என்னுடைய உடலில் நிலைத்து நிற்குமாறு பிரம்மமானவர் அருள்புரியட்டும், எனக்கூறுவது ஆரோக்கிய வாழ்விற்கான வேண்டுதலாகவே அமைந்துள்ளது. இவ்வேதத்தில் பிணி,

பிணியைப்போக்கும் மருந்து ,மூலிகைகள் ,த்ரிதோஷ சித்தாந்தம் ,பிணிகளின்பெயர்கள் ,அவைகளின் உட்பிரிவு, உடலுறுப்புக்கள் ,ஆயுர்வேதத்திற்கே தனித்தன்மையாக விளங்கும் எட்டுவிதமான மருத்துவ முறைகள் ஆகியன பற்றி மிகவும் விஸ்தாரமாக விளக்கப்பட்டுள்ளன .

மேலும் ஒருவருக்கு மக்கள் பிறப்பதற்கு முன்னர் அவர் உடல் வலிமையுடனும், நீண்ட ஆயுளுடனும், ரோகமின்மையுடனும் இருத்தல் வேண்டும் என குறிப்பிடுவது மக்களின் தேகவலிமையை வலியுறுத்திப் பேசுவதாகவே உள்ளது .அதர்வணத்தில் நீண்ட ஆயுள் பற்றி ஐம்பத்தைந்து ஸுக்தங்களும், ரோகம் -அவற்றைப் போக்கக்கூடிய மந்திரம், ஔஷதம், மணி இம் மூன்று பற்றியும் அறுபது ஸுக்தங்களும் குறிப்பிடுகின்றன. குஷ்டம் எல்லா நோய்க்கும் தலையாயது என முதன் முதலில் இக்ஷ்வாகு அறிந்தார் எனக்குறிப்பிடுகிறது.

**यं त्वा वेद पूर्व इक्ष्वोको यंवो त्वा कुषृ काम्य ।**

மேலும் இரத்தப்போக்கை தடுப்பதற்கான ஸுக்தமும் இங்கு காணப்படுகிறது. "சிவந்த ஆடைகளுடன் திரியும் ஸ்திரீகளாம் நாடிகளாகிய தாங்கள் சகோதரன் இல்லாத சகோதரிகள் போல சக்தி ஒழித்து சாந்தமாகுங்கள் "(I-17-1) இதுபோல் முறிந்த எலும்பினை ஒட்டுவதற்கான மருந்துச செடியினை நோக்கி கூரப்படுகின்ற மந்திரங்களும் உண்டு. மனித உடலிலுள்ள எலும்புக்களின் எண்ணிக்கையை முதன் முதலில் கூறியது அதர்வணவேதமே. பின்னர் கிருஸண யஜுர் வேதத்தை சார்ந்த சதபதப்பிராமணமும் அப்படியே எடுத்துக் கொண்டு விளக்குகிறது. இது தற்கால உடற்கூற்று நிபுணர்கள் கூறும் எண்ணிக்கையோடு ஒன்றாகவே அமைந்துள்ளது. அதர்வணவேத சாந்தி சூக்தம் மனஅமைதி வேண்டி உளவியல் ரீதியில் கூரப்படுகின்ற மந்திரமாகும். இதில் மருந்துச செடிகொடிகளுக்கும் அமைதி நிலவவேண்டும் என வேண்டப்படுகிறது. மூலிகைகளின் பயன் பாட்டினை இவ்வேதத்தில் மிக அழகாக எடுத்துக் கூரப்படுவதனை அவதானிக்கலாம். இருக்குவேதம் போன்று இங்கும் மூலிகைகள் இயற்கையாகவும் - செழிப்பாகவும் வளரும் தன்மை விளக்கப்படுவதோடு அவற்றினை வளர்க்கின்ற முறையும் குறிப்பிடப்படுகின்றன. இதனை

**अथर्वणीरसिदेवीर्मनुव्यजा उत ।**

**ओषधयः पूजायन्ते थदा त्वं**

**प्राणजिन्वसि ॥**

ஏ பிராமணனே நீ மழைபெய்யும் அதர்வண ரிஷியினாலும், ஆங்கிரச ரிஷியினாலும், தேவர்களாலும், மனிதர்களாலும், உண்டுபண்ணப்பட்ட பலவிதமான ஔஷதிகளும் தோன்றி வளரட்டும். என வரும் சூகதம் மூலிகை வளர்ப்பின் முறைபற்றி குறிப்பிடுவதாகவே உள்ளது. மேலும் காமாலை, வெண்குஷ்டம், ஜுரம், க்ஷயம், இருமல், வாதம், சுரப்பிகளில் வீக்கம், இரத்தக்குறைவு, சீதபேதி, மேகநோய், இருதயநோய், சாதாரண பலவீனம், யானைக்கால் நோய், வைஸுரீ, ஆகிய பல நோய்களின் அடையாளங்களைத் தெளிவாகச சொல்லி மூலிகைகளைக் கொண்டு இவற்றினைக் குணப்படுத்தும் முறைகளையும் இவ்வேதம் விபரமாக அறிவிக்கின்றது .எடுத்துக்காட்டாக வெண்குட்டத்தை தீர்க்க உதவும் கருப்புச செடி ஒன்றை முதன் முதலில் ஆஸுரீ என்பவர் கண்டுபிடித்தார் என குறிக்கப்படுகிறது. மேலும் கர்ப்பச்சிதைவு ஏற்படும் போல இருந்தால் அதை தடுக்க பிருஷ்நிபர்னி என்ற பச்சிலை மருந்து உதவியது என வருவதும் பின்னர் இதனை சுஸ்சுருதர் குறிப்பிடுவதையும் காணலாம்.

இவைதவிர நோயற்றவர்களுக்கு வலுக்கொடுக்கவும் அவர்கள் இழந்த தென்பை மீண்டும் பெறவும், யானை முதுகின் தோலால் ஸ்கந்தமணி அதாவது தாயத்து செய்து யானை வாலின் மயிரால் அதைக் கட்டிக்கொண்டமையும் சொல்லப்படுகிறது. தமனிக்கும் ,சிரைக்கும் உள்ள வித்தியாசம் அவர்களுக்கு தெரிந்தே இருந்தது. தமனியில் ஓடுன் சிவப்பு ரத்தத்திற்கு அருணா என்றும் சிரையில் ஓடுன் கருப்பு ரத்தத்திற்கு லோகினி என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.அதர்வ வைத்தியம் ஓரளவு கடினமாக இருந்தாலும் உடற்கூறுகளையும், அங்க அமைப்புக்களையும் அக்காலத்தவர்கள் நன்கு அறிந்திருந்தே வைத்தியம் செய்திருக்கிறார்கள் வேள்விகளின் போது அவர்கள் விலங்குகளின் மூட்டுக்களை தளரவிட்டு அங்க அமைப்புக்களை கவனத்தோடு பயின்றிருக்கிறார்கள். நீண்ட ஆயுள் வேண்டிக் கூறுகின்ற மந்திரங்களான ஆயுஷ்ய சூக்தத்தில் நோய் நீக்களையும் ,நுற்றாண்டு வாழ்வினையும் பிரார்த்திப்பதாகவே உள்ளது. உலகின் சமய இலக்கியங்களுள் முதன் முதலாக அதர்வணத்தில்தான் ரணத்தை ஆற்றும் மூலிகைகளும், வைத்திய முறைகளும் விபரிக்கப்பட்டுள்ளன. மந்திரோச்சடனங்கள்

மூலமாகவும் ,மாந்திரீகம் முதலியவற்றினுடாகவும் வைத்தியம் செய்கின்ற முறையினையும் மிகவிரிவாகக் கூறுகின்றது .

வேதங்களில் வரும் மருத்துவக்குறிப்புக்கள் யாவும் மந்திர உச்சாடனங்களால் மட்டுமின்றி மருத்துவ முறைகளையும் சேர்த்தே கையாண்டதனாலேயே சாதனைகள் பெறப்பட்டன. ஏனெனில் பிணிகளைக் கூறிஅதைப்போக்கும் மருந்தையும் கூறியிருப்பதனால் மருத்துவம் செய்துதான் பிணிகளைப் போக்கினார்கள் என்பது வெளிப்படையகத் தெரிகிறது. இவ்வேத இலக்கியங்கள் முழுவதையும் தற்கால மருத்துவத்தோடு ஒப்பு நோக்கி ஆய்வுசெய்ய முடியும் என்பதனை அதில் வரும் மருத்துவப் பிரிவுகளே சுட்டிக்காட்டுகின்றன. சத்திர சிகிச்சை(surgey), கண் சிகிச்சை(Ophthalmology), காது -மூக்கு தொண்டை முதலியவற்றிற்கான சிகிச்சை(E_N_T), பற்சிகிச்சை(Dental Surgery) தோல் சிகிச்சை(Deruatology), பொது சிகிச்சை(Medicince), பெண்நோயும்-மகப்பேற்று மருத்துவமும்(Gynaecology & Obstetrics), மனநோயியல்(Psychiatry), நரம்பு மருத்துவம், (Nevrology)முறிவு தறிவு (Orthopaebics), பிராணிகளின் உறுப்புக்களை சேர்த்துச்செய்யும் சிகிச்சை(Transplatrion),மிருகவைத்தியம் (Weternary), முதலான துறைகளாக அவை விரிந்து அமையுமாறு நோக்க முடியும். தேவமருத்துவரான அஸ்வினி குமாரர்களால் இவ்வாறான வைத்திய முறைகள் நடைபெற்றன என்றால் அவர்களின் தொலைநோக்குச சிந்தனை இன்றைய மருத்துவரால் சிலாகிக்க கூடியதொன்றாகவே கருதமுடியும் .





உ
Sivamayam
SIVAGAMA KALANIDHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM
A.V. SWAMINATHA SIVACHARIYAR
FOUNDER & PRINCIPAL
SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.
Email : avssivachariyar@yahoo.com
Web Site : www.vedaagamavidhyamandir.com

# ஸ்ரீ விநாயகர் மகிமை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

அகஜா நந பத்மார்க்கம் கஜாநந மஹர்நிசம்
அநேகதந்தம் பக்தானாம் ஏகதந்த முபாஸ்மஹே!

விநாயகர். இவர் மகிழ்ச்சியின் வடிவம். யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் தோற்றம். எளிமையான வழிபாடு. அதிகமான பலன்கள். இனம் மதம் மொழி இவைகளைக் கடந்த கருணை. உலக முழுதும் அருளாட்சி, என ஏராளமான பெருமைகளுக்குரியவர்.

பிடியதன் உருஉமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் ....

என்பது திருஞானசம்பந்தர் தேவாரம். பிடி என்றால் பெண்யானை. கரி என்றால் ஆண்யானை. உமாதேவி பிடியதன் உருக்கொண்டும், சிவபெருமான் கரியதன் வடிவு கொண்டும் இமய மலைச்சிகரங்களில் களிப்புற்று இருந்த வேளையில் ஓம் எனும் பிரணவ வடிவாகத் தோன்றியவர் கணபதி.

இவர் தம்மை வழிபடும் பக்தர்களின் இடர்கள், இன்னல்கள், துன்பங்களைப் போக்குபவர் என்பது அத்தேவாரத்தின் பொருளாகும்.

மூஞ்சூர் எனப்படும் பெருச்சாளி உருவத்தில் ஒரு அசுரன் உலகில் எல்லோரையும் மிகவும் துன்புறுத்தி வந்தான். தவம் செய்து பலவிதமான வரங்களைப் பெற்றிருந்ததால் அவனை அழிக்க யாராலும் முடியவில்லை. மனிதன், தெய்வம், அரக்கன், மிருகம் என எல்லா உருவங்களின் ஒரு மித்த உருவமாகிய விநாயகரால் மட்டுமே முஷிகாஸுரனை அழிக்க முடியும் என முடிவு செய்த தேவர்கள் அவரிடம் சென்று வேண்டினர்.

பிள்ளையாரும் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று மூஷிகாஸுரனுடன் கடும் போர் புரிந்தார். எந்த ஆயுதமும் அவனை அழிக்க முடியாததைக் கண்டு இறுதியில் தனது தந்தத்தை ஒடித்து அவன் மீது வீச அதுவே அவனைக் கொல்லும் ஆயுதமாயிற்று. உயிர் போகும் தருவாயில் அவ்வசுரன் வேண்டிக் கொண்டதை ஏற்று அவனுக்கு உயிர்கொடுத்து தமது வாகனமாக ஏற்றருளினார். ஒரு கையில் தந்தமும், பெருச்சாளியை வாகனமாக வைத்திருப்பதற்கும் இதுவே காரணமாகும்.

தம்மை வழிபடுவர்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பவர். இதன் பொருட்டே கொழுக்கட்டையை ஒரு கையில் வைத்திருக்கிறார். இதனையே ஆதி சங்கரர் 'முதாகராத்த மோதகம்' எனக் குறிப்பிடுகிறார். முதம் என்றால் மகிழ்ச்சி. முதாகர என்றால் மகிழ்ச்சியை உண்டுபண்ணுவர் என்று பொருள்.

நம்பியாண்டார் நம்பி என்பவர் சிறந்த சிவபக்த சீலர். பெரியபுராணத்தின் மூலநூலாகிய திருத்தொண்டர் திருஅந்தாதி எழுதியவர். இவர் சிறுவனாக இருந்த பொழுது இவர் தந்தை பூஜை செய்து வந்த திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரை ஒருநாள் இவர் பூஜை செய்ய வேண்டி வந்தது. அபிஷேகம் அலங்காரம் முடிந்து நிவேதனம் செய்யும் பொழுது, நம்பி அவர்கள், விநாயகரை உண்ணுமாறு வேண்டினார். சிலை வடிவில் விநாயகர் உண்ணாமலேயே இருந்தார். சிறுவன் கோபம் கொண்டு "ஓ. விநாயகப் பெருமானே ! இந்த நிவேதனத்தை உண்ணாவிட்டால், உன் மீதே என் தலையை முட்டிக் கொள்வேன்" என்று கூறி முட்டிக் கொள்ளத் துவங்கினார். அதற்கு மேல் நம்பிகளின் கஷ்டத்தைப் பொறுக்காத பிள்ளையார் சிலையிலிருந்தும் வெளிப்பட்டு நிவேதனத்தை உண்டு சிறுவனாகிய நம்பியாண்டார் நம்பிகளை மகிழ்ச்சியுறச் செய்ததோடு அவருக்கு சகல கல்வியறிவும் வழங்கியருளினார்.

Aarti tv

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!



OVER 500 Tamil Movies Available Instanly

25க்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்

Local Time Broadcast: Indian Time / UK Time / European Time

பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும் பார்வையிட வசதியானது.

சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.

Roku · Windows · App Store · Google play

Multi Room Viewing



எமது வாடிக்கையாளர்கள் தங்களது வீடுகளில் இருக்கும் அறைகளில் ஒரே நேரத்தில் பல அலைவரிசைகளை பார்வையிடுவதற்கான வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.

SPECIAL OFFER | 12 Months Subscription + Set Top Box | £99

24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% LEGAL

United Kingdom
0203 318 2004 / 0783 276 9522

Web
WWW.AARTITV.TV

15 Days Money Back GUARANTEE

ஆண் பெண் யானை வடிவங்களில் சிவ பார்வதி இருந்த போது தோன்றியவராதலால் இவரது முகம் யானை முகமாயிற்று. இது 'ஓம்' எனும் பிரணவ வடிவமாகும்.. இவர் தோன்றியருளிய நாள் ஆவணி மாத சுக்லபக்ஷ சதுர்த்தி திதியாகும். ஹஸ்த நக்ஷத்திரத்தில் சதுர்த்தி திதியில் பிறந்தவர். எனவே நான்கு என்ற எண் இவருக்கு விசேஷ மாகும். சதுர்த்தி பூஜை மிகச் சிறப்புடையது. தேய்பிறை சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தி எனப்படும். அதாவது இந்த நாளில் விநாயகரை விரதம் இருந்து பூஜித்தால் நமது சங்கடங்கள் அகலும் என்பது பொருள். நான்கின் இருமடங்காகிய எட்டு என்ற எண்ணிக்கையில் அஷ்ட திரவிய ஹோமம் இவருக்கு மிகவும் பிரியமானது. நான்கின் நான்கு மடங்காகிய பதினாறு என்ற எண்ணிக்கையில் ஷோடச கணபதியாக அருளுபவர். அறுபத்து நான்கு கலைகளையும் அருளுபவர். இவரது மூல மந்திரத்தை நான்கு லட்சம் முறை ஜபம் செய்வதை விரும்புபவர் என கணபதி சஹஸ்ரநாமத்தில் உள்ளது. "சதுர்லக்ஷ ஜப ப்ரீதாய நம:" என்பது அந்த நாமாவளியாகும். இது போன்று எண்ணிலடங்காப் பெருமைகளையும் மகிமைகளையும் கொண்ட ஸ்ரீ விநாயகப்பெருமான் லண்டன் மாநகர் வால்த்தம்ஸ்டோவ் பகுதியில் ஸ்ரீ கற்பக விநாயகராக எழுந்தருளி உள்ளார். இவரது திருக்கோயில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நாளது மங்களகரமான ஜய வருடம் ஆனி மாதம் 20ம் நாள் (04.07.2014) வெள்ளிக்கிழமையன்று வேத சிவாகம முறைப்படி நிகழவுள்ளதையும் அது சமயம் விழாமலர் வெளிவர இருப்பதையும் அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும், விழாமலர் சைவ உலகிற்கு பயனுள்ளதாக மலரவும் எல்லாம்வல்ல உமையொரு பாகனின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்,

மயிலாடுதுறை,
09.06.2014.

(A.V.சுவாமிநாத சிவாச்சாரியார்)

# திருக்கோவிலும் கும்பாபிஷேகமும்

"வேதாகம வித்யா பூஷணம்"
**சிவஸ்ரீ. வி. சோமசுந்தர குருக்கள்**
(சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மா)
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை, ஸ்ரீலங்கா.

சைவ சமய மக்கள் எங்கு குடியிருக்கிறார்களோ அங்கு ஒரு கோயில் இருக்கும். கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஔவை வாக்கிற்கேற்ப கோவில் இல்லாத ஊர் ஒன்றில் சைவ மக்கள் குடியேற நேர்ந்தால் அவ்விடத்தில் ஒரு சிறு கோயிலையாவது அமைப்பதே அவர்களின் முதற் கடமையாக உள்ளது. திருக்கோவில் இல்லாத ஊரை அடவி காட்டுக்குச் சமமாக அப்பர் சுவாமிகள் ஒப்பிடுகிறார். அடவி காடு எனின் அங்கு கொடிய மிருகங்களே வசிக்கும். எனவே எந்த ஊரில் கோவில் இல்லையோ அந்த ஊர் கொடிய மிருகங்கள் வசிக்கும் அடவி காடு ஆகும். அங்கு மனிதர்கள் இருக்க மாட்டார்கள். அப்படி மனிதர்கள் இருந்தாலும் மனிதப் பண்பு இருக்காது என்பதே அப்பர் சுவாமிகள் மறைமுகமாகக் கூறும் கருத்தாகும்.

எனவே சைவ சமய சமூகமானது மனிதப் பண்பின் உயர்ந்த சின்னமாகவும், சமூக ஒற்றுமையின் பிறப்பிடமாகவும், இறை பக்தியைச் செலுத்தும் அறநிலையமாகவும், திருவருள் பெறும் களஞ்சியமாகவும் கோவில்களை அமைக்கின்றனர். கோயில் எனின் கடவுள் உறையும் வீடு என்பதைவிட கடவுள் வழிபாட்டிற்காக மக்கள் கட்டும் வீடு என்பதே மிகப்பொருந்தும் ஏனெனில் கடவுள் எங்கும் இருப்பவர் அவரின் திருவருள் எங்கும் பரவியிருக்கிறது. முற்காலத்தில் முனிவர்கள் நாயன் மார்கள், அருளாளர்கள், ஆழ்வார்கள் போன்றவர்கள் இறைவனையும் இறைவன் திருவருளையும் நேரடியாகக் கண்டு அனுபவித்தார்கள். அவ்வாறான சக்தி எம்போன்ற சாதாரண மனிதர்களுக்குக் கிடையாது. எனவே அத்திருவருளை நாம் நேரடியாகப் பெறமுடியாது. ஆலய வழிபாட்டின் மூலமே பெறமுடியும். அது எவ்வாறு எனின் வானம் முழுவதும் வானொலி அலைகள் வந்து கொண்டு இருக்கின்றன. அவற்றை நாம் நேரடியாகக் கேட்கமுடியாது. அதற்காக விஷேட உபகரணங்கள் பொருத்தப்பட்ட வானொலி மூலமே கேட்கிறோம். அதே போன்று இறைவனின் பரந்து நிற்கும் திருவருளை அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் ஆலயங்களே சுரந்து தருகின்றன. இவ்வாறான அருட்சுரப்பை உண்டாக்கும் காரணிகளாக வேதமும் ஆகமமும் முன்நிற்கின்றன.

எனவே ஆலயமொன்று கட்டப்பட வேண்டுமெனின் நாம் நினைத்தது போல் அவ் ஆலயத்தை அமைத்து விட முடியாது. அவ் ஆலயத்தை உரியவாறு அமைக்க ஆகமங்கள் வழிவகுக்கின்றன. இவ்வாறாக ஆகமமுறையில் கட்டப்பட்ட ஆலயங்களில் தெய்வ அருள் மேலோங்கி வளர ஆகமவழிக் கிரியைகளும் வேத மந்திரங்களும் பிரதான இடம் பெறுகின்றன. இதனை திருமந்திரம் "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்று வேதத்தையும் ஆகமத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது. சூரியனுடைய ஒளியைக் கொண்டே சூரியனை நாம் காண்பது போல் இறைவனால் அருளப்பட்ட வேதாகம நூல்களைக் கொண்டே இறைவனை நாம் அடைய வேண்டும்.

இதனால் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள் பாலிக்கும் இடமாக விளங்கும் ஆலயத்தில் ஆகம முறைப்படி கிரியைகள் நடத்தப்பட வேண்டும். எங்கு ஆகம முறைப்படி கோயில் கட்டப்படுகிறதோ அங்கு செய்யப்படும் முதற் கிரியையே மகா கும்பாபிஷேகம் எனப்படும் பிரதிஷ்டையாகும். இவ்வகையில் புதிய ஆலயத்தைக் கட்டுவதற்கு முறைப்படி ஆரம்பிக்கும் கிரியை கர்ஷணம் என்று சொல்லப்படும். கர்ஷணம் என்றால் உழுதல் என்று பொருள்படும். அதாவது புதிதாக ஆலயம் கட்டப்படும் இடத்தை பண்படுத்தி தூயதாக்கிச் சமப்படுத்தி அவ்விடத்தில் ஆலயப் பிரமணத்திற்கு ஏற்ற வகையில் கட்டிடம் அமைத்தால், பின்பு அவ் ஆலயத்தில் வைக்க வேண்டிய திருவுருவக் கல்லைத் தெரிவு செய்து அக்கல்லில் திருவுருவம் செதுக்கல் போன்ற பல ஆரம்ப வேலைகள் கர்ஷணாதி என்ற சொல்லிற்குள் அடங்குகிறது.

SINCE 1964
PIONEERS IN CHETTINAD CUISINE WITH YEARS OF EXPERIENCE

ANJAPPAR™
Chettinad A/C Restaurant

OUT DOOR
catering available

*High Class Indian Veg & Non Veg Restaurant*

# LONDON- EAST HAM











**233-235 High Street North, East Ham, London, E6 1JG**

**0208 552 1155**



INDIA ◇ SINGAPORE ◇ MALAYSIA ◇ DUBAI ◇ ABUDHABI ◇ QATAR ◇ KUWAIT ◇ AUSTRALIA ◇ USA ◇ CANADA

பின்பு செதுக்கப்பட்ட அத்திருவுருவம் விம்பம் எனப்பெயர் பெறுகிறது. அவ்விம்பத்தைச் சிறந்ததோர் நாளில் ஆலயத்தில் வைத்துப் புனித நீராட்டுதலே கும்பாபிஷேகம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இவ் ஆலயக் கிரியைகளை வகுத்து கூறுமிடத்து முதலில் பெருமைக் படுத்திக் கூறப்படுவதே பிரதிஷ்டை ஆகும். ஒரு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்பே அங்கு உற்சவங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்ட ஆலயக் கிரியைகளை கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம். பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச் சித்தாந்தம் என ஒரு ஒழுங்கு முறையாக வகுக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். கர்ஷணாதிக் கிரியைகள் ஏற்கனவே சுருக்கமாகக் கூறப்படுட்டுள்ளன. உற்சவம் என்பது ஆலயங்களின் அருட்பொழிவு கிடைப்பதற்காகச் செய்யப்படும் பல்வேறு விழாக்களாகும் இதனைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு காணுதல்"

என்று விழாக்களின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வாறாக நடத்தப்படும் ஆலய வழிப்பாட்டிற்கு ராஜாங்க சூழ்நிலையிலோ அல்லது பௌதிக சூழ்நிலையாலோ கெடுதல் ஏற்பட்டால் அதனை நிவிர்த்தி செய்து மீண்டும் தெய்வ சாந்நியத்தை ஏற்படுத்துதல் பிராயச்சித்தம் எனப்படும்.

இவ்வாறான கிரியை மரபில் முதன்மை பெற்று விளங்கும் கும்பாபிஷேகம் பற்றிய சில குறிப்பு அவசியமானதாகும். பிரதிஷ்டை என்றால் சிறப்பாக நிற்றல் என்று பொருள்படும். "பிர" என்பது சிறப்பாக "திஷ்ட" என்றால் நிற்றல் எனப் பொருள் கொள்ளப்படும். எனவே இறைவனை சிறப்பாக நிறுத்தும் இடமே ஆலயம். அவனது திருவருளை சிறப்பாக வேண்டப்படும் முறையே பிரதிஷ்டையாகும் இக்கும்பாபிஷேகக் கிரியைகளில் பல்வேறு வகைப்பட்ட கிரியைகள் மந்திர பூர்வமாக ஆற்றப்படுகின்றன. எனினும் கும்பத்தில் நிரப்பப்பட்ட மந்திர நீரால் இறைவனது திருவுருவத்திற்குச் செய்யும் மங்கள ஸ்நானமே முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. இக்கிரியையானது இறைவனை அல்லது அவன் அருளை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒரு வழிப்படுத்தி நிலை நிற்கச் செய்யும் செயலைச் சுட்டிக் காட்டுகிறது. இயற்கையாகக் காணப்படும் ஆகாயம், வாயு, அக்னி, நீர், நிலம் என்னும் பொருள்களின் துணையோடும் சூரியன், சந்திரன் முதலானவர்களின் உதவியினோடும் யஜமானன் ஆகிய எமது ஆத்மா உயிர் வாழ்கிறது. எனவே ஆகாயம் முதல் ஆத்மா வரையான எட்டுப் பொருளையும் எமக்கு அளித்த அவ் இறைவனுக்கு எட்டுப் பொருட்களின் துணைக் கொண்டே தினமும் வழிபாட்டிற்குச் செய்யப்படும் முதற் கிரியையே கும்பாபிஷேகமாகும்.

ஆகாயத்தில் புலன் வழிக்குப் புலப்படாத இறைவன், சிறிது புலனுக்கு உட்படக்கூடிய வாயு வடிவிற்கு வரவழைக்கப்படுகின்றான். அவ்வாயுவடிவம் கட்புலனுக்கு தெரியாது. எனவே இதற்கு அடுத்த நிலையான கட்புலனுக்கு உட்படும் அக்னி வடிவில் அவன் பிரார்த்திக்கப்படுகின்றான், அக்னி வடிவில் வரவழைக்கப்படும் இறைவன் மிக நெருக்கத்தில் வந்தாலும் நாம் நெருங்க முடியாது எனவே இந்நிலையில் சற்று எளிமையாக எல்லோராலும் அடையக்கூடிய எல்லோர்க்கும் அவசியமான எல்லோரையும் வாழவைப்பதில் முக்கிய இடமும் பெறுவதான நீர் வடிவில் கும்பத்தில் இறைவன் வழிபாடு முதன்மைப் படுத்தப்படுகிறது. அபிஷேகம் செய்யப்படும் இந்நீரைப் பருகுவதிலும் இந்நீரைத் தமதுடலில் தெளித்துக் கொள்வதிலுமே சைவ மக்கள் முன்னிற்பதைக் காணலாம். இவ்வாறான நீர் நிலையில் இறை அருளை தொடர்ச்சியாக நிலை நிறுத்த முடியாதாகையால் இறை அருள் எம்மிடமிருந்து அசையாமல் இருப்பதற்கு நிலத்தின் சார்பாக கருதப்படும் கருங்கல் உருவத்திலும், செப்பு உலோகங்களிலும் இறைவனை நிலை நிறுத்தவே பிரதிஷ்டை என்ற தத்துவத்தைக் குறிக்கிறது.

இவ்வாறாக அருவ நிலையில் ஆகாயத்தில் விளங்கும் இறைவனை ஆன்மாக்களின் பொருட்டு படிப்படியாக உருவ நிலையை பெறும் ஒழுங்கு முறையை தைத்திரிய உபநிடதம் பின்வருமாறு கூறுகிறது.



Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Relegion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
ரிஷிமூலம்
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
Monday to Friday 6.00 PM
Monday to Friday 8.00 PM
Monday to Friday 6.30 PM
Latest Movies
Daily 2.00 PM
Sunday 11.00 AM
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV

"பிரஹ்மண: அகாசஸ் ஸம்பூத:
ஆகாசாத் வாயு: வாயாரக்னி:
அக்நேராபக: அத்ப்ய: பிருத்வீ"

இவ்வாறான ஒழுங்குமுறையை நாம் ஆகம கிரியை மரபிலும் காண்கிறோம். இவ் ஒழுங்கைக் குறித்துக்காட்ட மாணிக்கவாசகரும் தமது போற்றித் திருவகவலில்

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விரிந்தாய் போற்றி என வெளியாகிய

ஆகாயத்தில் முதலாம் இடமாக இருக்கும் இறைவன் படிப்படியாகத் தன் நிலை மாறி பாரில் (நிலத்தில்) ஐந்தாவது இடமாகப் போற்றப்படுகிறான். எனக் கூறப்படுகிறது.

கும்பாபிஷேக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளிக்குச் சமமானது. அங்கு அமைக்கப்படும் குண்டலத்தில் அக்னியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்ற (நெருப்பு எரிவதற்கு காற்று அவசியம்) யாகத்தின் நடுப்பொருளாகக் கும்பத்தில் இருப்பது நீர் இவ்வாறான பஞ்ச பூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிருதுவியோடு தொடர்புடைய திருவுருவத்தில் நிறைவேற்றப்படுகிறது. இதுவரை விம்பம் எனப் பெயர்பெற்ற அத்திருவுருவம் கும்பாபிஷேகம் நிகழப்பெற்றபின் சிறப்புத் திருநாமம் பெற்று தெய்வீகப் பொலிவுடன் வழிபாட்டிற்கும், உபசாரத்திற்கும் உரியவராகிறார்.

கும்பாபிஷேகம் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆகம விதிகளுக்கமைய புதியதோர் ஆலயமமைத்து பிரதிஷ்டை செய்தல் அநாவர்த்தகம் எனப்படும். வெகு காலத்திற்கு முன் கோயில் கட்டப்பட்டு பூஜை இல்லாமல் அழியவிட்டும், சீர்குலைந்தும் இருக்கும் ஆலயத்தை முன்பு போல் அங்கு பூஜை நடைபெறச் செய்யும் பிரதிஷ்டை ஆவர்த்தனம் எனப்படும். பூசை நடைபெறும் ஆலயத்தில் கர்பக்கிருஹம் பழுதடைதல், வருண வேலை செய்தல், விமானம் பழுதடைந்து இருத்தல், விக்கிரகாங்கம் சிதைவுபடல் போன்ற காரணத்திற்காக பாலஸ்தாபனம் செய்து செய்யப்படும் பிரதிஷ்டை புனராவர்த்தனம் பிரதிஷ்டை எனப்படும். இதுவே இன்றைய பல ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகமாகும்.

இது ஜீர்ணோத்தாரண புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எனச் சிறப்பிக்கப்படுகிறது.

ஜீர்ணம் எனின் பழுதடைந்த உத்தாரணம் - திருத்துதல், புன:- மறுபடியும் ஆவர்த்தனம் - கொண்டுவருதல் எனவே பழுதடைந்து இருக்கும் ஆலயப் பகுதிகளைத் திருத்தி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருதலே புனராவர்த்தனப் பிரதிஷ்டையாகும் அப்படிக் கொண்டு வருவதால் புதுப் பொலிவு காணப்படுகிறது. இப்படியான பிரதிஷ்டை நடைபெற்று பூஜைகள், விழாக்கள் நடைபெறும் காலத்தில் திருடர்களால் அல்லது வேறு காரணங்களால் பூசைகள் தடைப்பட்டால் உடனடியாகச் செய்வது அந்தரிதப் பிரதிஷ்டையாகும்.

இவ்வாறாக வகைப்படுத்தப்படும் ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் கிரியைகளில் வேத நெறியும் ஆகம நெறியும் கூறும் சமய மரபு கூடிக் கலக்கின்ற உயர் நிலையை நாம் காணலாம். இயற்கைச் சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம். அருச்சனை, தோத்திரம் போன்ற நிகழ்வுகளில் இவற்றின் சிறப்பை நாம் உணரலாம் எனவே பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிதிறக்கும் முதற்கிரியை கும்பாபிஷேகமேயாகும்.

"கிரியையென மருவுமவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் (சிவப்பிரகாசம்) ஆகம வழியில் அரும் கிரியை கண்டு ஆன்ம ஈடேற்றம் அனைவரும் பெறுக!

# இந்துசமய வழிபாட்டு முறைகள் – ஓர் அறிவியல் நோக்கு.

வித்யாபூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A.(Hons)

(கோப்பாய் சிவம்)

ஆதிகாலத்திலிருந்தே நமது முன்னோர்கள் இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாக மதித்துப் போற்றி வணங்கினர். உலகத்தில் கிடைத்துள்ள ஆதி இலக்கியங்களிலேயே மிகப் பழைமையானதாகக கருதப்படும் இருக்கு வேதத்தில் இயற்கைச் சக்திகளைப் பலவிதமாக வர்ணித்துப் போற்றிப் பாடுகின்ற அழகிய பாடல்கள் பல காணப்படுகின்றன.

நிலம் (பூமி) நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் ஏனைய இயற்கைச் சக்திகள் யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவதால் பஞ்சபூதங்கள் என இவற்றை அழைத்தனர். இந்த ஐந்து மூலப்பொருட்களால் உருவானதே பிரபஞ்சம் எனப்படும்.

மனிதனால் ஆக்கி அழிக்க முடியாமலிருக்கும் இவற்றை ஓர் ஒழுங்குமுறையில் நிர்வகிக்கும் ஒருவன் இருப்பதை இதனால் உணர்ந்து அவரே நமது தலைவன் என்று வணங்கினர். அவரே நமது கடவுள் ஆவார்.

சூரியன் என்ற மிகப் பெரிய அக்கினிக் கோளமே இந்தப் பெரிய பிரபஞ்சத்தின் மத்திய சக்தி என இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர். சூரியன் எந்த நேரமும் பேரொளியையும், பெரு வெப்பத்தையும் வீசியபடி சுழன்று கொண்டே இருக்கிறது. சூரியனைச் சுற்றிப் பல நட்சத்திரங்களும், கோள்களும் வலம்வருவதுடன் தம்மைத் தாமேயும் சுற்றுகின்றன.

நாம் வாழும் பூமியும் இவ்வாறுதான் சூரியனை வலம்வருகிறது. நமது பூமியைச் சந்திரன் வலம் வருகிறது. பூமி கோளவடிவாக இருப்பினும் அதிலுள்ள பொருட்கள் விழாமல் இருப்பதற்கு அதன் மத்தியிலுள்ள ஈர்ப்புச் சக்தியே காரணமாக உள்ளது. அதேபோல இரவு - பகல், வெப்பம் - குளிர், மழை - வெயில் முதலிய மாற்றங்கள் ஏற்படுவதற்குப் பிரபஞ்சத்தின் சுழற்சி இயக்கமே காரணமாக உள்ளது.

இயங்கும் பொருட்கள் எப்போதும் சக்தியுடையவை ஆகின்றன. இயக்கம் இல்லாவிட்டால் சக்தி இல்லை. அதனால் இறைவன் என்றும் இயங்கிக்கொண்டிருக்கிறார் என்று நமது முன்னோர் கருதினர். அதனால் அவரை நடராஜ வடிவத்தில் கண்டு மகிழ்ந்தனர்.

ஆனந்த நடனம் என்னும் அவரது நடனமே இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. இயங்கும்போது சக்தி உண்டாகிறது. சக்தி என்பதை ஒரு பெண்ணாக உருவகித்தனர். அந்தச் சக்தியே நடராஜரின் அருகில் சிவகாமி என்ற பெயரில் காணப்படுகிறாள்.

இறைவன் எல்லாப் பொருட்களினுள்ளும் மறைந்திருக்கிறார். எல்லாச் சக்திகளாகவும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அதனால், அவர் உருவமற்றவராகக் கருதப்பட்டாலும் அவரை நினைத்து வழிபட ஓர் அடையாளச் சின்னம் தேவை என நம் முன்னோர்கள் கருதினர். அதனால் சிவலிங்க வடிவம் உணரப்பட்டது.

அக்கினிச் சுடராக, நெருப்புக் கோளமாக, பேரொளி வடிவமாக இறைவனைக் கண்டு வழிபடும் மரபு இந்துக்களாகிய நமது முன்னோர்களிடம் மட்டுமல்லாமல் வேறு பல மக்களிடமும் நீண்ட காலம் காணப்பட்டது. அத்தகைய பேரொளி பொருந்திய அக்கினிச்சுடரின் இறுகிய வடிவமே சிவலிங்க வடிவமாகிறது. அது ஒரு கோள வடிவமாகக் காணப்படுவதால் தொடக்கம் முடிவு எதுவும் இல்லாதது.

இந்தச் சிவலிங்க வடிவத்தில் மேற்பகுதியாகிய லிங்கம் சிவன் என்று ஆண் தெய்வமாகவும், கீழ்ப் பகுதியாகிய பீடம் (ஆவுடையார்) சக்தி வடிவாகிய பெண் தெய்வம் என்றும் உருவகம் செய்வர்.

அன்னையும், தந்தையும் இணைந்து செயற்படும்போதுதான் நமது குடும்பம் என்ற இல்லற வாழ்க்கை இனிமையாக நகருகிறது. இந்தத் தத்துவமே சிவலிங்க வடிவம், நடராஜர் - சிவகாமி வடிவங்களில் புலப்படுத்தப்படுகின்றது. இன்னொரு வடிவத்தையும் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர். அர்த்த நாரீஸ்வரர் அல்லது மாதொரு பாகர் என அழைக்கப்படும் இவ்வடிவம் பாதி ஆணும் பாதி பெண்ணும் சேர்ந்த வடிவமாகும்.

விஞ்ஞான அடிப்படையிலும், நேர்முனைவும் (,) எதிர் முனைவும் (-) சேரும்போதுதான் சக்தி பிறக்கிறது. காந்தி சக்தியானது வடமுனைவையும், தென் முனைவையும் கொண்டுள்ளது. மூலப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படை மூலப்பொருளாக இன்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள அணுக்களும் நேர் முனைவாகிய புரோத்தன்களையும் எதிர் முனைவாகிய இலத்திரன்களையும் கொண்டவை அல்லவா?

நமது பரம்பொருள் அங்கிங்கெனாதபடி இப் பிரபஞ்சம் எங்கணும் பரந்து நிறைந்து கரந்திருப்பினும் அவனோடு நாம் கலந்துறவாடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்களை அமைக்கின்றோம்.

இவ்வாறு அமைக்கும் ஆலயக் கட்டடங்களும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் ஷஇறைவன் நூல்' ஆகிய ஆகமங்கள் என்னும் மிகப்பழைய நூலில் சொல்லியிருக்கும் முறைகளில் கட்டப்பட்டிருப்பினும் இன்றைய நவீன அறிவியல் நோக்கிலே பார்க்கும்போதும் அவை இப்பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் சக்தியைத் தேக்கி எமக்கு வழங்கும் முறையிலே அமைந்திருக்கின்றன என்பதைச் சிறிது ஆராயின் அறியலாம்.

அவ்வாறு அமைப்புமுறைகளை ஆராய்வது ஒருபுறமிருக்க, அங்கு இறையருட்சக்தியை ஏற்படுத்துமுகமாக நிகழ்த்தப்பெறும் கிரியைகள் யாவும் தத்துவ உட்பொருள் வாய்ந்தவையாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் பிரபஞ்ச சக்தியைத் தேக்கித் தரும் செயல்முறைகளாக இருக்கின்றன என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

மின்சார சக்தியை நாம் மின்கலங்களில் சேமிப்பதுபோல இறைசக்தியைப் பிரபஞ்ச சக்தியாக கருவறையிலுள்ள விக்கிரகத்தில் சேமிக்கின்றோம். மின்கலத்தில் சேமிப்பதற்கு வேண்டிய மின்சாரத்தை உண்டாக்குவதற்குச் சில செயற்பாடுகளைச் செய்யவேண்டி இருப்பதைப்போல இறைசக்திச் சேமிப்பிற்குச் சிவாகமக் கிரியைகள் தேவைப்படுகின்றன.

பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் சக்தியை ஒருங்கு குவிப்பதற்கு ஐம்பூதங்களினூடான படிமுறைக் கிரியைகள் உதவுகின்றன. சூரிய சக்தியைப் பூதக் கண்ணாடியூடாகக் குவித்து அதன்சக்தியை ஒருங்கு சேர்ப்பதன்மூலம் பஞ்சினை எரிப்பது போன்றதே இது என விளங்கிக்கொள்ளலாம்.

ஷஷபிரம்மண ஆகாசாத் சம்பூதஹ

ஆகாசாத் வாயுஹு"

வாயோர் அக்னிஹி

அக்னேர் ஆபஹ

அத்ப்யஹ் ப்ருதுவீ'' என்பது உபநிடத வாக்கியம்.

ஷஷபிரம்மமானது ஆகாயத்திலிருந்து தோன்றி, வாயுவுக்கும் வாயுவிலிருந்து அக்னிக்கும், அக்னியிலிருந்து தண்ணீருக்கும், தண்ணீரிலிருந்து நிலத்திற்கும் படிப்படியாக இறங்கி வருகிறது'' என்பதே இதன் விளக்கமாகும்.

சிவபிரானது நெற்றிக்கண்ணில் தோன்றிய அக்கினிச் சுடராகிய முருகப்பெருமான் ஆகாயமார்க்கமாக வாயுபகவானிடமும் பின்னர் அக்னி பகவானிடமும் அதன்பின் கங்கையாகிய தண்ணீரிடமும் சென்று இறுதியில் பிருதுவி என்னும் நிலத்தின் அம்சமாகிய தாமரைப் பூவில் தங்கிக் குழந்தை வடிவம் பெறுகிறார் என முருகப்பெருமான் திருவவதாரம் கூறுவது இந்தத் தத்துவத்தைத்தான்.

இங்கு ஆகாயம், வாயு, அக்னி, தண்ணீர், நிலம் எனக்கூறப்பட்ட ஐந்தும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களாகும். பூதம் என்றால் உண்டாக்குவது எனப் பொருள். (பூ - பவ் - உண்டாகுதல் - என்பது வினையடி ஆகும்) இப்பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டதனால் பிரபஞ்சம் எனப் பெயர் ஏற்பட்டது.

ஆகாயம் என்பது காட்சிக்கும் தொடுகைக்கும் அப்பாற்பட்ட பரவெளி மட்டுமே. அதன் அடுத்த நிலையாகிய காற்று தொடுகைக்கு உட்படுமெனினும் கட்சிக்கு அடங்காதது. அடுத்த நிலையாகிய தீ தொடுகைக்கும் காட்சிக்கும் உட்பட்டதே எனினும் தொட்டுணர்வதற்கு அப்பாற்பட்ட சக்தியை உடையது. நான்காம் நிலையிலுள்ள நீர் தொடுகைக்கும் காட்சிக்கும் உடன்படுவதாகவும் நமது இலகுவான பயன்பாட்டுக்குரியதாகவும் இருப்பினும் நிலையான வடிவத்தை அது பெறுவதில்லை. இறுதிநிலையா-

கிய பூமி (நிலம் என்னும் தரையில் பெறப்படும் மண், கல், உலோகம் என்பன) எல்லா வகையிலும் எமக்கு உகந்ததாக, வேண்டிய உருவைப் பெறவல்லதாக உள்ளது.

ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது. (மான என்பது அளவு. வி என்பது சிறப்பான. குறித்த பிரமாணத்தில் சிறப்பாக அளந்து உருவாக்கப்பட்டதே விமானம்.)

இதேபோல மந்திரங்களின் அதிர்வுகள் பிரபஞ்ச சக்தியை ஈர்க்கும் தன்மையுடைய ஒத்த அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன. அவை கதிர்வீச்சுப்போல பேரருட்சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் விக்கிரகத்திலும் கொண்டுவந்து சேர்க்கத்தக்கன.

மஹோற்சவத்திலே தம்பம், கும்பம், விம்பம் என்னும் மூன்று இடங்களில் திருவருட்சக்தி விளங்குவதாகக் கூறுவர். அதேபோல பிரதி'டையில் அக்கினி, கும்பம், விக்கிரகம் ஆகிய மூன்று இடங்களிலும் திருவருட்சக்தி பொலிவுற்று விளங்குகிறது. இறுதியில் அக்கினியிலுள்ள சக்தி கும்ப நீரில் சேர்க்கப்பட்டு அது அபி'கேத்தின்மூலம் விக்கிரகத்திலே சேர்க்கப்படுகிறது.

அக்கினி அளவற்ற சக்தி வாய்ந்தது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது அது. நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உருவாக்கித் தருவதும் அது. நம்மையே அழித்துவிடுவதும் அக்கினியே. எந்த அசுத்தத்தையும் தூய்மைசெய்யும் சக்தியும் அதற்குண்டு. பிரபஞ்சத்தையே இயங்கச்செய்யும் மூலப்பொருளாக நடுவில் நின்று சுழன்றுகொண்டிருக்கும் சூரியன் ஓர் அக்கினிக் கோளமன்றோ? அதனால்தான் ஆதியிலிருந்து இன்றளவும் அக்கினி ஓர் தெய்வ சக்தியாக யாவராலும் வணங்கப்படுகிறது. அத்தகைய அக்கினி மூலமாகவே நாம் அருட்சக்தியைச் சேகரிக்க முற்படுவது பொருத்தமானதல்லவா?

ஆகம அடிப்படையிலமைந்த ஆலய அமைப்பும், அங்கு நடைபெறும் திருவுருவ வழிபாடும் கணித விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், மனோதத்துவ விஞ்ஞானம் ஆகியவற்றின் இணைப்பையும் தனக்குள் கொண்டிருப்பது வியப்புக்குரிய ஒனறு.

ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான அளவுப் பிரமாணங்களில் ஆலயம் கட்டப்படுகின்றது. அதன் பாகங்கள் ஒவ்வொன்றும் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள திசைகள், கோணங்கள், ஸ்தானங்கள் என்பன சரியாக அமையும்படி அமைக்கப்பட்டிருக்கும். சிவாகமங்களின் வழிநூல்களாகிய சிற்ப சாஸ்திரங்கள் ஆலயங்களை அமைக்கும் முறைகளை எடுத்துக் கூறுகின்றன.

வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களை அவை கொண்டிருக்கும். கருவறை அல்லது மூலஸ்தானம் எனப்படும் முக்கிய பகுதி சற்சதுரமாக மூன்று பக்கங்கள் முழுமையாக மூடப்பெற்று முன்புறம் மட்டும் திறக்கப்பட்டிக்கும். அதுவும் திரைச்சீலை ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கும். வழிபாட்டின்போது மட்டும் திறக்கப்படும். அவ்வேளையில் அங்கு தீபம் ஏற்றிக் காட்டப்படும்.

இவ்வமைப்பு முறை, செயற்பாடு ஆகியவற்றில் சைவசித்தாந்த தத்துவக் கருத்து உள்ளடங்கி இருக்கும் அதேநேரத்தில் அறிவியல் விளக்கமும் இருக்கிறது.

மேல்நோக்கிக் குவிந்து உயர்ந்திருக்கும் கலசத்தினூடாகப் பிரபஞ்ச சக்தி உள்ளீர்க்கப்பட்டுப் படிப்படியாகப் பரந்து கீழிறங்கி மறுபடி கருவறையின் மையத்தில் அதற்கென விதிக்கப்பட்ட இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருவுருவத்தில் சேகரிக்கப்படும். வழிபாட்டு வேளையில் இறைவனின் திரு-வருட் சக்தியாகிய பிரபஞ்ச சக்தியின் கதிர்வீச்சு அங்கிருந்து நம்மிடம் வருகிறது.

ஆலயத்தின் அமைப்பு மனித உடலை ஒத்திருப்பதாக அறிஞர்கள் விளக்குகின்றனர். நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் ஒரு மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள்.

சிரசு எனப்படும் தலைதான் கருவறை. சக்தியை உள்ளீர்த்து உயிர்ச் சுவாசத்தை நடத்தும் மூக்குத்தான் ஸ்தூபி. மூளையின் இடத்தில்தான் திருவுருவம் இருக்கிறது. கழுத்தைக் குறிப்பது அர்த்த மண்டபம்.

மார்பைக் குறிப்பது மஹாமண்டபம். மார்பின் இடதுபுறத்தில் இதயம் உண்டு. அதேபோல மஹாமண்டபத்தின் இடப்புறத்தில் சக்திக்குரிய சந்நிதானம் அமைகிறது.

இதயம், கழுத்து ஆகிய பகுதிகள்தான் நினைவு, செயற்பாடு, ஓசை என்பவற்றுக்கு ஆதாரமாகின்றன. மஹாமண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றில்தான் கிரியைகள், மந்திரம் ஓதல் முதலியன நடைபெறுகின்றன.

வயிற்றைக் குறிப்பது ஸ்நபனமண்டபம். வயிற்றிலுள்ள ஜடராக்கினியைக் குறிக்க ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கப்படுகிறது. ஜடராக்கினி என்பது வயிற்றினுள் மறைந்திருக்கும் வெப்ப சக்தி. இதுவே உணவைச் சீரணிக்கச்செய்து சக்தியை உடல் எங்கும் பரப்புகிறது.

கால்கள் ஏனைய மண்டபங்களையும், கைகள் உள்வீதியையும், பாதங்கள் ராஜகோபுரத்தையும் குறிக்கின்றன.

"அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பர். அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது நமது உடல். பிரபஞ்ச வடிவிலேயே நமதுடல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுடல் வடிவிலே கோவில் உருவாகியுள்ளது. இது அற்புதமான ஒரு தொடர்பாகும்.

கருங்கல்லினால் அமைக்கப்பட்ட விக்கிரகம் கருவறையின் உள்ளே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். கருங்கல் அதிர்வுகளை உள்ளீர்த்து அதனைப் படிப்படியாக வெளிவிடும் தன்மை வாய்ந்தது. அங்கு வைக்கப்படும் திருவுருவங்கள் ஆகமங்களில் சொல்லப்பட்ட விதிமுறைப்படி அமைக்கப்பட்டிருக்கும்.

நடேசர், சண்முகர் மற்றும் தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் ஸ்நபன மண்டபத்தில் 'சபை' என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும்.

இவை விழாக்களின்போது வீதி உலாவுக்கு எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஸ்தம்ப மண்டபமும் வீதியும் சேர்ந்து பிரதான பகுதி மிகவும் பெரிதாக அகன்று, அடியார்கள் பலர் ஒன்றுசேர்ந்து வழிபாடு செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்.

கிராம மக்கள் யாவரும் விழாக் காலங்களில் ஆலயத்திலே ஒன்றுகூடி ஒற்றுமையாக வழிபாடுகளில் ஈடுபட்டு மனச்சாந்தி பேணுவதுடன் சுவாமியை வீதிஉலா எடுத்து வருதல். தேர் இழுத்தல் போன்றவற்றில் ஒன்றுசேர்ந்து ஈடுபட்டு உற்சாகமும், எழுச்சியும் அடைவர். சமூக ஒற்றுமையும், மகிழ்ச்சியும், எழுச்சியும் ஆலயம் சார்ந்து உருவாகுதல் குறிப்பிடத்தக்கது.

ஆலயம் சென்று வழிபடுதல் என்பது இந்துக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. தினமும் ஆலயம் செல்வது சாலச்சிறந்தது. இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி மற்றும் விசே' விரத, விழாக்காலங்களில் சென்று வழிபடுவது அவசியம்.

ஆலயம் செல்லும்போது ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து விபூதி தரித்துக் கொண்டு செல்ல வேண்டும். இன்னொரு சிவசின்னமாகிய உருத்திராக்கம் அணிதலும் நன்று.

பசுவின் சாணத்தைக் காயவைத்து விராட்டியாக்கியபின் நல்ல நெருப்பிலே அவற்றைச் சுட்டு வெண்ணிறச் சாம்பலாக வரும்போது அதனை எடுத்து அரித்து வாசனைப் பூக்கள் சேர்த்து விபூதி (திருநீறு) தயாரிக்கப்படுகிறது. பட்டுப்பையில் அல்லது தேங்காய்ச் சிரட்டையிலே உருவாக்கப்பட்ட குடுவையில் அல்லது விபூதி மடலில் திருநீற்றினைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும்.

இந்த விபூதியை நாம் பூசுகின்ற வேளையெல்லாம் இறைவனை நினைத்துக்கொள்கிறோம். நாம் சைவர்கள் என்பதை எப்போதும் நமது நினைவில் கொள்வதோடு மற்றவர்களுக்கு முன் நம்மை இனங்காட்டும் ஓர் அடையாளச் சின்னமாகவும் விபூதி அமைகின்றது.

திருநீறு நமது உடலில் பூசப்படும்போது உடலிலுள்ள தீய நீர்த்தன்மைகள் உறிஞ்சப்பட்டு உடல் இறுக்கமான கட்டமைப்பைப் பெறுகின்றது.

ஆலயம் செல்லும்போது அதற்கே உரிய வகையில் நமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கேற்ற வகையில் நம்மைத் தயார்ப்படுத்துதல் அவசியம்.




மூன்று தேர்கள் பவனியில் - 2008

நிழலாடும் நினைவுகள்



ஓங்கார கணபதி அலங்காரம் 2008" மஹோற்சவம்



தேர்த்திருவிழா பிரார்த்தனை 2012



பாலஸ்தாபன அபிஷேகம்

சாத்வீகமான உணர்வுகளையும் தூய்மையான மன எண்ணங்களையும் ஏற்படுத்தக்கூடிய தோற்றம் மிகவும் அவசியம். "ஆள் பாதி ஆடை பாதி" என்பார்கள். அதற்கிணங்க, நம்மைப் பார்க்கும்போதே பிறர் மனத்தில் ஒரு மரியாதையுணர்வை உருவாக்கக் கூடியதாக நமது ஆடை அலங்காரங்கள் இருக்க வேண்டும்.

வெண்மை நிறமான வேட்டி சால்வையே ஆண்களுக்கு உகந்தது. குளிர் தேசங்களில் வாழ்வோர் மேலங்கி அணிய வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் வெண்மையான ஷேட்' உகந்தது.

பெண்கள் உடலை முழுமையாக மூடியிருக்கும் கீழைத்தேயப் பண்பாட்டுணர்வுக்குகந்த ஆடைகளை அணிய வேண்டும். முக்கியமாகப் பிறர் மனத்தில் விகாரமான சிந்தனை தூண்டப்படாத வண்ணம் சேலை, அல்லது அரைத்தாவணி போன்றவை விரும்பத்தக்கது. இளவர்ணங்கள் கொண்டவையாகவும், எளிமையானவையாகவும் இருத்தல் நன்று.

இளம் நிறங்களும், எளிமையும் எப்போதும் சாத்வீக உணர்வைத் தூண்டி மன அமைதி தரக்கூடியவை. சாந்தியையும், அருளையும் நாடி ஆலயம் செல்லும்போது நமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் ஆடை-கள் அவையே ஆகும்.

பெண்கள் அவசியம் திலகம் எனப்படும் பொட்டு அணிதல் வேண்டும். கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் கறுப்பு நிறமான பொட்டு அணிவர். கல்யாணமான சுமங்கலிப் பெண்கள் சிவப்புநிறக் குங்குமப் பொட்டு அணிவர். சுமங்கலிகள் நெற்றியில் மட்டுமல்லாமல் உச்சி வகிட்டின் ஆரம்பத்திலும் திலகம் அணிய வேண்டும். அங்கு இலக்குமி வாசம் செய்கிறாள்.

ஆண்கள் சந்தனப்பொட்டு அணிதல் வரவேற்கத்தக்கது. மஞ்சள் நிறச் சந்தனம் சிவனையும், சிவப்புநிறக் குங்குமம் சக்தியையும் குறிப்பவை. சக்தி உபாசகர்களாகிய ஆண்களும் குங்குமம் விரும்பி அணிவதுண்டு.


ஜைகளை நடத்துகின்ற சிவாசாரியார்கள் சிவ - சக்தி ஐக்கியத்தை உணர்த்தும் வகையில் சந்தனம், குங்குமம் இரண்டையும் அணிவதுண்டு.

பொதுவாக நெற்றிப்பொட்டு என்ற இடம் மூன்றாவது கண் ஆகிய அறிவுக் கண்ணுக்குரிய இடமாகும். அந்த இடத்தில் பல நரம்புகள் சந்திக்கின்றன. அந்த இடத்தைக் குளிர்மையாக வைத்திருப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் பேணப்படுகிறது. மேலும், ஹிப்நொட்டிசம் என்னும் வசியக்கலை மூலம் நம்மைப் பிறர் வசப்படுத்த முனையும்போது நெற்றியில் புருவ மத்தியே பயன்பாட்டுக்குரிய இடமாக-றது. அதனைத் தடுக்கும் காவலாகவும் திலகம் அமைகிறது. கைவளைகளும், கழுத்து, காது, மூக்கு முதலிய அங்கங்களில் தங்க நகைகளும் அணிவது பெண்களுக்கு அவசியமானதே. அது லட்மிகரமாக அமைகிறது. ஆடம்பரமில்லாமல், பிறர் பார்த்து ஏங்கும் வகையிலில்லாமல் இவற்றை அணிவது நன்று.

கிரியைகள், சிறப்புறுவதும் பயனளிப்பதும் நான்கு முக்கிய அம்சங்களில் தங்கியிருக்கின்றன. சரியான மந்திரங்களைச் சரியான உச்சரிப்புடன், பயன்படுத்துவது முதலாவது அம்சம். இரண்டாவது அம்சம் மனோசக்தி. செய்யப்படும் எந்தக் காரியமும் வெற்றியடைவதும், தோல்வியடைவதும் செய்பவர்களின் மனோபலத்தைப் பொறுத்ததே. கிரியைகளைச் செய்பவரும் செய்விப்பவரும் சலனமில்லாத நம்பிக்கையும் பரிபூரணமான இறைபக்தியும் உடையவர்களாகச் சிரத்தையுடனும், லயிப்புடனும் அவற்றில் ஈடுபடவேண்டும். கயிற்றின் மேல் நடப்பவன் தன் கவனத்தை வேறெங்கும் சிதறவிடாமல் கயிற்றிலேயே தனது மனத்தை ஒருமுகப்படுத்தி வெற்றி பெறுகிறான். சங்கீத சாதகன் பாடிக்கொண்டிருக்கும்போது தனது கவனத்தை வேறிடத்தில் செல்லவிட்டால் லயம் தப்பி விடுகிறது. லயிப்பு இல்லாவிட்டால் லயம் தப்பி விடும்.

இதேபோல, கிரியைகளில் ஈடுபடும்போது ஆத்மார்த்தமான ஈடுபாடும், தன்னம்பிக்கையும், இறைநம்பிக்கையும் மன ஒருமைப்பாடும் இருந்தால்தான் பூரண பலனைக் காணமுடியும்.

மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்படுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத்



Asian, Oriental & Afro-Caribbean food speciality
Veena's
Cash & Carry
CASH & CARRY
LENTILS & SPICES
FRUITS & VEG
FRESH FRUIT & VEGETABLES
All Your Favourites
Under One Roof
Asian beauty, cosmetics & hair care products
Asian fruits & vegetables
Frozen fish & sea food
Afro-caribbean food items
Oriental food & spices
Ready to eat, snacks and pickles
Frozen food, processed food
Pooja items
House hold goods, Kitchenware
Halal Meat
International Money transfer - BFC
Audio/Video CD, DVD
Veena's
Branded Products
77-79 High Street, Barkingside, IG6 2AF
020 8550 2700, www.veenas.com





ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தால் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகத்தில் 100க்கும் மேற்பட்ட பிள்ளைகள் பராமரிப்படுகிறது















# ஸ்ரீ கற்பக விநாயகர் அருள் ஒளியில் அனாதை சிறுவர் பராமரிப்பு




செஞ்சோலை அன்புச்சிறுவர் இல்லம் ஒட்டுசுட்டான் – முல்லைத்தீவு
இங்கு 42 பிள்ளைகள் கடந்த இரண்டு வருடங்களாக பாராமரிக்கப்பட்டு வருகிறார்கள்



தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும்.

கிரியைகளில் வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது அம்சம் தலச்சிறப்பு. கிரியை நிகழும் ஸ்தானம், அதன் சூழல் என்பன கிரியைகள் நிகழ்வதற்குகந்த முறையில் சாஸ்திர விதிப்படி அமைந்திருப்பது அவசியம். வீட்டிலே நிகழும் கிரியைகளுக்காக அதற்கேற்ற வகையில் இடத்தை ஒழுங்கு செய்வதைக் காண்கின்றோம். ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

நான்காவது அம்சம் நமது சைவசமயிகளுக்கும், தமிழருக்கும் மிகச் சிறப்பாகக் கருதப்படும் சதாசாரமும், தூய்மையுமாகும். ஆசாரம் என்றால் ஒழுக்கம். ஒழுக்கம் என்பது வாழ்க்கையை முறைப்படி நடத்த வேண்டிய நல்வழி.

கிரியைகளை நடத்தும் சிவாச்சாரியர்கள் எப்படி இருக்க வேண்டும், அவர்கள் எப்படி ஒழுகவேண்டும், அவர்கள் எத்தகைய அநுட்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று சிவாகமங்களில் ஆசார்ய லட்சணம் என்ற பகுதியில் விதந்துரைக்கப்பட்டிக்கின்றன. அவற்றை அநுசரிக்க வேண்டிய கடமை சிவாச்சாரியார்களுக்குண்டு. அதேபோல் அவர்களைக் கொண்டு கிரியைகளைச் செய்விக்கும் எஜமானர்களும் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஆசார ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாவார்.

ஒழுக்கம் மட்டுமின்றித் தூய்மை என்னும் சுத்தமும் கிரியைகளுக்கு மிக முக்கியமான அடிப்படையாகும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் (நினைவு, சொல், செயல்) இந்தத் தூய்மை பேணப்பட வேண்டும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வுகூடங்களில் நடத்தும்போது குறித்த விதிமுறைகளில் சிறு தவறு நேரிடினும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகள் ஏற்படுவதை மாணவர்கள் அவதானித்திருப்பர். நமது சைவக்கிரியைகளிலும் இந்த நான்கு அம்சங்களும் சீரான முறையில் அநுசரிக்கப்படும்போது மாத்திரமே அபரிதமான அருட்சக்தி பிரவகித்து ஆனந்த வாழ்வை அளிக்கும். இவற்றில் ஏற்படும் தவறுகள், குறைபாடுகள் நாம் எதிர்பார்த்த அளவு பலனைக் கொடுக்காது என்பதுடன் சில எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

வேத மந்திரங்கள் மிகுந்த அர்த்த புஷ்டியுடையவை. அவை வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழியிலிருப்பதால் நம்மில் பலர் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதில்லை.

அவற்றின் உச்சரிப்புக்கள், சப்தங்களினால் ஆற்படும் அதிர்வுகள் சூழலிலும், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலும் சில நல்லதிர்வுகளை ஏற்படுத்தவல்லன.

அதுமட்டுமல்லாமல், அந்த மந்திரங்கள் அக்கிரியைகளில் ஈடுபடும் தனிமனிதனுக்குரியதாக இல்லாமல், பரந்துபட்ட உலக நன்மைகளுக்குரிய வேண்டுதலாவும்கூட அமைந்திருப்பது வியப்புக்குரியது.

மிகப் பழைய காலத்திலிருந்தே இந்துக்கள் பரந்த மனப்பாண்மையுடனும் விரிந்து பரந்த உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுடன் ஒன்றுசேர்த்துப் பார்க்கின்ற உளப்பாங்குடனும் இருந்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து நாம் பெருமைப்படலாம்.

## Abisekam Rituals in Temples: the Science behind It

By Dr C P Thiagarajah-Secretary Katpaka Vinayagar Temple Trust

One of the main rituals performed on the deities in Hindu temples is abisekam or pouring water, milk and other liquids and scents. This is a form of hydration. This looks superstitious on first look for many who does not know the science behind many such practices. The truth and the reasons for hydration of idols of deities made out of metals or metal alloys, wood or stones will be revealed if one delve deep into Hinduism.

Hinduism has been called the "oldest religion" in the world, and many Hindu orthodox treaties refer to Hinduism, Sanatana Dharma "the eternal law" or the "eternal way" beyond



human origins. It prescribes the "eternal" duties all Hindus have to follow, regardless of class, caste, or sect, such as, Ahimsa, honesty, purity, and self-restraint. Its origin had been traced to the days of Mohandejaro-Harappa civilisation about 6000 BC. It is also called the Indus Valley Civilization (2,600-1,900 BCE). A traders seal found in archaeological excavation in Harappa is an indication of Shiva worship who is the main deity in Hinduism..

### Shiva Pasupathi seal used by Indus Valley Merchants

It is not a parochial religion similar to that existed in the West long ago. Hindu principle are universal in character. Hinduism, with about one billion followers is the world's third largest religion, after Christianity and Islam.

Hindus can engage in puja (worship or veneration), either at home or at a temple. At

home, Hindus often create a shrine with icons dedicated to their chosen form(s) of God. There are two main divisions in Hinduism as practiced in the Indian subcontinent. One is Saivaism and its primary god is Shiva. The other is Vaishnavism, the head of this sect is Lord Vishnu. Temples are usually dedicated to a primary deity along with associated subordinate deities though some commemorate multiple deities. The icon/idol serves as a tangible link between the worshiper and God. The image is often considered a manifestation of God, since God is immanent.

Cosmologist, and physicists had shown that meditating in a pyramid will aid one to receive more cosmic energy than meditating in an ordinary room. In fact it gives 3 times more cosmic energy to the meditator. The angle of the apex of the pyramid should be 52 degrees and 51 minutes and the building should be cardinally positioned.

The ancient temples in South India were constructed in such a way that the cosmic energy from space could reach the devotees who goes to worship at the temple. Notably, the five Temples built by our Hindu ancestors to do "bootha Suddhi" to the five live forces that were involved in life creation, Earth, Space, Water, Fire and Air (Atmosphere) complied with this holistic principle. These temples are energy centres. It's like a public charging place. These temple had stood the test of time for giving the community health and happiness. If you want to do sadhana for the element of water, you go to Thiruvanaikava. For space worship, you go to Chidambaram. For worshipping and meditating for elements of Wind-Kalahasti, Fire-Tiruvannamalai, Earth-Kanchipuram.

A Temple bell is another scientific phenomena; it is not just your ordinary metal. It is made of various metals including cadmium, lead, copper, zinc, nickel, chromium and. manganese. The proportion at which each one of them mixed is real science behind a bell. Each of these bells is made to produce such a distinct sound that it can create unity of your left and right brain. The moment you ring that bell, bell produces sharp but lasting sound which lasts for minimum of seven seconds in echo mode good enough to touch your seven healing centers or chakras in your body.

The moment bell sound happens your brain is emptied of all thoughts. Invariably you will enter state of Tran's state where you are very receptive. This Trans state is the one with awareness. You are so occupied in mind that only way to awaken you is with a Shock! And trust me Bell works as Anti-dote to your mind.

Hindu practices generally involve seeking awareness of God and sometimes also seeking blessings from Devas. Therefore, Hinduism has developed numerous practices meant to help one think of divinity in the midst of everyday life. Mantras are invocations, praise and prayers that through their meaning, sound, and chanting style help a devotee focus the mind on holy thoughts or express devotion to God/the deities.

In properly consecrated temples the icons of the deities are made out of scientifically proven materials that can retain energy induced by mantra and other methods of spiritual consecration. We know how vibration can cause action in the physical word. And sound also causes vibration. Mantras are selected words that generate vibration when pronounced correctly. Vibrations cause actions. It has been shown how a wine glass could be shattered by sound vibration when mantras are pronounced close to it or towards it.

Medical science has revealed that our body always carry energy/ charge that goes round

the body in channels. The energy in the body is distributed through 72000 energy tubes or Nadis. The main centre is on the head and is called the Brahma ranthra. In humans there are seven centres, called Chakras along the spine from where these energy is distributed to the periphery of our body. According to Chinese there are positive and negative energy called the Yin and the Yang. These cause a halo round our body and enlightened beings like Lord Buddha or Lord Jesus are always shown with a bright halo round their heads. This energy is called cosmic energy and is derived from the cosmos or Sky or Akash during sleep and meditation. These energy centres called chakras are activated by certain sounds from mantra words. A properly consecrated idol can also activate these chakras. The plant Holy Basil or Tulsi has halo much stronger than an ordinary man's halo.

Fundamental physics shows how a pieces of ordinary iron can be induced with magnetism when it is stroked in a certain way with a magnet placing it in North –South position. Similarly icons/deities could be induced energy in many ways so that it can impart energy to worshippers.

Looking at how the deities/idol at temples are charged with energy so that they retain and release slowly the energy stored for use by the devotees and worshippers we could note that the above philosophy and scientific principles are relied upon for centuries. The adage that the proof of the pudding is in the eating tell us that we should actually visit these places to verify the truth. Michael Woods of the BBC had done this and had some videos produced on his research.

Lingams are perfected forms, and are a perennial storehouse of energy. Similarly other idols and statues can be induced energy and functions in the same way as Lingams. Once you charge them, they will always stay that way. They are eternal vibrations. Usually, they were consecrated with the use of mantras, for specific purposes and specific qualities. The etheric bodies, or the subtle bodies, are constructed using enormous amounts of energy. The process is called Prana Pratishta in Sanskrit, which means giving life to the statue. The image becomes the most important medium through which you can get into contact with the respective Gods/ deity, the Divine. And without an object before us it is very, very difficult to deal with abstraction. Hence these statues become very important tools by themselves. That was really a technology that was given to us by the Divine, himself, since you cannot see the Ethereal Light form of God, because the human eyes are not capable of seeing God. The image will become the most important one.

These energised statues become more active once we hydrate them. Hydration is the process of called Abisekam in Sanskrit language which is now extinct as a regular spoken language. When you just put the water and then just as soon as you put the water the icon comes alive. Just like a plant that you give water to and it comes alive. And after that you pour milk over it, because milk is again a very potent life giving nutrient. So you again strengthen the statue with a whole bunch of products associated with milk, like ghee, buttermilk, honey, sugar and purifying stuffs like sandalwood etc. Orange juice because the acid in the orange juice is very helpful again, to give life to the statue.

Once the statue has come alive, poojas could be performed by lighting camphor, incense, oil/ghee lamps. Then offer offerings such as fruits, and cooked rice and so on. After the offerings you can pray to the gods for salvation and help.









ஆலயத்தில் அரசியல பிரமுகர்கள்



திரு ஆலயத்தில் சொற்பொழிவாளர்கள்
இரா. செல்வகணபதி (தமிழ்நாடு) தமிழருவி சிவகுமாரன்




# TYRE CHECK

## AUTO SPARES & ACCESSORIES - BRITISH & FOREIGN CARS

**Suresh**
*Director*

Tel : 020 8586 0886
Mob : 07956 353 774
Fax : 020 8470 4745
E-mail: tsuresh@tiscali.co.uk




**368 High Street North, East Ham, London E12 6PH**

ttc Education

# Top Tutors

Select Academy

Highly experienced and dedicated professionals

**Thanga Master 07956 438 175**
thanga@ttceducation.co.uk

**Ms Kalpana 07776 060 003**
kalpana@select.gb.com


**Siva Master 07827 854 833**

**Nagadanshan 07956 438 175**

**Free maths papers for all ages**
@
www.topicbytopicmaths.co.uk www.topicbytopicmaths.com



தேர்த்திருவிழா காவடி – 2013





2012 ஒலிம்பிக் விளையாட்டு போட்டியை ஒட்டி மகாராணி வைரவிழாவிற்கான ஆலய வருகை ஏற்பாடு...



2013 தேர்த்திருவிழாவில் திருப்பரங்குன்றம் ராஜா பட்டர்



2014 – தைப்பொங்கல் விழாவில் காவல்துறை அதிகாரிகள்

## நிழலாடும் நினைவுகள்

# நிழலாடும் நினைவுகள்


தேர்த்திருவிழா 2003


வசந்த நவராத்திரி 2006ம் ஆண்டு தேர்


பாலாலயம் 2014




நீரழிவு – விஷேட தாதியின் விளக்க உரை 02–08–2005



வருடாந்த பொதுக்கூட்டம் 04–12–2013 நிர்வாக உறுப்பினர்கள்



தமிழ் மூத்தோர் நலன்புரி அமைப்பின் அங்கத்தினரின்
ஒரு பகுதியினர்


Dr. அறிவொளி, திரு. ஆறுதிருமுருகன், மூத்தோர் அமைப்பில் உரையாற்றுதல்


கலாச்சாரமாலை – தொடக்கிவைக்கும் வோல்த்தம்ஸ்ரோ மேயர் 31–05–2008


கலாச்சார மாலை 24–09–2011 பிரதம அதிதியாக வோல்தம்பொறஸ்ட் கவுன்சிலர்

வணங்கி, வாழ்த்துகிறோம்..........



# SAI SERVICE STATION GROUP.

318/320 Rainham Road South
Dagenham Essex. RM10 7UU.

KILI PEOPLE

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு ஐ.இ

Kilinochchi District People Organisation – UK

1/18 Talbot Square | London | W2 1TS | UK | E: kilipeople2011@gmail.com | www.kilipeople.org

UK Registered Charity No – 1151262

முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு முன்னராகவும் அதன் பின்னரும் பல்வேறு பட்ட மனித நேய உதவிகளை எமது வடக்கு கிழக்கு மக்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவதில் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அறக்கட்டளை (Sri Katphaha Vinayagar Temple Trust) ஆனது ஐக்கிய இராஜ்யத்தில் முதன்மை இடத்தில் இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கிளி மாவட்ட மக்கள் அமைப்பின் நிர்வாக அனுசரணையுடன் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அறக்கட்டளையின் நிதி உதவியுடன் பல்வேறு மனிதநேய உதவிகளை வடக்கு கிழக்கு தாயக உறவுகளுக்காக பாரிய அளவில் நடைமுறைபடுத்தி வருவது யாவரும் அறிந்ததே அவற்றில் சிலவற்றை இங்கே இணைக்கிறோம்.

1) கிளிநொச்சி உதயநகரில் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இலவச கணனி கல்லூரி (£200 /Month)






கற்பக விநாயகர் கணனியகத்திற்கு அது இயங்குவதற்காக கற்பக விநாயகர் ஆலயத்தினால் சொந்தமாக கட்டிடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.





2) கற்பகா கணனி கல்லூரியில் வருடா வருடம் நடைபெறும் சரஸ்வதி பூஜைநிகழ்வின் போது

3) 300 இக்கும் மேற்பட்ட கற்பகா கணனி கல்லூரி மாணவ மாணவிகளின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது












4) கற்பகா கணனி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான உள்ளக அறிவு சார் விளையாட்டு போட்டி நிகழ்வின் போது.





5) கிளிநொச்சி புதிய சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள கற்பகா இலவச மருத்துவ மைய இலவச மருத்துவ சேவை (£100/ Month)





6) ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அறக்கட்டளையின் நிதி உதவியில் கிளிநொச்சி செஞ்சிலுவை சங்க ஏற்பாட்டில் கிளி/ கற்பகா மருத்துவமையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்னி மாணவ மாணவிகளுக்கான அடிப்படை முதலுதவி பயிற்சி






7) கற்பகா மருத்துவ மையத்திற்கூடாக வழங்கப்படுகின்ற மாற்று திறனாளிகளுக்கான உதவி திட்டங்களின் ஒரு பகுதி









8) கல்மடு நகர் கிராம மாணவர்களுக்கான ஆரம்ப ஆங்கில தமிழ் கணித வகுப்புகள் (£50/month)



9) வட்டக்கச்சி மாயவனூர் கிராம மாணவ மாணவிகளுக்கான இலவச கணனி வகுப்புகள் (கிளி/கற்பகா கணனி கல்லூரியின் விஸ்தரிக்கப்பட்ட சேவை (£50/month)



**(கிளி மாவட்ட மக்கள் அமைப்பு -பிரித்தானியா)**



# தல விநாயகர்

ஸ்ரீமத். சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
இணை அதிபர், ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்-612 504, தமிழ்நாடு, இந்தியா.

## ஒன்றுக்குப் பல திருப்பேர்

ஒருநாமமும் இல்லாப் பரம்பொருளின் எண்குணங்களில் எளியனாம் தன்மை என்பது ஒன்று. அக்குணத்தால் இறைவர் ஊரூர்தொறும் அருவுருவத் திருமேனி கொண்டு, திருக்கோயில்களில், தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தந்து அருள்பாலிக்கிறார். பலப்பல தலங்களில் எழுந்தருளினாலும் அவர் ஒருவரே என உணர்த்தும் பொருட்டே எல்லாத் தலங்களிலும் மூலவரின் திருமேனி சிவலிங்கம் எனும் அருவுருவத் திருமேனியாகவே அமைந்தது.

அடுத்தடுத்த திருத்தலங்களில் உள்ள சிவலிங்கத் திருமேனிகளுக்கும் தம் தலச் சிவலிங்கத் திருமேனிக்கும் வேறுபாடு கற்பிக்கவேண்டிய உலகியல் தேவைக்காக ஒவ்வொரு தலத்து இறைவருக்கும் தனித்தனித் திருநாமங்கள் பண்டுதொட்டுச் சூட்டப்பெற்றுள்ளன.

எல்லாத் தலங்களிலும் ஒரே சிவலிங்கத் திருமேனியாக எழுந்தருளுதல், அவர் ஒருவரே என்ற தத்துவத்தையும், வெவ்வேறான திருநாமங்களில் எழுந்தருளுதல், உள்குவார் உள்ளத்துள் அவ்வவர்க்கேற்ற திருக்கோலத்தில் எழுந்தருளும் இறைவரின் பரம தயாள குண தத்துவத்தையும் தெளிவாக்குகிறது.

## முதல் - முழுமுதல்

முதற்கடவுள் என்பது விநாயகரைக் குறிக்கும். இறைவர் இரண்டாம் கடவுளோ என்ற விபரீத அறிவைத் தவிர்ப்பதற்காக, இறைவரை முழுமுதற் கடவுள் என்னும் வழக்கம், அநாதி காலம்தொட்டுச் சைவத்தில் உள்ளது. முழுமுதற் கடவுள் என்பதில் இறைவர் ஆதியந்தம் அற்றவர் என்ற உண்மையும், சர்வ வியாபகி என்ற உண்மையும் பொதிந்துள்ளது. இதனால் கடவுளர் யாவருள்ளும் இருந்து அருள் வழங்குதலும் இவர் செயலே என்பது புலனாகும். 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்' என்ற சித்தியார் வாக்கு இங்கே நினைக்கத்தகும்.

தலங்கள்தோறும் சிவலிங்கத் திருமேனிக்கு வேறுவேறு திருநாமங்கள் அமைதல்போலவே மிகப்பல திருத்தலங்களில் விநாயகப்பெருமானுக்கும் வேறுவேறு திருநாமங்கள் உண்டு. விநாயகர் எனப் பொதுத் திருநாமத்தால் குறிப்பிடாமல் தனித்திருநாமத்தால் குறிப்பிடப்பெறும் விநாயகர் திருமேனியைத் தல விநாயகர் என்பர்.

## மதுரைத் தலவிநாயகர்

அருட்பெருங் கவிஞர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தாம் இயற்றிய பிரபந்தங்களில் தல விநாயகரை நன்கு அடையாளப்படுத்திச் செய்யுட் செய்தருளுவார்.

மதுரை மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் முதற் செய்யுளில், அம்பிகையைப் பிள்ளையாகக் கற்பனை செய்து பாடும் இத் தமிழ்நூல் தழைக்கவேண்டும் என்பதற்காக விநாயக வணக்கம் செய்யும் 'கார்கொண்ட' எனத் தொடங்கும் செய்யுள் செய்தார்.

முதற் பருவமாகிய காப்புப் பருவத்தில் காக்கும் கடவுளாகிய திருமாலை வேண்டுவதாக முதற் செய்யுளும், வெள்ளியம்பலத்தாடும் பெருமானை வேண்டுவதாக இரண்டாம் செய்யுளும் அமைத்து, மதுரை ஆலவாய்த் தலத்துத் தல விநாயகராகிய சித்தி விநாயகரை,

கைத் தலமோடு இரு கரடக் கரைத் திரை
கக்கு கடாம் உடை கடலில் குளித்து, எமர்
சித்தம் அதாம் ஒரு தறியில் துவக்கு உறு
சித்தி விநாயகன் இலைசலையப் பழிச்சுதும்

என்று போற்றுகிறார். மதுரையில் பாடியருளிய மதுரைக் கலம்பகம் என்னும் பிரபந்தத்தின் தொடக்கத்தில்,

புந்தித் தடத்துப் புலக் களிறு ஓடப்
பிளிறு தொந்தித்
தந்திக்குத்,தந்தை தமிழ்க்கு உதவு என்பது என்?
தண் மலர் தூய்
வந்திப்பதும் தனி வாழ்த்துவதும்
முடி தாழ்த்து நின்று
சிந்திப்பதும் அன்றிச் சித்திவிநாயகன் சேவடியே

எனத் தல விநாயகராகிய சித்தி விநாயகரையே துதிக்கிறார். மேலும் மதுரை மீனாட்சி அம்மை குறம் என்னும் பிரபந்தத்தின் தொடக்கத்திலும்,

கார் கொண்ட பொழில் மதுரைக் கர்ப்பூரவல்லி
மணம்கமழும் தெய்வத்
தார் கொண்ட கரும் குழல் அம் கயல் கண் நாயகி
குறம் செந்தமிழால் பாட
வார் கொண்ட புகர் முகத்து ஐங்கரத்து ஒருகோடு
இரு செவி மும் மதத்து நால் வாய்ப்
பேர் கொண்ட கடவுள் சிறுகண் சித்தி விநாயகன்
துணைத்தாள் போற்றுவாமே!

என மதுரை ஆலவாய்த் தல விநாயகராகிய சித்தி விநாயகர் துதியே உள்ளது.

## தில்லைத் தல விநாயகர்

சிவராஜதானி எனப்படும் மதுரை ஆலவாய்த் தல விநாயகர் சித்தி விநாயகர் எனப் பார்த்தோம். சைவம், கோயில் என்னும் பொதுச் சொல்லால் கொண்டாடுவதாகிய தில்லையின் தல விநாயகர் திருநாமம் கற்பக விநாயகர் என்பதாகும்.

அருட்பெருங் கவிஞர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருத்தில்லையில் திருவாய் மலர்ந்தருளிய பிரபந்தங்கள் சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, தில்லைச் சிவகாமி அம்மை இரட்டைமணி மாலை

என்பனவாகும். செய்யுட்கோவை என்னும் பிரபந்த வகைக்கும் இரட்டைமணிமாலைக்கும் முதற்கடவுளாம் விநாயகருக்கு வணக்கம் கூறவேண்டுவதில்லை. காரணம், ஒரு கடவுளை நூல் முழுதும் துதிப்பதே இப்பிரபந்தங்களின் அமைதி ஆகும். முப்பது பாடல்களால் வரும் மும்மணிக்கோவையும் ஒருபெருங் கடவுளைத் துதிப்பதே எனினும் விநாயக வணக்கம் கூறுதல் மரபாக உள்ளது.

சிதம்பர மும்மணிக்கோவையின் தொடக்கத்தில் அருட்பெருங் கவிஞராகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தில்லைத் தல விநாயகராகிய கற்பக விநாயகரை,

செம் மணிக் கோவைக் கதிர் சூழ் தில்லைச் சிற்றம்பலவன்
மும் மணிக் கோவைக்கு வந்து முன் நிற்கும் - எம் மணிக்கோ,
அஞ்ச[ம்] கரக் கற்பகத்தார் இறைஞ்சும் அஞ்சு
கஞ்ச[ம்] கரக் கற்பகம்

எனப் பாடித் துதித்தார். திருமாலும், பிரமரும், இந்திரரும் தில்லைத் தல விநாயகராகிய கற்பக விநாயகரை வணங்குவர் என்பது இவ் வெண்பாப் பாடலின் கருத்து.

## வேளூர்த் தல விநாயகர்

புள்ளிருக்கு வேளூர் எனப்படும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருள்பாலிக்கும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக் கடவுளைப் பிள்ளையாகக் கற்பனை செய்து ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய பிரபந்தம் வைத்தீசுவரன் கோயில் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் என்பதாகும்.

இந்நூல் முட்டின்றிச் சிறக்க அமைய வேண்டும் என்ற வேண்டுதலை,

**குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவும்என்**
**கொழிதமிழ்க் கவி,தழையவே,**

**பொன் பூத்த குடுமிப் பொலம் குவட்டு இமவான்**
**பொருப்பில் பிறந்து,தவளப்**
**பொழி நிலவு தவழும் முழு வெள்ளி வேதண்டத்து ஓர்**
**போர்க் களிற்றைப் புணர்ந்து**
**தென் பூத்த பாட்டு அளி துதைந்த பைம் கூந்தல்**
**செழும்பிடி பயந்து அளித்த**
**சிறுகண் பெரும் செவிக் குஞ்சரக் கன்றின் இரு**
**செம் சரணை அஞ்சலிப்பாம்**

என்ற தொடர்களில் வைத்துப் பாடியருளினார் ஸ்ரீ குமரகுருபரர். இதனுள், இறைவர் போர்க்களிறாக வருணிக்கப்பட்டமைக்கு ஏற்ப இறைவியைக் கூந்தல் பிடி என வருணித்து இவ்விருவருக்கும் பிறந்தது விநாயகர் என்னும் குஞ்சரக் கன்று (யானைக்குட்டி) என்ற கற்பனை, நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகும்.

இம்முதற் பாடலுள் குறிப்பிடப்பெறும் விநாயகர் தல விநாயகர் அல்லர். புள்ளிருக்கு வேளூர் எனப்பெறும் வைத்தீசுவரன் கோயில் தல விநாயகர் திருநாமம் ஸ்ரீ கற்பக விநாயகர் என்பதேயாகும்.

இப்பிள்ளைத் தமிழ் நூலின் காப்புப் பருவ நான்காம் திருப்பனுவல், ஸ்ரீ முத்துக்குமார சுவாமி என்னும் இப்பிள்ளையை ஸ்ரீ கற்பக விநாயகர் காத்தருள வேண்டும் என்னும் கருத்துடைய கற்பக விநாயகர் துதிப்பாடலாகும்.

**கடாம் உமிழ் கைக் கதக் கிம்புரிக் கோட்டு ஒரு**
**கராசலம் இட்ட மெய்க் கஞ்சுகிக்கு ஏற்ப ஓர்**
**படாம் அணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள்**
**பராவரு கற்பகக் கன்றினைப் போற்றுகும்**

என்பது ஸ்ரீ கற்பக விநாயகரைத் துதிக்கும் பாடற் பகுதியாகும். இறைவர், யானைத் தோலைப் போர்த்தவர்; அது அவருக்குச் சட்டையாக அமைந்துள்ளது. யானைத் தோலைக் கஞ்சுகமாக - சட்டையாக, உடையவருக்கு யானைக்குட்டியே பிள்ளையாக உள்ளது என்பது இதிலுள்ள கவி சமத்காரமாகும்.

## நிறைவுரை

தேவர் உலகைக் கற்பக நாடு என்பர். கற்பகமரம் உள்ள நாடு கற்பக நாடு. தேவர் உலக மரங்கள் ஐந்து. கற்பகம், அரிச்சந்தனம், சந்தானம், பாரிஜாதம், மந்தாரம் என்பன அவை. இவற்றைப் பஞ்சதரு அல்லது ஐந்தரு என்பர். இவற்றுள் கற்பகம் வேண்டுவோர்க்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் தெய்விக ஆற்றல் உள்ள மரம். எனவே, இது தேவர் உலக மூவதிசயங்களில் ஒன்றாகிறது. தேவர் உலக மூவதிசயங்களாவன: 1. சிந்தாமணி ; 2. கற்பக விருட்சம் ; 3. காமதேனு.

கற்பக விருட்சம் போல வேண்டியார்க்கு வேண்டுவன ஈவான் ஆகிய விநாயகப் பெருமானைக் கற்பக விநாயகர் என நாமம் நவிற்றித் தொழுவது சால இனிய செயலாகும். இதனாலே பல தலங்களில் தல விநாயகர் திருநாமமாகக் கற்பக விநாயகர் என்ற திருநாமம் அமைந்தது என அறிதல் தகும்.

# சமூக நலன்புரி அமைப்பு

# SOCIAL WELFARE ORGANIZATION

S.W.O

PUTHUKKUDIYIRUPPU, BATTICALOA ,SRI LANKA.

A Registered Charity No : DS / MS / 02 / RSO / 23

Phone No : 065- 2250189,Fax No : 065- 2250189, E-mail :swolk.org@gmail.com


விநாயகர் துணை நிற்க !

இலண்டன் மாநகரில் வோல்தம்ஸ்ரோவில் அமையப்பெற்றுள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் ஆரம்பிக்கபட்டு இருபத்தி நான்கு வருடங்கள் கடந்த பழமை வாய்ந்ததொரு ஆலயமாக திகழ்வதுடன் பல்வேறு சிறப்பம்சங்களையும் கொண்டு விளங்கி வருகின்றது.

இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம கடந்த 2001 ம் ஆண்டு சிறப்புக்கள் பெற்ற பல சிவாச்சாரியார்கள் இணைந்து நிறைவேற்றி வைத்தமை யாவரும் அறிந்தவிடயமாகும்.

ஆலயத்தில் மகோற்சவம், விநாயகர் விரதம் போன்ற பல உற்சவங்கள் நடைபெற்று வருவதுடன், சமூகப் பணியினையும் இவ்வாலயம் முன்னெடுத்து வருவது பெருமைக்குரிய விடயமாகும். அதுமட்டுமின்றி தாயகத்தில் இருந்து இவ்ஆலயம் சார்பான பாடல்கள் அடங்கிய இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டமை இங்குள்ள மக்களின் ஆலய ஈடுபாட்டினையும் ஆன்மீக பற்றினையும் எடுத்துக் காட்டுகின்றன.

அந்தவகையில் இவ்ஆலயமானது தாயகத்தில் மட்டக்களப்பு , வவுனியா மன்னார் , கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் ஆதரவு அற்ற சிறுவர் சிறுமியர் பராமரிப்பு, வெள்ள நிவாரண உதவி, பல்கலைக்கழக வறிய மாணவர்களுக்கு உதவி போன்ற பல சமூகப் பணிகளையும் ஆலயமானது முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் கற்பகா விநாயகர் ஆலயத்தின் அறப் பணியாக எமது சமூக நலன்புரி அமைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள கற்பகா ஆடைத்தொழிலகம், அகிலன் கணணி கூடம் என்பனவற்றை ஆரம்பித்து அதற்கு தேவையான கணணி இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், கணணி மேசைகள், கதிரைகள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்துள்ளீர்கள். இப் இரண்டு பயிற்சி நிலையங்களும் சிறந்த முறையில் இயங்கிவருவதுடன் இப் பயிற்சி நெறியில் வறிய பல மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்தொரு விடயமாகும். அத்துடன் கணணி க்கூடத்தில் கல்வி பயின்ற மாணவர்களில் சிலர் அரச தொழிலில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கதக்க விடயமாகும். எல்லாப்புகழும் எல்லாம் வல்ல விநயாகப் பெருமானையே சாரும்.



























கிளிநொச்சி மகாதேவ ஆசிரமத்தில் 60 பிள்ளைகள் பாராமரிக்கப்பட்டு வருகிறார்கள். கற்பக விநாயகர் கோயிலினால் இந்த ஆசிரமத்திற்கு சமையல் அறையும், உணவு மண்டபமும் கட்டிக்கொடுக்கப்பட்டது

கனம்
தலைவர் /செயலாளர்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
லண்டன்

பேரன்புடையீர்

தங்களின் மின்னஞ்சல் கிடைத்தது நன்றி

முதற்கண் தங்களுக்கும் தங்களின் ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

எமது இல்லத்தில் பராமரிக்கப்பெற்று வரும் சிறார்களின் ஒரு பகுதி பிள்ளைகளின் பராமரிப்புக்காக தாங்கள் தொடர்ந்து பணம் அனுப்பி வருவதற்கு எமது இல்லக்குழந்தைகள் சார்பாகவும் நிர்வாகத்தின் சார்பாகவும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தாங்கள் கேட்டுக்கொண்டபடி விபரங்கள் யாவும் இணைத்து அனுப்பி வைக்கின்றோம்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையும் தாங்கள் அனுப்பிய கணக்கு விபரம் வருமாறு


| இல | திகதி | பற்றுச்சீட்டு இலக்கம் | தொகை |
|---|---|---|---|
| 1. | 23.01.2011 | 519 | 5,19,000.00 |
| 2. | 28.01.2011 | 533 | 4,02,600.00 |
| 3. | 29.03.2011 | 661 | 3,98,805.20 |
| 4. | 30.06.2011 | 836 | 3,89,667.95 |
| 5. | 27.09.2011 | 1021 | 3,85,434.80 |
| 6. | 29.12.2011 | MA 215 | 3,90,203.00 |
| 7. | 26.03.2012 | MA 231 | 4,53,711.50 |
| 8. | 22.06.2012 | MA 517 | 4,56,572.37 |
| 9. | 30.08.2012 | MA 790 | 4,64,347.70 |
| 10. | 21.12.2012 | MA 1223 | 4,93,823.84 |
| 11. | 16.03.2013 | MA 1635 | 4,18,251.72 |
| 12. | 20.07.2013 | MA 2204 | 4,42,446.87 |
| 13. | 11.10.2013 | MA 2557 | 4,63,679.00 |
| 14. | 10.02.2014 | MA 3115 | 4,56,240.61 |
| | | | **61,34,784.56** |


தங்களின் தொடர்ச்சியான உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்

இவ்வண்ணம்

தி. இராசநாயகம்
தலைவர்
மகா தேவா ஆச்சிரமச் சைவச் சிறுவர் இல்லம்

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி





## லண்டன் வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் ஈழத்துப்பணி

### லண்டனிலே வீற்றிருந்து ஈழத்தில் வலியுடன் உள்ள உறவுகளுக்கு உதவும் எம்பெருமானின் அடிபணிந்து ஈழத்தில் இருந்து.....


உலகின் நாலா பக்கமும் தமிழன் சிதறிச் சென்றும் எஞ்சிய உறவுகள் நாங்கள் ஈழத்தில் இன்னல்கள் கண்டுள்ளோம். யுத்தம், இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, வெள்ளம் என அடுக்கடுக்காய் சோதனைகளை அனுபவித்த எம்முறவுகளுக்காக லண்டன் வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயக ஆலய அறங்காவலர்களும் அவர்களுடன் இணைந்து ஆலய ஸ்தாபகரும் அகிலன் பவுண்டேஷன் ஸ்தாபகருமாகிய ஈழத்து வள்ளல் கோபாலகிருஸ்ணன் ஐயா அவர்கள் ஆற்றிய சேவை எம்மக்களுக்கு அளப்பெரியது. அந்த வகையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத் தீவுபோன்ற இடங்களில் இன்னும் தொடர்ச்சியாக செயல்படுவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். ஒட்டுமொத்த தமிழர் பிரதேசங்களில் வயோதிபர் இல்லங்கள் வறியமாணவர்களின் இல்லங்கள் தாய் தந்தையரை இழந்த உறவுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டஉறவுகள், போராளிகளாக இருந்து அங்கவீனமுற்றவர்கள், கணவனை இழந்தவர்கள் என இனம் காணப்பட்டதன் அடிப்படையில் சுயதொழில் திட்டங்கள் ஊடாக ஆடு, மாடு, கோழி வளர்த்தல் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை, இலவசகணணி பயிற்சிநிலையம், இலவச தையல்நிலையம், ஆடைத்தொழிற்சாலை (கற்பகா தையல்நிலையம் - கிளிநொச்சி) பப்பட தொழிற்சாலைகளுவாஞ்சிகுடி (கற்பகா பப்படம்) இவற்றைவிட இயற்கை அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்காக உணவுப்பொதி, உடைபோன்ற உதவிகளையும் இதுவரை காலமும் செய்து கொண்டிருப்பதையிட்டு பெருமிதம் கொள்ளும் இவ்வேளையில் மக்கள் சேவையே மகேசன் சேவையென மொழிந்ததற்கமைய ஸ்ரீகற்பக விநாயக ஆலய நிர்வாகத்தினர்க்கும் பக்தர்களுக்கும் எம் ஈழத்து மக்கள் சார்பாக நன்றியை கூறிக்கொள்ளும் அதே வேளை இப்பணியினை தொடர்ந்து செய்ய எம்பெருமான் அருள்பாலிக்கவேண்டுமென்று கூறி நிற்கின்றேன்.

சேவையில்

வீ ஆர் மகேந்திரன் (JP)

முன்னாள் தவிசாளர். அகிலன் பவுண்டேசன் இணைப்பாளர்

ஆவணிச்சதுர்த்தி
கடற்கரை கணபதி
2013





## ஒரு பிரஜையின் குரல்....

லண்டன் வாழ் தமிழர்கள் பரவலாக எல்லா இடங்களிலும் வசித்து வந்தாலும் அவர்கள் செறிந்து வாழ்வது கிழக்கிலும் மேற்கிலும் என்று சொல்லலாம். நானும் எம்மவருடன் கூடி வாழ நினைத்து சுமார் 25 வருடங்களுககு முன் புலம்பெயர் வாழ்க்கையை தொடங்க தேர்ந்தெடுத்த இடம் வோல்த்தம்ஸ்ரோ. அக்கால கட்டத்தில் தமிழர்கள் ஒப்பீட்டு ரீதியில் ஈஸ்ட்ஹாமிலும் பார்க்க வோல்த்தம்ஸ்ரோவில் குறைந்த அளவினரே வசித்து வந்தனர். இருந்தும் இவ்விடத்தை வாழ தேர்ந்தெடுக்க உந்துதலாக இருந்தது இங்கிருந்து இயங்கி வந்த "வோல்த்தம்ஸ்ரோ தமிழ்சங்கம். மதுரை தமிழச்சங்கத்தால் வளர்ந்த தமிழானது லண்டன் மாநகரிலும் எதிரொலிக்க பலசங்கங்கள் ஆங்காங்கே தொழிற்பட்டாலும் பழமையான சங்கங்களில் இந்த வோல்த்தம்ஸ்ரோ தமிழ்சங்கமும் ஒன்று.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை உணர்ந்து தமிழர்கள் வோல்த்தம்ஸ்ரோவில் குடியேற தொடங்கினார். அடுத்த சந்ததியினர் தலையெடுக்க தொடங்க பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எங்கே எமது தாய்மொழியையும், பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மறந்து விடுவார்களோ என சற்று கவலையுற்றனர். தமிழ்ச்சங்கம் தன்பணியை செவ்வனே செய்து தமிழையும், கலை, கலாச்சாரத்தை வளர்க்க உதவி செய்தது.

தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தமிழர் வியாபார ஸ்தலங்களும் பெருகியது. எவ்வளவுதான் பொருளாதார ரீதியாக மேம்பட்ட நிலையில் இருந்தாலும் ஆன்மீக ஈடுபாடு அற்ற தன்மை ஒரு நெருடலாகவே இருந்தது. கோயில், குளம், திருவிழா என்று அவற்றோடு ஒன்றியே வாழ்ந்து பழக்கப்பட்டவர் நாம். ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்று தெரிந்திருந்தாலும், செயற்படுத்த முடியாதநிலை ஆரம்பத்தில் நிலவியது, காரணம் ஆலயங்கள் செல்ல தூரங்கள் பயணிக்க வேண்டியிருந்தது.

இக்குறைய நிவர்த்தி செய்ய கிட்டத்தட்ட ஓரே காலகட்டத்தில் இரு கோயில்கள் உருவாகின. அவை விக்னங்கள் களையும் கற்பகபதி கற்பக விநாயகர் கோவிலும், தாயுள்ளத்தோடு கருணை மழை பொழியும் ஸ்ரீ மேருபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலும் ஆகும்.

முதியோர்களின் தனிமை போக்கி ஆன்மீகத்தில் இளைப்பாறச் செய்யவும், இடை வயதினர் எதிர்கொள்ளும் இன்னல்களுக்கு வழிபாட்டால் விடைகாணவும், இளம்சிறார்களுக்கு நேற்று நாம் வாழ்ந்த வாழ்க்கை விதம் போல பாதை அமைத்துக் கொடுக்கவும் இவ்விரு ஆலயங்களும் எம்மவருக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது. இத்தோடு Love All Serve All என்பதை தாரக மந்திரமாகக்கொண்டு வோல்த்தம்ஸ்ரோ சாயி நிலையம் இயங்கிவருகிறது. இதில் வேறுபாடுகள் இன்றி சாயி அன்பர்கள் கலந்துகொண்டு தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் மேம்படுத்திக் கொள்கிறார்கள். முதியவர்களுக்காக கற்பக விநாயகர் கோயிலிலேயே முதியோர் நலன்புரி சங்கம் ஒன்று இயங்கி வருகிறது.

கிறீஸ்தவர்களுக்காக இங்கு இரு கிறீஸ்தவ தேவாலயங்கள் தமிழில் சேவையையும், பூசையையும் நடாத்தி வருகின்றன. இவற்றையெல்லாம் மனதிற்கொள்ளும்போது வோல்த்தம்ஸ்ரோவானது ஒரு தமிழன் நிம்மதியாக வாழ பொருத்தமான இடம் என்பது தெளிவாகிறது.

**வோல்த்தம்ஸ்ரோ பிரஜை**

## தாய்த்திருநாட்டில் வவுனை கோவிற்குளம் அருளகத்திற்கு வாரி வழங்கும் திருத்தலம்.

**சிவமணி ஆறுமுகம் நவரத்தினராசா**

**அறங்காவலர் / அருளகம்,**

**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்,**
**கோவிற்குளம், வவுனியா.**

இலண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 04.07.2014ஆந் திகதி வெகுகோலாகலமாக நிகழவுள்ளது என்ற செய்தியறிந்து பெரிதும் மகிழ்வடைகின்றோம். எமது கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகத்திற்கும் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோவில் பரிபாலனசபையினருக்கும் இடையில் மிகமிக நெருங்கிய தொடர்புகள் உள்ளன. தாய் மண்ணிலேயிருந்து இலண்டனில் வாழும் நமது தேசத்து உறவுகள் தமது மண்ணையும், மக்களையும், படுந்துயரையும் மறந்து தாமுண்டு தமது பணியுண்டு என்று வாழும் கொள்கையினரல்லர். இன அபிமானமும், மதஅபிமானமும், நாட்டுப்பற்றும், கொள்கைப்பற்றும் கொண்ட பரந்த உளத்தினராய் தாய்த்திருநாட்டிலுள்ள உதவிவேண்டிய உயிர்களுக்கும், ஏதிலிகளான மக்களை அரவணைத்து ஆதரவு தந்து பராமரித்துப் பேணும் நிறுவனங்களுக்கும் இனங்கண்டு வேண்டியபோதெல்லாம் உதவிகளை அள்ளிவழங்கும் மனப்பங்குவங்கொண்டவர்களாக வாழ்கின்றனர். இதில் என்ன மகத்துவமென்றால், அருளொடு பொருளையும் தரும் மாண்பாகும். எப்பொழுதுமே திருவருள் அல்லது இறையருள் முன்னிற்கவென முயலும் கருமங்கள் வெகுதுரிதமாகவும், தூய்மையாகவும், வளர்ச்சியுறும் என்பது மகானுபவர்களது அனுபவமாகும். நிலைபேறு உறுதி என்பது எப்பொழுதுமே இறைநிலையை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்படும் போது அது பல்பயனுடையதாய் விகசித்து பயன்விளைவிக்கும்.

தொடர்ந்தும், இன்றும்,இனியும் பல்வேறு அடிப்படைத்தேவைகள் வேண்டப்படும் ஒரு அற்புத நிறுவனம் "அருளகம்" என்றால் அது மிகையன்று. ஏனெனில் "அருளத்தின்" நோக்கம், குறிக்கோள், இலக்கு, இலட்சியம், தொண்டு, சேவை, உதவும 'பண்பு, மிகமிக மேன்மையானது, மகோன்னதமிக்கது. சுயநலமற்றது, பொதுநலன்சார்ந்தது, இறைபணி இயல்வது எனவே இங்கிருந்து நமது இந்த இனியநல்நோக்கங்களுக்காகக் குரல் கொடுக்கும் போதெல்லாம் அபயந்தந்து அதனை ஈடேற்றும் பெருவள்ளல் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகர் அறங்காவலர்கள் என்றால் அது முற்றிலும் உண்மை.

ஒருசில ஞானிகளது செயலைக் கண்டுபிடிப்பதும் புரிந்து கொள்வதும் சாமானியர்க்கு அரிது. ஆன்மீகத்தில் காலத்தால் முந்தியது சைவத்திருத்தொண்டு தான் என்பதே வரலாறு. இதன் பின்னர் தான் உலகில் ஏனைய மார்க்கங்கள் தோன்றின, தொழிற்படலாயின,பல்கிப்பெருகின. இதன் சைவத்திருத்தொண்டின் மகிமையெதுவெனில் இயற்கைக்கு மாறானவற்றை ஏற்றுக்கொள்ளாத பெருநிலையாகும். அதாவது ஒழுங்கும்,கட்டுப்பாடுமாகும். "அருளகம்" என்னும் எமது நிறுவனம் ஒரு திருக்கோவிலேயாகும். அது மக்கள் கோவில். அருகிலிருப்பது மகேசன் கோவில், சிவன் கோவில் தேவஸ்தானம். அருளகம் மூன்று தனிப்பெருங்கூறுகளைக் கொண்டது. ஆண்பாலார்,பெண்பாலார்,முதுகுரவர் (முதியோர்) இல்லம் என்பன அவை. அருளகம் என்னும் மக்கட் கோயிலின் மூலத்தானம் நவரத்தினகோலாகலபீடம். இப்பீடத்தின் நிலை ஸ்திரமானது, உறுதியானது, அசையாதது, அசைக்கமுடியாதது, கலங்காதது, மிகமிகத்தெளிவானது, தேவையெல்லாம் ஈடேற்ற வல்லது சர்வவல்லமை கொண்ட பேரொளி மிக்கது.

ஆகவே, அருளகத்துக்கும் இலண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீகற்பகவிநாயகப்பெருமான் ஆலயத்துக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பு 2009 முதல் இன்றுவரை தடையின்றி பிணைப்பிலுள்ளது. கற்பகதரு,காராம்பசு,மகாலட்சுமி,எனும் மூன்றுமே பாற்கடலிலிருந்து பிறந்தவை. கற்பகவிநாயகராலயங்கள் உலகப்பிரசித்திபெற்றவை. தமிழ்நாட்டிலே மிகமிகக் கீர்த்தியும் மகிமையும்,மகத்துவமுங் கொண்டவை. அதேபோலவே இலண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமான் கோயிலும் பெருமகத்துவமிக்கது.

ஈர்த்து அருளை அள்ளிவழங்கும் பெருமான் அவர். நம்பினவர்க்கு அருள் கொடுக்கும் அற்புதன். திருவுள்ளமிரங்கி ஏழைகளுக்கு அருள்செய்யும் விநாயகப்பெருமான் போன்றே அவரை ஆதரிக்கும் அறங்காவலர்களும் எனில் அது பொருந்தும். திருவுளம் இரங்கினாலன்றி அருளகம் போன்ற பெரிய நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பது என்பது கடினம். ஏனெனில் அருளகத்தின் பொதுப்பணி வீச்சுமிகமிக விசாலமானது,விரிவானது,வினைத்திறன் மிக்கது,விதந்துரைக்கத் தக்கது.

அருளகத்தின் பணிகளுள் முதலிலே குறிப்பிடவேண்டியது கல்விப்பணி இரண்டாவது சமயப்பணி, மூன்றாவது மானுடமேன்மை – முதியோர் பணி என்பனவாகும். அருளகத்தின் அறங்காவலர்கள் குறிக்கோளும் இஃதேயாகும்.இத்துடன் நின்றுவிடாமல் சமூகத்தை அரவணைத்துதவி திருமணம் பிறவைபவங்களையும் நடத்த ஏற்பாடுகள் உண்டு. விரத நியமங்களை அனுஷ்டிக்கவும்,பிரத்தியேகக் கல்வி வகுப்புக்கள் நடத்தவும் ஏற்பாடுகள் உள்ளன. கலைவளர்ச்சி,நூல்வெளியீடுகள்,என்பனவும்மிகமிக உயர்தரத்திலே நிகழ்ந்தேறுகின்றன. அருளாளர்கள், சிறந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள், புராணவிற்பன்னர்கள், பண்ணிசையாளர்கள் ,தொடர் திருமுறைப்பாராயண ஏற்பாடுகள் என்னும் தொடர்புகள் மேன்மைமிக்கன. இவற்றுக்கெல்லாம் அனுசரணை வழங்கி ஒத்துழைப்பு நல்கும் இலண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீகற்பகவிநாயகப் பெருமானின் அறங்காவலர்களை நீள்நினைந்து, நெஞ்சிருத்திப் பாராட்டுவது நமது கடமையாகும். வள்ளல்களை வாயாரவாழ்த்துவதற்கும், அவர்தம் மாண்புயர் பணிகளைக் கௌரவிப்பதும் நமது பெருவிருப்பார்வமாகும்.

அருளகத்திலே எமது திட்டப்பணிகள் என்று வரையறை செய்து முற்கூட்டியே நிர்ணயித்து செயற்படுத்தப்படுவனவல்ல. கால,தேச வர்த்த மானங்களுக்கும் திருவருட்கட்டளைக்குமமைய அவை நல்லபடி நிகழ்ந்தேறுகின்றன. இதில் சாதனைகள் எனக்கொள்ளத்தக்கவை ஒருசில உள்ளன. மாணவ மாணவியர் கற்றுப் பரீட்சைகளிலே குறிப்பாக A/L பரீட்சையிலே சித்திபெற்று பல்கலைக்கழகங்கள்,கல்வியற்கல்லூரிகள், மற்றும் இராமநாதன் நுண்கலைப்பீடம், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசைக்கல்லூரி என்பனவற்றுக்குத் தெரிவாகி அங்கு சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ளும் திறன் சுட்டியுரைக்கத்தக்கது.அருளகமாணவர் மருத்துவக்கல்லூரிக்குச் சென்று டாக்டராகப் பல்கலைக்கழகத்தில் பயில்வது கூறப்படவேண்டியது. இத்தகு அடைவுகளை எட்டவும், அருளகத்தின் புகழ், மதிப்பு, பெயர் உயரவும் மாபெரும் அதிபர்,ஆசிரியர்கள்,விரிவுரையாளர்கள்,பேராசிரியர்கள் ஆகியோரது ஒத்துழைப்பு மெச்சத்தக்கது விண்டுரைக்கப்படவேண்டியது. இத் தொடர்பில் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் எமக்கு உறுதுணைபுரிந்து வருகின்றனர். இத்தகு முயற்சியினை முனைப்புடன் முன்னெடுக்க எமக்கு உதவும் ஒரு திருக்கோயிலாக இலண்டன் வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் விளங்குகிறது.

அருளகத் திட்டத்தில் ஒன்று தற்போதுள்ள முதியோரில்லத்தை நவீனமயமாக உண்டாக்கி அனைத்து அடிப்படை வசதிகளையும் இணைத்து இயங்கவைப்பது. முக்கியமாக உதவும் கரங்கள் இதற்கு மிகமிக அவசியம். உதவுங்கரங்கள் பணி இருவகையானது.

I. பௌதிக வளங்களை விசாலிக்க உதவும் பொருளுதவி (பண உதவி)
II. மனிதநேய உதவி சேவையுணர்ச்சியுடன் கூடிய சரீர உதவியாளர் பணி.

இவையிரண்டும் இன்றைய சமுதாயத்தில் தேடிப்பிடிப்பது பெருஞ் சிரமம். எனினும் கொள்கைப்பற்றுடனும், தீராத முயற்சியுடனும் அருளக மக்கள் கோயில் 'மூலபீடம்' சதா தொழிற்பட்டுக்கொண்டிருக்கிறது. என்பதே அருளகமகிமைக்கு உறுதுணை. பக்தி வைராக்கியமும், பொதுநல வேட்கையும், மனிதாபிமானமும், பொதுமக்கட்தொடர்பும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், அன்புறுநெஞ்சமும், செயற்றுடிப்பும் கொண்ட அருளக அறங்காவலர்களும் அவர்தம் குறிக்கோள்களும் மகோன்னதமிக்கவை. இனியெதிர்காலத்திலே அரிய பல திட்டங்களைச் செயற்படுத்தும் வேட்கை நிறையவுண்டு. "என்கடன் பணிசெய்து கிடப்பதே.." என்ற திருநாவுக்கரசு நாயனாரது குறிக்கோள் நலத்துடன் வாழும் அருளகமேலிடம் எல்லாம் வல்ல நல்லது எல்லாம் தரும் இலண்டன்வோல்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமானின் 2014 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தின் போது அவனருள் மேன்மேலும் பெருக வேண்டும். என்று பிரார்த்தித்து வெகு பக்தி பூர்வமாகவும், கோலாகலமாகவும் குடமுழுக்கு வைபவம் முற்றுப்பெறவும், வெளியிடும் சிறப்புமலர் பெருமானது புகழையும் அறங்காவலர்களது பணிகளையும் பறைசாற்றுவதாகவென்றும் வாழ்த்தி அமைகிறோம்.

**சுபம்**

சிவமயம்







ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே இரவு பகல் உணர்வோர் சிந்தை
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்றோ என்னச்செய்யும்கோவே

அற்புத அருள்புரி கற்பக கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்

# கற்பகபதி திருவருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்

2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 020 8527 3819 Web:www.karpahapathy.com Regd Charity No: 1092252

# புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

**04.07.2014 வெள்ளிக்கிழமை ஆனி உத்தர நன்னாள் பகல் 9.45 மணி முதல் 10.50 வரை**

ஐரோப்பிய கண்டத்தில் பெரிய பிரித்தானிய நாட்டில் இங்கிலாந்து பிரதேசத்தில் சைவமும் தமிழும் சாஸ்திர சம்பிரதாயமும் மரபு மாறா மகிமையும் சிறந்து விளங்கும் லண்டன் மாநகரில் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் வோல்தம்ஸ்ரோ நகரில் கற்பகபதி என்னும் புண்ணிய தலத்தில் நாடுவோர்க்கு நல்வரம் நல்கும் அற்புத மூர்த்தியாம் கற்பக விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் சமயகுரவர்களுக்கும் 04.07.2014 வெள்ளிக்கிழமை ஆனி உத்தர நன்னாள் பகல் 9.45 மணி முதல் 10.50 வரையுள்ள சிம்ம லக்ன சுப வேளையில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

## பிரதான கிரியைகள்

**30.06.2014 திங்கள்**

| | |
|---|---|
| காலை 7.00 மணி முதல் குரு வோரையில் கர்மாரம்பம் அனுக்ஞை திரவ்ய பூசை, திரவ்யயாகம், முகூர்த்த படனம், கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், ரக்ஷோக்னஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், சூரியாக்னிசங்கிரகணம் | மாலை 5.00 மணி முதல் அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூசை, கடஸ்தாபனம், கலாகர்ஷனம், கும்பயாகசாலாபிரவேசம், யாக பூசை, அக்னிபூசை, மூலமந்திரஹோமம், பூர்ணாகுதி, வேதநாதகீதஸ்தோத்திர திருமுறை பாராயணம் |

**01.07.2014 செவ்வாய்**

| | |
|---|---|
| காலை 8.00 மணி முதல் விநாயகவழிபாடு, விசேஷசந்தி, யாகபூசை, பாவனாஅபிஷேகம், திரிசதிஹோமம், பூர்ணாகுதி, உபசார சமர்ப்பணம் | மாலை 5.00 மணி முதல் விநாயகவழிபாடு, யாகபூசை, இரவு 7.00 மணி முதல் தீபஸ்தாபனம்,யாகஹோமம், பூர்ணாகுதி,தேவஉபசாரம் |

**02.07.20114 புதன்**

| | |
|---|---|
| அதிகாலை 5.00 மணி முதல் 6.00 மணிக்குள் ஸ்தூபிஸ்தாபனம் (விமானங்களுக்கு கலசம் வைத்தல்) பிம்பஸ்தாபனம் அஷ்டபந்தனம்) தெய்வ திருமேனிகளை ஆலயங்களுள் வைத்தல் காலை 9.00 மணி முதல் விநாயகவழிபாடு, விசேஷசந்தி, யாகவழிபாடு, ஹோமம், பூரணாகுதி, வேதகீதநாதஉபசார சமர்ப்பணங்கள் | பகல் 12.00 மணி முதல 03.07.2014 வியாழக்கிழமை மாலை 6.00 மணி வரை அடியார்கள் தெய்வ மூர்த்திகளுக்கு எண்ணெய்க்காப்பு செய்யலாம் மாலை 5.00 மணி முதல் விநாயகவழிபாடு, பூதசுத்தி, அந்தர்யாகம், யாக பூசை, ஹோமம், பூர்ணாகுதி, உபசார சமர்ப்பணங்கள் |

**03.07.2014 வியாழன்**

| | |
|---|---|
| காலை 8.00 மணி முதல் விநாயகவழிபாடு, விசேஷசந்தி, யாகபூசை, விஷேசதிரவ்யஹோமம், பூர்ணாகுதி, வேதநாதகீதஉபசாரம் | மாலை 5.00 மணி முதல் விநாயகவழிபாடு, பிம்பசுத்தி, கும்பபூசை, வேதபாராயணம், யாகபூசை, பிம்பசுத்தி, நியாசம், ஸ்பர்சாகுதி,பரிவாரமூர்த்தி, |

**04.07.2014 வெள்ளி**

| | |
|---|---|
| காலை 7.00 மணி முதல் விநாயகவழிபாடு, யாகபூசை, ஹோமம், பூர்ணாகுதி, அக்னிசம்யோஜனம், மகாபூரணாகுதி, அந்தர்பலிர்பலி, சோடசஉபசாரபூசை, வேத உபநிசத இதிகாச புராண சிவாகம சித்தாந்த ஸ்தோத்திர கீத நாத ராக தாள வாத்திய திருத்ய ஆசீர்வாத திருமுறை உபசாரங்கள் பகல் 10.00 மணிக்கு விமானக் கலசங்கள் அபிஷேசம் | தொடர்ந்து கற்பக விநாயகர் முதலான மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம் தச தர்சனம் தீபாராதனை உபந்நியாசம் ஆச்சார்ய சம்பாவனை மாலை 6.00 மணி கற்பக விநாயகர் மகா அபிஷேகம் 8.00 வசந்த மண்டபப் பூசை கற்பக விநாயகப் பெருமான் வீதி உலா |

**விப்ரசதஸ்**

| | | |
|---|---|---|
| விகாஸ்ரத்ன (டாக்டர்) சிவஸ்ரீ கீ.பிச்சைக் குருக்கள் (பிரதம சிவாச்சாரியார்) பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் (அதிபர் வேத சிவாகம பாடசாலை பிள்ளையார்பட்டி) வேதசிவாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தட்சணாதேவக்குருக்கள் (அதிபர் திருச்சிற்றம்பலம் குருகுலம் இலங்கை) சிவாகம சிரோமணி சிவஸ்ரீ கி.ராஜுபட்டர் (அதிபர் ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம் திருப்பரங்குன்றம்) | சாதகசிரேஷ்டர் சிவஸ்ரீ விஸ்வநாராயண சிவாச்சாரியார் அதிபர் குருகுலம் இலங்கை சிவாகமஜோதி சிவஸ்ரீ கி. கைலாசநாத சிவாச்சாரியார் (அதிபர் சிவபுரம் வேதசிவாகம பாடசாலை மயிலாடுதுறை) சிவாகமசிரோமணி சிவஸ்ரீ சிவ சச்சிதானந்த சிவாச்சாரியார் லண்டன் | வேதசிவாகமபூஷண சிவமணி சிவஸ்ரீ கைலை நாகநாத சிவாச்சாரியார் (லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்) சிவாகம சிரோமணி சிவஸ்ரீ பஞ்சநதீஸ்வர சிவாச்சாரியார் (சிவாகம ஆசிரியர் சிவாகம பாடசாலை முக்தீஸ்வரர் கோயில் திருவாரூர்) சிவாகம சிரோமணி சிவஸ்ரீ கை. சந்திரசேகர சிவாச்சாரியார் (ஜோதிட ஆசிரியர்) சிவாகம பாடசாலை சென்னை |

இவர்களின் போதக சாதக அனுசரணையுடன் கற்பகபதி தேவஸ்தான சிவாச்சாரியார்களும் மற்றும் பிரித்தானியாவில் வசிக்கும் சிவாச்சாரியார்களும் பிரித்தானிய ஆலய சிவாச்சாரியார்களும் கலந்து கும்பாபிஷேக கிரியைகளை ஆற்றுவார்கள்.

மங்கள இசைவேளை நாதஸ்வர வித்துவான்கள் பட்டங்களை இலண்டன் கோலாகலமாக பட்டங்களை இசைக்க நாதஸ்வர தவில் கச்சேரி கருவிகள்

அனைத்து அடியார்களும் கற்பக கணபதி கழலடி நாடி வழிபட்டு நற்பலன் பெற்று நலமுடன் வாழ அன்புடன் வேண்டுகிறோம்.
தொடர்ந்து மண்டல அபிஷேகம் நடைபெறும். உபயம் ஏற்றுச்செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
ஆலயத்திருப்பணிக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று

**OIL ANOINTMENT CEREMONY**
02.07.2014 Wednesday 12 noon to 03.07.2014 Thursday till 6.00pm
**MAHA KUMBHABISHEKAM**
(Consecration Ceremony)
**04.07.2014 Friday: From 9.45am - 10.45 am**

**எண்ணெய்க்காப்பு**
02.07.2014 புதன்கிழமை மதியம் 12 மணி முதல்
03.07.2014 வியாழக்கிழமை 6.00மணி வரை
**மஹா கும்பாபிஷேகம்**
04.07.2014 வெள்ளிக்கிழமை காலை 9.45 முதல் - 10.45 வரை

இங்ஙனம் ஆலய நிர்வாகம்

Chennai Spice
Restaurant and Banqueting

# Chennai Spice

**Restaurant & Banqueting Suite**

**213-217, Hertford Road, Edmonton, N9 7ER**



## Free Banqueting Hall

- Monday – Thursday - Except Bank Holidays
- Large Modern Banqueting Hall for Wedding, Wedding Reception, Birthday Party, and all other events.
- Unlimited Maincourse food & Drinks for the Party at reasonable price.



## Restaurant

- Open 7days a week
- Live Music on Every Fridays
- Live Sports in Big Screen
- New Menu with Appam, Kulal Puttu and Traditional Dishes
- Free Home Delivery upto 3 miles



## Catering

- Catering for Arangetrams, Birthday Parties, Wedding, Wedding Reception, and all other functions.
- On site Catering available on request



## Event management

- Excellent Management of your functions
- Different varities of food (Sri Lankan, South Indian/North Indian and Chinese)
- Varities of service ( Table service, Buffet style, Banana Leaf service etc)
- Decoration & DJ

**T: 020 8805 9944, 020 8805 8215 M: 07932 059 553**

**E-mail: info@chennaispice.com, www.chennaispice.com** Chennai Spice

**Lycamobile**
Call the world for less



## Special rates with UK plan

# Sri Lanka

# 3p /min

**Landline + Mobile**



## 500 Minutes + Unlimited SMS 1GB data

**Unlimited calls and texts from Lycamobile to Lycamobile**

Only **£10** /month
To buy: Text 11044 to 3535

Order your free SIM at **www.lycamobile.co.uk** or call 020 7132 0322

**Top-up your SIM online or where you see the following signs:**

Disponível em:

TESCO ASDA Sainsbury's WHSmith Carphone Warehouse Martin McColl

Lyca mobile
Call the world for less

Printed @ JR Print London Tel: 020 8503 6643

Design by: Amalan - 0744 012 2325